Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி ஆவணி 1957 ஆகஸ்ட் | இதழ் 8

தலைவர் பேருரை*

“ நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே ”

மெய்யன்பர்காள் ! சிவநேயச் செல்வர்காள் !

எல்லாருக்கும் என் அன்பார்ந்த வணக்கம். இந்தச் சித்தாந்த சபைக்கு நான் புதியவன் அல்ல. பல ஆண்டுகளாகப் பேச்சுக்கள் நிகழ்த்தியும் இரண்டு முறை தலைமை வகித்தும் இருக்கின்றேன். இன்று மூன்றும் தடவையாகத் தலைமை வகிக்கும் கடமையை எனக்குத் தந்திருக்கிறீர்கள். என்மீது வைத்திருக்கும் பேரன்பினாலே மீண்டும் என்னை அழைத்திருக்கிறீர்கள். அதற்கு எழுத்தறியாத அன்பாலும் பேச்சறியாத நெஞ்சாலும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தச் சித்தாந்த சபை தமிழ் நாட்டிலேயே மிகப் பழமையான சபை. இச்சபை செய்து வரும் திருத்தொண்டு அளவு கடந்தது. தமிழ் நாட்டில் உள்ள ஏனைய சபைகள் எல்லாம் இதற்குப்பின் தோன்றியவையே. அவைகள் எல்லாம் இதன் அரிய செயல்களை

* தூத்துக்குடி, சைவ சித்தாந்த சபையின் 73-வது ஆண்டுவிழாவில் திரு. C. M. இராமசந்திரன் செட்டியார் பி.ஏ.,பி.எல். அவர்கள் (தலைவர், தமிழ்க்கல்லூரி, பேரூர்) நிகழ்த்திய தலைமைப் பேருரை.

பின்பற்றுபவையே ஆகும். இதற்குப்பின் தோன்றிய பல சபைகள் தொடக்கத்திலே ஊக்கம்கொண்டு பணிசெய்து நாளாவட்டத்தில் மறைந்தும் போயின. அவைகள் நாய்க் குடையின் வாழ்க்கையை ஒத்தனவாயின. ஆனால், இந்தச் சபையோ சிறிதேனும் ஊக்கம் குன்றாமல் நாளுக்கு நாள் வளர்ந்து நாட்டிற்கும், சமயத்திற்கும், மொழிக்கும் சிறந்த தொண்டு புரிந்துகொண்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் இதனை நன்கு நடத்திவரும் சைவப் பெரியார் களின் குன்றாத ஊக்கமேயாகும். சிறப்பாகச் சித்தாந்தப் பேராசிரியர், சிவத்திரு. சிவகுருநாத பிள்ளையவர்கள் தம் வாழ்நாள் முழுமையுமே இச்சபைக்கென்று அர்ப்பணம் செய்து தற்போது எம்பெருமான் திருவடியில் கலந்து கொண்டு தம் இடையறா ஆசியை வான் மூலம் மழைத் துளிகள்போல் பொழிந்துகொண்டு வீற்றிருக்கின்றனர். அன்னாருடைய ஆசியே இச்சபை மேன்மேலும் வளரு வதற்கு ஊற்றம் தந்துகொண்டிருக்கிறது. மற்றும், செயற்குழுவிற்குப் பல ஆண்டுகள் தலைமைவகித்துப் பொரு ளாலும் கருத்தாலும் நடாத்தி வந்த புகழ்பெற்ற சி வ. அவர்கள், ஆசிரியர் அவர்கள் போலவே திருவடி நிழல் அடைந்தும் அங்கிருந்து ஆசி செலுத்தி வருகின்றார். தற்போது, அவர் திருக் குமாரனார் அவர் நல் ஊழியத் தையே பின்பற்றி இச்சபையை நடத்திவருகின்றார். அவ ருடைய பேராதரவினால் இச்சபையானது தன் கடமை யைச் சிறந்த வகையில் செய்துகொண்டு வருகிறது. இவர் களேயன்றி இன்னும் கணக்கற்ற திருத்தொண்டர்கள் இச்சபையைச் சீராக வளர்த்துவரும் பணியில் ஈடுபட்டிருக் கின்றார்கள். சென்ற 72 ஆண்டுகளாக மகாநாடுகள் கூட்டி அரிய பெரிய அறிஞர்களைத் தருவித்தும் சிறந்த சொற் பொழிவுகளை நிகழ்த்துவித்தும் சைவ சித்தாந்தத்தைப் பெருக்கி வருகின்றார்கள். மேலும், பல அரிய நூல்களை இயற்றி இலவசமாகத் தந்தும் இருக்கின்றார்கள். பள்ளிச் சிறுவர்கட்கு எளிதான சமயப் பாடங்களைக் கற்பித்து அன்னார்களைச் சைவ மக்களாக்கி வருகின்றார்கள். இத்தகைய சிறந்த செய்கைகளினால் தூத்துக்குடி என்ற பெயர் கேட்ட அளவிலேயே சைவத்திற்கு உறைவிடம் என்ற எண்ணம் எவர்க்கும் தோன்றுவது ஒரு வியப்பு அல்ல. ஆகவே,

இப்படிப்பட்ட சபையில் பங்கெடுத்துக்கொள்வதென்றால் மகிழ்ச்சிதரும் ஒரு செயல் என்று யான் எண்ணுகிறேன்.

நமது நாட்டின் தற்கால நிலை: தற்கால உலகப் போக்கை நாம் அறிவோம். மக்கள் பெருமையடையப் பொருளைச் சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அந்த வகையில் இயற்கைச் சக்திகளை நன்கு கணித்துச் செயற்கைக் கருவிகளை உண்டுபண்ணி அவைகளைக்கொண்டு பிறரை அச்சுறுத்தியும் அடக்கி ஆளவும் எண்ணுகிறார்கள். இதுதான் தற்காலக் கல்வியின் பயன் என்று அறியவேண்டும். தாங்கள் வலியவர்கள் என்று எடுத்துக்காட்டிப் பிறரைப் பயமுறுத்துவதனாலேயே மேன்மையடைய முடியும் என்ற கருத்தே உலகில் ஓங்கி நிற்கின்றது. இது அமைதிக்கு ஏற்ற முறையா என்று சிந்திக்க வேண்டும். பண்புடைய ஆசிரியர்கள், சிறப்பாகத் திருவள்ளுவனார் எடுத்துரைத்த நோக்கத்திற்கு முழுதும் மாறாக இது இருக்கின்றது. கடவுட் கொள்கை மறுக்கப் பட்டு வருகின்றது. மனிதனுடைய அறிவே எப்படிப்பட்ட செயலையும் செய்ய முடியும் என்பது தற்போதைய எண்ணப்போக்கு. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்ற பட்டினத்தடிகள் கொள்கை வேரூன்றிக் கிடக்கின்றது. அக்கொள்கை சமய நிலையில் உரைக்கப் பட்டது என்றறியாமல் பொருள் பெறும் வழிகளில் பயன் படுத்துகின்றனர். 'கல்வியால் ஆன பயன் வாலறிவன் நற்றாள் தொழல்' என்ற வள்ளுவனார் கொள்கை மண்ணுள் புதைக்கப்பட்டது. நம் நாட்டுப் பழங்கதைகளில் இப்படிப்பட்ட நாட்டின் நிலைமை அவுணர்களும் அரக்கர் களும் மேம்பாட்டில் நிலைத்திருந்தபோது ஏற்பட்டதாகும். ஆனால் அன்னார்கள் அடைந்த கதி என்னவாயிற்றென்று அறிவோம். விஞ்ஞான ஆற்றலைக்கொண்டு காலத்தையும், இடத்தையும், கடினத்தையும் வெல்லலாம் என்ற நோக்கம் இறுதியில் பயனற்று ஆவியாய்ப் புகைந்து மறையும் என்று அக்கதைகள் நிரூபித்தன. அப்படி இருந்தும் இக்காலத்தில் உலக விஞ்ஞானத்தால் தழுவப்பட்ட செல்வ நாட்டார்கள் அப்பண்டைய நோக்கத்தையே முற்கொண்டு வலிமை பெற முயலுகிறார்கள். இதன் முடிவு எதிர்பாராத வகையில் தோல்விதான் அடையும். செல்வனைக் கண்டால்

வறியவனுக்கு அழுக்காறு ஏற்படுவது இயல்பு. தனி மனிதனுக்கே யன்றித் தொகுப்பு நாடுகளிலும்கூட இம் முடிவேதான் தோன்றும். மேல் நாடுகளில் தற்போது தோன்றி இருக்கும் பூசல்களுக்கு யாது காரணம் என்று நாம் செவ்வனே அறிவோம். அமைதியை நிலை நிறுத்த வல்லமை வேண்டும் என்ற கொள்கை நிலைக்காது. அமைதியை நிறுத்தப் பயங்கரத்தால் முடியாது ; அன்பால் தான் முடியும் என்று சமயப் பெரியார்கள் கூறியுள் ளார்கள். அப்பெரியார்கள் தந்த சமயத்தைப் பின்பற்றும் மேற்கு நாட்டார்கள் பெயரளவில் பின்பற்றுகிறார்களே தவிர உண்மையில் அல்ல. நமது நாட்டவரும் மேல் நாட் டார்களைப் பின்பற்றி நாட்டின் ஆட்சி சமயப்பற்றில்லாதது என்று கூறியும், எழுதியும் வருகின்றார்கள். உண்மையில் சமயத்தில் தற்போது அரசியலார் புகுந்து அதனைத் துன் புறுத்தும் செயல்களைப் போல, முன்னர் நாம் அடிமை களாக இருந்தபோதும் நடைபெறவில்லை. ஊன்றிப் பார்த் தால் இதன் உண்மை நன்கு தெரியும்.

சமயப்பற்றின்மை எங்கே? சட்டத்தில் சமயப்பற் றில்லாத அரசியலை நடத்துகிறோம் என்று வாய்ப் பறை யடிக்கும் தற்கால அரசியல் பெரியார்கள், சென்னை முத லிய சில பிராந்தியங்களில் இந்துக்களுடைய சமய இடங்களை மட்டும் தங்கள் ஆளுகைக்குள் வைத்துக் கொண்டு, அவைகளிலிருந்து வருவாய்களைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு வகையில் நன்மையும் பல வகையில் தீமையும் விளைக்கின் றது. சமயப்பற்று இல்லை என்றால் எல்லா சமய நிலையங் களையும் சமமாகப் பாவித்துத் தங்கள் பொறுப்பில் வருவாய்களை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்துசமய நிலை யங்களுக்கு ஆதரவு தரும் நிலையில் பொறுப்பை எடுத்துக் கொண்டால் இந்து சமயிகள் மட்டும் தாங்களாகவே ஆட்சி புரிந்துகொள்ள இயலாத குழவிப் பருவத்தினரா? (மைனர்) ஏனைய சமயிகள் தாங்களாகவே ஆட்சி செய்து கொள்ளும் பெருமை பெற்றிருக்கிறார்களா ? ஆட்சிபுரிய ஆற்றலற்ற அடிமையினர் எனப் பட்டம் பெறுவதில் ஒரு விதத்தில் எளிமை ஏற்பட்ட போதிலும் அதைவிட இழி வான நிலை பண்பாடுள்ள மக்களுக்கு வேறு வேண்டிய

இல்லை. ஆப்பிரிக்காக் கண்டத்துக் காட்டுமிராண்டிகளைப் போல் இந்து மக்களை நடத்துவது சரியா? இனி, இந்த ஆட்சியில் ஏற்படும் தீமைகளில் சில கூறுவோம்.

இந்து சமய நிலையங்களை ஏற்படுத்தின அறத்தாபனர்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதில்லை. சமயச் செயல்களுக்கென ஒதுக்கி வைத்த பணங்கள் மிகுதியானால் சமயச் சார்பற்ற வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அவ்வேலைகள் சிறப்புற்றவைகளாக இருந்த போதிலும் பண்டைய நோக்கத்திற்கு எதிரானவைகள். மேலும், பிற சமயிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. எத்தனை தாராள சிந்தனை இருந்தபோதிலும் அச்செய்கை முறையாகாது., பிற சமயிகளுடைய உபரிப் பொருள்களை நமது சமயத்திற்குப் பயன்படுத்தவேண்டுமென்றால் ஒத்துக் கொள்வார்களா? கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் நிலையில் இவ்வரசியல் நோக்கம் முடிவாகின்றது.

இந்து நிலையங்களின் வருவாய்கள் ஒரே அளவு கொண்டதாக இல்லை. சில நிலையங்கள் உபரி வருமானமும் சில நிலையங்கள் போதாத வருவாயும்கொண்டிருக்கின்றன. ஒன்றிலிருந்து ஒன்றுக்கு உதவி செய்யும் முறையே சரியானது. கணக்கற்ற கோயில்கள் பழுது பார்க்கப்படாமல் பாழ் அடையும் தருவாயில் இருக்கின்றன. அவைகளுக்கு வேண்டிய உதவி புரிவது சமயப் பகுதியாரின் கடமை. தற்போதுதான் இந்தக் கடமையை உணர்ந்து தற்போதைய கண்காணிப்பாளர் இதற்கு ஆதரவு அளித்து வருகின்றார். அது மெச்சத்தக்கதே. அந்த ஆதரவு மிகுதியும் போற்றப்படவேண்டும். கூடியவரையில் உலகீய செலவுகளுக்குப் பயன்படுத்துவதை நிறுத்தி சமய நிலையங்களை மேன்மைப்படுத்துவதில் முயற்சிப்பதே நன்று.

இந்து சமயத்தார்கள் வாயில்லாப் பூச்சிகள் என்று எண்ணி மத்திய அரசியலார்கள் பலவகைகளில் வேறு செலவுகளுக்கும் வேறு சமயிகளுக்கும் பயன்படுத்த முயல்வது சரியன்று. அண்மையிலே ஒன்றிரண்டு வெறுக்கத் தக்க செலவுகளும் செய்யப்பட்டன. இந்து சமயப்பெரியார்களின் அனுமதியின்றி இப்படிப்பட்ட செயல்கள்செய்வது சரியல்ல. இதுமட்டுமோ? சைவ வைணவச் சமய குரவர்

களின் திருநாள்களைப் பாராட்டுதல் நமது கடமை. அப்படி இருக்க, பரோபகாரச் சிந்தனை மிகுதியாக வலுக்கப்பெற்ற அரசியலார்கள் புத்தருடைய திருநாள்களுக்கு மிகுந்த ஆதரவளிக்கிறார்கள். அதில் ஒரு பகுதியேனும் நமது குரவர்களின் திருநாட்களுக்கு அளித்தால் நன்றாக இருக்கும். அரசியல் தந்திரமாகப் புத்த சமய நாடுகளைத் திருப்திசெய்ய இவ்வாறு செய்கிறார்கள் போலும்.

இதைப்போல இன்னும் கணக்கற்ற செயல்கள் நடந்துவருகின்றன. அவைகள் நமது சமயங்களுக்கு எதிரிடையாக அமைகின்றன. அவைகளைக் கூடிய மட்டும் நிறுத்தி நமது சமயம் நல்ல நிலையில் இருக்கத்தக்க முறைகளைத் தேடிக்கொள்வதே நமது கடமையாய் இருக்க வேண்டும்.

நமது சமய நிலையங்களின் நோக்கங்கள் : நமது சமய நிலையங்கள் ஒரு காலத்தில் ஒருவரால் ஏற்பட்டவை அல்ல. பல ஆயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி முறையில் அவைகள் தோன்றிப் பெருகின. சமயங்களும் அவ்வாறே தோன்றின. நிலையங்களும் அதுபோலத்தான். ஆகவே, அவைகளின் நோக்கங்களும் அவைகளுக்கு ஏற்றபடி யமையும். சமய நிலையங்களில் சிறப்புற்றவை கோயில்கள். அடுத்த படியில் உள்ளவை மடாலயங்கள். அதற்கடுத்தபடி சமய சமுதாயங்கள். வேறு நாட்டுச் சமயங்களைப்போல அல்லாமல் நமது நாட்டுச் சமயங்கள் சோபான முறையில், அதாவது படிப்படியாக வளரும் முறையில், ஓங்கி அமைந்திருக்கின்றன. முதலில் கோயில்களை எடுத்துக்கொள்வோம். அவைகளின் உருவ வளர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் சோபான முறையில்தான் வளர்ந்தன. தனி மரத்தின் கீழ் வீற்றிருக்கும் திருவுருவமே பண்டைக் காலத்தில் தோன்றி இருக்க அதுவே வளர்ச்சி முறையில் செங்கல் தளியாகவும், கற்கோயிலாகவும், பெருங் கோயிலாகவும் வளர்ச்சியுற்றதல்லவா ? ஆன்மீகத் துறையிலும், வெறும் அன்பில் வளர்ந்த சமயக் கொள்கை சித்தாந்த சமயமாகப் பரிணமித்ததென்றால் அது தமிழ் நாட்டிற்கேற்ற ஒரு உயர்ந்த தத்துவம் அல்லவா ? கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களும் குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டவையேயாகும். தத்துவ அறிவைப் பின்பற்றியும் சரித்திர

நிகழ்ச்சிகளைப் பின் பற்றியும் அத் திருவிழாக்கள் தோன்றி இருக்கின்றன. கோயில் வரலாறுகளும் சடங்குகளின் போக்குகளும் திருவிழாக்களின் நோக்கங்களும் சிறந்த ஆராய்ச்சிக்கு ஏற்றவைகளாக இருக்கின்றன. தென்னிந்தியக் கோயில்களின் ஆராய்ச்சியிலே தமிழ் மக்களின் பண்பாடு சிறந்து விளங்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஆராய்ச்சியை நமது கோயில் அறங்காப்பாளர்கள் சிறப்பாக எடுத்துக் கொண்டு பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும். இந்த வகையில் செய்யக்கூடிய முயற்சியானது பெரும் பயனைத்தரும்.

நமது ஆலயங்களைப் பற்றியும் திருவிழாக்களைப் பற்றியும் குறைகூறும் மேல் நாட்டார்களும் அரைகுறையாகப் படித்த நமது நாட்டு இளைஞர்களும் அவைகளின் உள்ளுறைகளை அறியாத வகையில் அந்நோக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள். தற்காலத்து அறங் காப்பாளர்களும் உள்ளுறைப் பொருளை யறியாமல் வெளி நாட்டங்களையே போற்றுகிறார்கள். பொருள் விளங்காத சடங்குகளால் யாருக்கு என்ன பயன்? பாமரமக்களை மகிழ்விக்கச்செய்யும் ஆடல் பாடல்களினால் அறிவு உலகம் சிரிக்குமேயன்றிப் போற்றுதல் செய்யாது. கோயிலினுடைய வருவாயிலிருந்து இந்த ஆடம்பரச் செலவுகளுக்குச் செய்யும் விரயங்களை நிறுத்திப் பண்பாடு விளங்கும் ஆன்மீக வேலைகளில் ஈடுபட்டால் நலமாக இருக்கும். அண்மையிலே ஒரு புகழ் பெற்ற பண்டைக் கோயில் விழாவிற்குச் சென்றிருந்தேன். அங்கு நடந்த இரண்டு நாள் கூட்டத்திற்கும் மக்கள்செய்த செலவிற்கும் அளவில்லை. இரவும் பகலுமாக இரண்டு நாளும் பொது மக்களின் வீண் விரயங்கள் எழுத்தில் அடங்கா. இதனை முன்னிட்டு வியாபாரிகள் செய்த பண்டமாற்றுதல்களும் வேடிக்கை வினைகளும் மக்களைக் கவர்ந்தனவேயன்றி விழாவின் தத்துவத்தை எவரும் உணரவே இல்லை. பொதுமக்கள் பெற்றதெல்லாம் பொழுது போக்கும் ஆடம்பரக் காட்சியும் உடல் நலமின்மையும் அன்றி நலம் தரத்தக்கதொன்றும் இல்லை. காப்பாளர்கள் பொருள் கொடுத்து ஏற்படுத்திய சமயச் சொற்பெருக்குகளுக்குச் செவி கொடுப்பாரில்லை. அமைதியின்மையால் ஏற்பட்ட குழப்பத்திற்கு அளவில்லை. மேளமும் இசையும்

கவர்ந்த கவர்ச்சி சமயப் பேச்சுகளுக்குக் கிடைக்கவில்லை. இவ்வாறு திருவிழாக்களின் போக்கு செல்லுமானால் இவைகளால் யாருக்கு என்ன பயன் ?

ஆனால், கிறிஸ்தவர் வழிபாடோ இசுலாமியர் தொழுகையோ காட்டும் அமைதி நம் சமயிகளுக்கு வேண்டியதில்லையா ? ஆலயங்களில் திருவிழாக் காலங்களிலும் நாள் தோறும் நடைபெறும் ஆராதனைகளிலும் அமைதி என்பது சிறப்பாக இருக்க வேண்டும். பிறர் எளனம் செய்யும் படியான காட்டுமிராண்டித்தனம் கூடாது. அருமையான சொற்பெருக்குகளை நடாத்தும்போது நிம்மதி தோன்ற வேண்டும். இறைவனுக்கு வழிபாடு இயற்றும் போதும் அப்படியே. பழனிமலைமீது முருகக் கடவுளின் வழிபாட்டில் காணும் அமைதியின்மை ஒரு பழமொழிபோல் ஆகி விட்டது. அதுவும் தற்போது சீரடைந்து வருகின்றதென்றால், எல்லா ஆலயங்களிலும் ஏன் இது ஏற்படக்கூடாது ? மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் பழனி முருகன் சன்னிதியில் தற்போது அமைதி நிலவுகிறது. இதற்குக் காரணம் ஆட்சி முறையும் ஓதுவார் திருப்புகழிசையுமே யாகும்.

நமது கோயில்களில் மகத்தான மண்டபங்கள் ஏன் கட்டி வைத்தார்கள் ? சமயச் சொற்பொழிவுகளுக்காக அல்லவா ? சம்பந்தர்போல ஓதுவார்கள் அமைதியாக அமர்ந்து திருமுறைகளை ஓதிக்கொண்டு இருந்தால் குழந்தைகள் முதற்கொண்டு பாமர மக்களும், அறிஞர்களும் அமைதியுடன் கேட்கமாட்டார்களா ? சமயஞானம் பெறமாட்டார்களா ? பண்டைக் காலத்தில் மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டுக் கோயில்களில் அழகிய சிற்பங்களும் ஓவியங்களும் தீட்டி வைத்தார்கள். மற்றும் அவைகளில் திருமுறைப் பாக்களைச் செதுக்கி வைத்தார்கள். விமானங்களிலும், கோபுரங்களிலும் திருவுருவங்களை யமைத்து வைத்தார்கள். இடைக் காலத்தில் இவற்றின் பொருள் விளங்காமல் வெள்ளையும், மஞ்சளும், எண்ணெயும் பூசிவிடத் தொடங்கினார்கள். பண்டைய நோக்கம் முழுவதும் பாழாயிற்று. ஆனால், நல்ல வேளையாகத் தற்போது இவ்விழிந்த செயல்கள் நீக்கப்படுகின்றன ! கோயில்களில் திருப்பாடல்கள் எழுதுவதும் திருவுருவங்களைத் தூய்

மைப்படுத்துவதும் நிலைய விவரங்களை வெளிப்படுத்துவதும் கைக்கொண்டிருக்கிருர்கள். ஆனல் ஒன்று மட்டும் கவனிக்கவேண்டும். திரைப்பட உருவங்களையும் அரசியல் வாதிகளின் உருவங்களையும் தற்கால நாகரிக விளையாட்டு உருவங்களையும் கோபுரங்களில் ஏற்றுவது சரியா என்று சிறிது சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு ஆலயத்திலும் சமயச் சொற்பொழிவுக்கென்று ஒரு மண்டபத்தை ஒதுக்கி வைத்து அங்கு எவ்வித ஓசையுமில்லாமல் செய்து அறிஞர்களை நாடோறும் தற்கால முறைப்படி பேசச் செய்ய வேண்டும். இதில் செலவழிக்கும் ஒரு நூறு ரூபாய் மருந்து வேடிக்கைக்கும் கூத்துக்களுக்கும் செலவழிக்கும் ஆயிரம் ரூபாயைக் காட்டிலும் பதின்மடங்கு சிறந்ததென்று அறியவேண்டும்.

சமய நிலையங்களின் முக்கிய நோக்கம் மக்களுக்கு ஆன்மீக உணர்ச்சி தருவதேயாகும். அதனை நமது அறங்காப்பாளர்கள் முழுமையுமாக உணரவில்லை. நிலையங்களின் வருவாய்களை உயர்த்துவதே சிறந்த கொள்கை என்று எண்ணுகிருர்கள். அவ்வாறு உயர்த்துவதற்கு அவர்கள் செய்யும் முறையும் ஒழுங்கானது அல்ல என்று கூறலாம். கோயில்களைச் சுற்றிலும் அழகான பூங்காக்களையும் தடாகங்களையும் ஏற்படுத்தாமல் சாப்பாட்டுக் கடைகளையும் விளையாட்டுச் சாமான் கடைகளையும் வைக்க இடம்கொடுக்கிருர்கள். இந்தச் செயலினல் கோயிலுக்கு வருவாய் அதிகமாகலாம். ஆனல் அதனல் ஏற்படும் சச்சரவுகளும், அசுத்தங்களும், அமைதியின்மையும் அளவில்லை. புனிதமான தீர்த்தத்தைச் சுற்றிச் சாப்பாட்டுக் கடைகளை வைத்தால் அத்தீர்த்தநீரானது தூய்மையற்றுப் போகுமென்று அவர்கள் நினைப்பதில்லை. கோயில்களைச் சுற்றிப் பொரிகடலைக் கடைகள், பழம் கரும்புக் கடைகள் அசுத்தத்தைப் பெருக்கும் என்று எவருக்குத்தான் தெரியாது? போதாக்குறைக்குச் சிறுசுருட்டுக் கடைகளும் லாகிரிக் கடைகளும் அவைகளுக்கு ஒத்த ஒலி பெருக்குக் கடைகளும் ஏராளமாகிவிட்டன. அண்மையிலே ஒரு பெரும் திருவிழாவில் கோயிலின் வெளியில் மட்டுமல்லாமல் கோயிலுக்குஉள்ளே மண்டபங்களிலும் பிரகாரங்களிலும் கடைகள் வைக்க இடம் கொடுத்து விட்டார்கள். இந்தச் செயல்களெல்லாம்

பணப் பெருக்கை முன்னிட்டே செய்யப்பட்டன. இதனால் விளைந்த விளைவு என்ன? அருமையாகப் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய இசைவல்லார்களின் இசை முழுவதும் வீணாயிற்று. கூடியமட்டும் சச்சரவு ஒலிகளை அடக்கிப் பார்த்தும் கோயில் நிர்வாகிகளால் வெற்றி அடைய முடியவில்லை. சிறுவருவாய் எண்ணிச் செய்த இச்செயலினால் உண்மை வருவாய் ஆன அன்புப் பாடல்கள் பயனற்றுப் போயின. இதனை அறங்காப்பாளர்கள் நன்கு ஆராய வேண்டும்.

ஏனைய சமய நிலையங்கள்: சமய நிலையங்களில் கோயிலைத் தவிர மடாலயங்கள், சங்கங்கள் முதலிய பலவும் உண்டு. இவைகளில் மடாலயங்கள் பண்டைக்கால முதற் கொண்டே நாட்டிற்குச் சமயத்தைப் பற்றிய நன்மைகள் புரிந்து வந்தன. பெரும்பாலும் இல்லறத்தைத் துறந்த துறவிகளே மடாலயங்களை ஏற்படுத்தி அங்கே சமயத்தொண்டு செய்துவந்தார்கள். சைவத்தில் நான்கு சமய குரவர்களின் திருப்பெயரால் தோன்றிய மடங்களும், பின்னால் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மற்ற சைவ மடங்களும், வீர சைவப் பெருங் குரவர்களால் தோன்றிய மடங்களும் நாட்டில் சிறந்த திருத்தொண்டுகள் செய்து வந்தன. ஒவ்வொரு மடத்தைச் சுற்றிலும் மடத்தின் பணியாளர்கள் உணவு, வழிபாடு முதலியவைகட்கும் திருவிழாக்களுக்கும் பல நிபந்தங்கள் நிலமாகவும் பணமாகவும் கிடைத்தன. மடாலயங்களில் திருத்தொண்டு செய்துவந்த துறவிகள் நன்கு படித்தவர்கள். இரு மொழிகளையும் ஓதிச் சிறந்த நூல்களை இயற்றினார்கள். பிற நாட்டார்களால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நாட்களில் அத்துறவிகளே தமிழை வளர்த்தினார்கள். தமிழ் மட்டுமன்றிச் சைவத்தையும், வைணவத்தையும் பொது மக்களிடையிற் பரப்பி வந்தவர்களும் அவர்களே. மடாதிபதிகள் தன்னலம் கருதாத பெரியார்கள். 16 முதல் 18 வரை மூன்று நூற்றாண்டுகள் மடாதிபதிகள் செய்த திருத்தொண்டு அளவிட முடியாது. அன்னார்கள் மக்களிடைச் சென்று அவர்களை நல்ல ஒழுக்கத்தில் நிறுத்தினார்கள். அவர்கள் காலத்தில் தமிழ் இலக்கியம் சிறந்து சிறு பிரபந்தங்கள் பெருகின. அவர்களால் தான் வடமொழி நூல்கள் பல தமிழுக்கு வந்தன. மேலும் உரை

நடை நூல்கள் அவர்கள் காலத்தில்தான் தோன்றிப் பெருகின. ஆகவே, பொதுமக்களும், குறுநில மன்னர்களும், அவர்களுக்கு வேண்டிய அளவு உதவி புரிந்தார்கள். தமிழ் நாட்டில் மடாலயங்கள் சிறந்த சமய நிலையங்களாகி எவராலும் போற்றக்கூடிய நிலைக்கு வந்துவிட்டன. அவர்கள் சிறு கோயில்களைப் பழுது பார்த்துப் பெரிதும் ஆக்கினார்கள். வெள்ளையர்கள் நம் நாட்டிற்கு வந்த காலத்தில் கோயில்களின் ஆட்சிகளைப் பராமரிக்கத் திருமடத் தலைவர்களையே நியமித்தார்கள். இந்த வகையில் தென்னாட்டுக் கோயில்களில் பெருங் கோயில்கள் மடாலயங்களின் ஆளுகைக்குள் வந்துவிட்டன. அப்படிப்பட்ட மடாலயங்கள் திருவாவடுதுறை, தருமபுரம், வேளுக்குறிச்சி முதலியவைகள்.

வைணவ சமயத்திலும் துவைத, அத்வைத சமயங்களிலும் சமயகுரவர்கள் மடாலயங்களைத் தோற்றுவித்து அவைகளில் சமயப்பணியைப் பெருக்கிவந்தார்கள். சைவத்தைப்போலவே வைணவத்தில் அகோபிலம், வானமாமலை, திருக்குறுங்குடி முதலிய மடாலயங்கள் தங்கள் மடங்களையேயன்றிப் பல கோயில்களையும் பராமரித்து வந்தார்கள். அவர்களே வைணவ தத்துவ நூல்களைத் தமிழில் எழுதியும் மொழிபெயர்த்தும் வந்தார்கள். பல சிறு பிரபந்தங்களையும் எழுதி வைத்தார்கள்.

இனி, துவைத சமயத்திலும் அதே முறை காண்கின்றோம். கருநாடக நாடுகளில் அவர்களுடைய சமயப் பணி மிகச் சிறந்து விளங்கியது. 13 ஆம் நூற்றாண்டு முதல் உடுப்பிக்குச் சுற்றிலும் எட்டு மடங்கள் தோன்றித் துவைத சமயத்துத் தத்துவங்களைப் பெருக்கின. அவர்கள் கன்னட மொழியையும், வடமொழியையும் பெரும்பாலும் ஆதரித்தார்கள். இனி அத்வைத மடங்களோ தென்னாட்டில் மட்டுமின்றி வடநாட்டிலும் கூட அரிய பணிகளைச் செய்தன. அவர்கள் சிறப்பாகத் தமிழை வளர்த்தாவிடினும் வடமொழியை மிகப் புகழ்பெற வளர்த்தினார்கள். அருமையான தத்துவார்த்தங்களை உலகினுக்கு அளித்தவர்களில் அத்வைதப் பெரியோர்களே சிறந்தவர்கள். மேற்கு நாட்டவர்களில் இந்தியத் தத்துவ ஞானம் என்றால் அத்வைதி

கள் தோற்றி வைத்த வேதாந்த ஞானமேயாகும். வேறு நாட்டார்களுக்குப் பாரததேசம் அடிமையான பிறகு அநேக நூற்றுண்டுகள்வரை வடமொழியைப் பாதுகாத்த அறிஞர்கள் அத்வைத மடாலயத்தார்களே. (தொடரும்)

சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளை

எஸ். சுப்பிரமணியம், மாலங்தெணி, புலோலி

இவர் இற்றைக்கு 97 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப் பாணத்து மேலைப்புலோலியில் உள்ள வேளாள குலத்திலே நாகப்பபிள்ளை என்பவருக்கு மகனாகப் பிறந்தார். சிறு வயது முதலே அதிதீவிர புத்தியும் அதிஞாபக சக்தியும் வாய்ந்தவராகக் காணப்பட்டார். அவ்வூரிலுள்ள வித்தியா சாலையில் படித்து வரும்பொழுது வறுமை காரணமாக ஆறுவது வகுப்புடன் முடித்துக்கொண்டு சிதம்பரப் பிள்ளை நொத்தாரிசிடம் இலேகராகக் கடமை பூண்டிருந்தார். அவரிடம் சிலகாலம் இருந்தபின் சென்னைக்குச் சென்றார்.

சென்னையில் பல அறிஞர்களிடம் கல்வி கற்றுத் தருக்கம், சித்தாந்தம், இலக்கணம், இலக்கியம் முதலாம் துறைகளில் நிபுணராக விளங்கிப் பல சபைகளிலும் பேசத் தொடங்கினர். இவ்வாறாக அரச சபைகளிலும் பேசிய காரணத்தால் இவரின் ஆற்றல் எல்லோருக்கும் தெரிய நேர்ந்தது. இதனால் அயலூரவர்களும் கதிரைவேற் பிள்ளையவர்களை அழைப்பித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தனர். இவரது பேசுந்திறன் தனித்தன்மை வாய்ந்தது. அத்தோடு பேச்சுக்கு உகந்த அழகான இனிய குரலும் அமைந்திருந்தது. பலமணி நேரம் தொடர்ந்து பேசும் ஆற்றலுமுடையவர். தருக்கிப்பதில் ஒப்பில்லாதவராக விளங்கினர். எந்த அறிஞராயினும் இவர் முன் எதிர்ப்பட்டு ஒரு பொருளைப்பற்றி வினவினாலும், விசாரித்தாலும், சரியானதை அவர்கள் திருப்தி அடையும்படி விளக்கமாகக் கூறுவார். இவருடன் விவாதித்தவர் எவரும் வெற்றி யடைந்ததில்லை. தொல்காப்பியமும், குறளும் வல்லவர்.

கதிரைவேற் பிள்ளையவர்கள் மொழித்துறையில் பெரிதும் ஈடுபட்டார். இவர் இயற்றிய தமிழ்ப் பேரகராதியே மற்ற அகராதிகளுக்கு வழிகாட்டியாய் இருந்தது. எம்மதத்தவர்களும் சம்மதத்துடன் போற்றிப் புகழக்கூடியதாய் இவர் மொழித்துறை ஈடுபாடுகள் அமைந்திருந்தன. பிள்ளையவர்களின் நைடத உரை, சைவபூஷண சந்திரிகை முதலாம் நூல்களைத் தமிழகம் என்றும் மறக்கமுடியாது. கதிரைவேற் பிள்ளையவர்கள் இயற்றிய நூல்கள் கூர்மபுராண விருத்தியுரை, பட்டினத்துப் பிள்ளையார் புராண உரை, திருஞான சம்பந்த நாயனர் வசனம், புத்தமத கண்டனம், சென்னைக் கந்தர் நவமணிமாலை முதலாக மற்றும் பலவாம்.

ஆறுமுக நாவலரது காலத்தில் வலியிழந்த மாயாவாதம் இவர் காலத்திலும் • துன்பம் கொடுத்தது. கதிரைவேற் பிள்ளை அவர்கள் இதைக் களையும் வேலையில் ஈடுபட்டார். முற்றுகவும் களைந்தார். ஒருமுறை மாயா வாதிகள் சூழ்ந்த கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது பல கேள்விகள் எழுந்தன. இவைகளுக்கு எல்லாம் பதிலிறுத்து அவர்களைக் குறுக்குக் கேள்விகளால் திணறவைத்தார். இவரை "மாய வாத துவம்சகோளரி" என்ற சிறந்த பெயரால் சபையோர் அழைத்தனர். இவரின் திறமையை அறிந்த ஆரணி அரசர் பிள்ளையவர்களைச் சமஸ்தான வித்துவானுக்கி "அத்துவித சித்தாந்த மதோத்தாரணர்" என்ற பட்டமும் சூட்டிக் கௌரவித்தனர்.

பிள்ளையவர்கள் அட்டாவதானம், தசாவதானம், சதாவதானம் முதலியன செய்வதிலும் நிபுணர். இதனுல் இவரை "சதாவதானி" என்றும் அழைத்தனர். தமிழுக்கும் சைவத்திற்கும் தமது குறுகிய வாழ்நாளில் அளப்பரிய தொண்டு செய்த கதிரைவேற் பிள்ளையவர்கள் 1907-ஆம் ஆண்டு பங்குனி மாதம் நீலகிரியில் ஈசன் நிழலையடைந்தார். இவரின் பிரிவு குறித்துத் திரு. வி. க. அவர்கள் தம் பாடல் மூலம் தம் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.

> "பன்னு பராபவத்துப் பங்குனிப் பதின்மூன்றில்
> மன்னுமுதற் பக்கஞ்சேர் மாமகத்தில் மின்னு
> கதிரைவேலன் ருதை கான்மலர்க் கீழ்ச்
> சேர்ந்தான் கதிரைவேல் நாவலவன் காண்"

" சங்கரனைப் போற்றிநிதஞ் சாக்கியரைக் காய்ந்து
மன்னர் சங்கந்தனை நண்ணிச்சீரர் மகத்தி
லங்கயிலைப் புக்க கதிரைவேற் புண்ணியனைப்
புன்னெஞ்சே யிக்கால வாசகனென் றேத்து "

அன்னாரின் 50-ம் நினைவு தினம் 11—4—57 ஆகும். தமிழர்களாகிய நாம் விழாவெடுத்து அவர் புகழ் பாடுவோமாக.

திருச்சேய்ஞலூர்

சு. சுவாமிநாத தேசிகர், சுந்தரப்பெருமாள் கோயில்

" நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே "

சிவமணம் கமழும் செந்தமிழ் நாட்டிலே சிவபெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள் பல இருப்பினும் அவற்றிற்கெல்லாம் தலைசிறந்து சிறப்புற்று விளங்கும் தலம் இத் திருச்சேய்ஞலூரே யாகும்.

இருப்பிடம்: தென்னிந்திய இருப்புப் பாதையில் தஞ்சை — மாயூரத்திற்கு இடையில் உள்ள கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து (கும்பகோணம் காவிரி யாற்றின் பழைய பாலம் கடந்து) வடகிழக்கே ஒன்பதரை ($9\frac{1}{2}$) மைல் தூரத்தில் உள்ள திருஆப்பாடியை அடைந்து அதனின்று தெற்கே அரை மைல் ($\frac{1}{2}$) தூரத்தில் இப்பதியை அடையலாம்.

வரலாறு: சேய் (குமாரக் கடவுள்) தாம் உறைதற்கு நல்ல ஊர் என்று உவந்தமை கண்டு, தேவர்கள் இதனை சேய்—நல்லூர் (சேய்ஞலூர்) என்றனர்.

முருகப்பெருமான் தாரகாசூரனைச் சங்கரித்துக் கிரவுஞ்ச மாலையைப் பிளந்துகொண்டு வரும்வழியில் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கிப் படைக்கலம்

பெற்றுச் சென்றதாகக் கூறப்படுகிறது இவ்வாலயம். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளால் பாடல் பெற்றதாக விளங்குகிறது. சண்டேசுர நாயனர் அவதரித்ததும் இத் தலத்திலேதான். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்து இத்தலம் வரும் சமயம், சண்டேசுர நாயனர் அவதரித்த தலம் என்று தெரிந்ததும் முத்துச் சிவிகையினின்றும் இறங்கி நடந்து சென்று தரிசித்துச் சென்றார்.

சண்டீசர் வரலாறு: இத் திருச்சேய்ஞலூர் என்னும் பதியில் எச்சதத்தன் என்னும் பிராமணருக்கு விசார சருமன் என்ற ஒரு ஆண் குழந்தை இருந்தது. அக்குழந்தை தனது ஏழாவது வயதில் இவ்வூர்ப் பசுக்களை எல்லாம் அருகில் வடபால் உள்ள மண்ணி நதிக்கரைக்கு ஓட்டிச்சென்று நீராடி அத்திமரத்தடியில் மணலினல் சிவலிங்கம் அமைத்து எல்லாப் பசுவின் பாலையும் கறந்து மணலாலான அச்சிவ லிங்கத்திற்கு அபிஷேகம் செய்து பூசை செய்வது வழக்கம். இதனை உணர்ந்த இவரது தந்தையார் இவ்வாறு செய்வதைத் தடுத்தார். கேளாது மீண்டும் பூசை செய்வதைப் பார்த்த தந்தையார் அபிஷேகத்திற்கென வைத்திருந்த பாற் குடங்களைக் காலினல் உதைத்துக் கவிழ்த்தார்.

இதைக் கண்டவுடன் மனது தாளாத விசாரசருமர் (சண்டீசர்) அருகில் உள்ள கோலை எடுத்து மழுவாகக் கொண்டு சிவ அபசாரம் செய்த தந்தையின் கால்களை வெட்ட, கோலும் உண்மையான மழுவாகித் தந்தையின் இரண்டு கால்களையும் துண்டித்துவிட்டது. தந்தை கீழ் வீழ்ந்தார். தந்தை கீழ் வீழ்ந்ததையும் பொருட்படுத்தாமல் மீண்டும் சிவசிந்தனையில் ஆழ்ந்து பூஜை செய்வதை அறிந்த சிவபெருமான் உமாதேவியாருடன் விருஷபத்தின்மேல் ஏறி விசார சருமருக்கு அரிய காட்சி தந்து "நீ தந்தையின் குற்றத்தை உணர்ந்து தண்டித்தமையால் இனி உனக்கு நாம் தந்தையானேம் என்று அன்போடு சொல்லிப் பின்னர் விசாரசருமர் வேண்டுகோளின்படி, சிவபெருமான் நாம் உண்ட அமுதும், உடுத்திய ஆடையும், சூடிய மாலையும் உனக்கே உரிமையாகும்படி சண்டீசன் என்னும் பதவியைத் தந்தோம்" எனக் கூறி ஆட்கொண்டருளினர். இத்திருச்சேய்ஞலூர் என்னும் பதிக்கு வடபால் அரை ($\frac{1}{2}$)

மைல் தூரத்தில் உள்ளது. ஆதலின் இத்திருச்சேய்ஞலூர் என்னும் பதியில் சண்டீசர் அவதரித்துத் திருஆப்பாடியில் "சண்டீசன்" என்னும் பதவியைப் பெற்ருர்.

ஆலய அமைப்பும் திருவுருவும் : இவ்வாலயத்திற்குப் பின்னுல் உள்ள தீர்த்தத்தில் சிபிச்சக்கரவர்த்தி நீராடிப் பிணியைத் தீர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. இவ் வாலயம் மிகவும் சிதைவுற்றும், இடிந்தும் மிக மோசமான நிலையில் இருக்கிறது ; சுவாமி சந்நிதானம் கிழக்கு பார்த்து அமைந்துளது. இவ்வாலயத்தில் உள்ள தேவியாரின் திரு உருவம் சுவாமி சந்நிதியில் பெயர்த்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் மூல சிவலிங்கப் பெருமானைத் தவிர மற்ற எல்லாப் பாகங்களும் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. இத்தலம் சண்டேசுர நாயஞர் அவதரித்த தலமாக இருந் தும், சண்டேசுரர் திருவுருவம் தென்முகக் கடவுளின் அருகில் பெயர்த்து வைக்கப்பட்டுள்ளது மிகவும் வருந்தத் தக்கதேயாம்.

திருப்பணி : இவ்வாறு இடிந்தும் பாழடைந்தும், சிதைவுற்றும் தரைமட்டமாகப் போகும் இவ்வாலயத்தை அருகாமையில் உள்ள பொருள் வளம்படைத்த புண்ணிய சீலர்களில் ஒருவரும், சைவ சமயத்தைப் பாதுகாப்பவர் களுமான திருப்பனந்தாள் காசி மடத்தில் இருபதாம் பட்டத்தில் இப்போது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இவ்வாலயத்தைத் திருப்பணி செய்ய முன்வருவார்கள் என்று எண்ணப்படுகிறது.

திருநாமங்கள் : சோழ நாடு; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. சுவாமி—சத்தியகிரீசுவரர் ; தேவி—சகி தேவியார் ; தீர்த்தம்—மண்ணிநதி.

"சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பாவித்
தோயடைந்த தண்வயல்சூழ் தோணிபுரத் தலைவன்
சாயடைந்த ஞானம்மல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுலகாள் பவரே.

திருச்சிற்றம்பலம்.

முருகன் நுண்மாண்

(மலர்-30; இதழ்-7; 224-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கினிக் கண்ணால் அரனீன்ற மைந்தனுக்குஅச்
சக்கிலே யென்பாருந் தவத்தரோ ? —வெண்பாமாலை

" *கந்தக் கடம்பமலர் மார்பா ! கதிர்வேற் படைக் காவலவா ?*
கண்களாறு மூன்றுடை யானே! கருணைக்கடலே! கதித்துணையே!
சந்தப் புலவர்க் கெளியானே ! தமியேற் கருளாய் ! * *
* * * * —கௌமார விஜயம்

" * * * *
* * *பரிதியாறு புரையு*
மணிமுடிச் சீரு மறுவிலா மதிய
மூவிரண் டன்ன முகங்களும் பொலிந்த
நீற்றெடு திலக நிலவிய நுதல்களும்
அலர்ந்து துவியா அறுமூ விழிகளும்
பத்தர் சொல்லன்றிப் பருகாப் பன்னிரு
செவிகளும் * * * "

—ஒருபாவொருபஃது

வடமொழியில் ஸ்கந்தபுராணமும், ஷண்முகத் தியான மும் இதனை வலியுறுத்தும்.

பிரத்தியங்கத்தின் சிறப்பு மலிந்த பாடல்கள் இரு மொழியினும் பல. அவற்றுள் வடமொழியில் ஒன்று வருமாறு :—

" *புஜே சௌரிய தைரியம், கரேதான தர்மம்,*
கடாக்ஷே திசாந்தி, ஷடாஸ்யேசு காஸ்யம்,
ஹிருதப்ஜேதயா யஸ்யதம் தேவமன்யம்,
குமாரன்ன ஜானே ! நஜானே !! நஜானே !!! "

(இ-ள்) தைரியமுள்ள தோளும், தானதர்மம் புரியும் கைகளும், சாந்தமுடைய (கண்ணோட்டம்) கடைக்கண்ணும், புன்முறுவலுடைய ஆறுமுகமும், தயையுடைய இருதயமும் உடைய குமாரக் கடவுள் போன்ற வடிவை மும்மையும் அறிந்தோமில்லை. இதனைத் தமிழர் ' நிலவுமிழும் புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய், இருண்மலத்துண் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்கு மலபாக

முறவே கடைக்கண்பாலித்து, விண்டபருவ மலர்பூத்தாங்கு அருள்பொழியுங் கண்மலரீராறும், பாரப்புயசைலம் பன்னிரண்டு, பறியாக் கருணைத் திருவுருவாய், அறனெலாமோருருக் கொண்டோய்' என்றதும் அது. (கந்தர் கலிவெண்பா)

மயிலையு மவன்றிருக் கைஅயிலையுமவன்
கடைக்கணியலையு நினைத்திருக்க-வாருமே" —திருவதுப்பு

சரங்கம் :

சாங்க வகுப்பில் ஆயுதங்கள் விவரிக்கப்படுகிறது. முருகனுக்குப் பன்னிரு கைக்கு ஆயுதங்கள் மாறுபட்டுக் கூறப்படுகிறது. அவை முன்னர் கூறிய மூர்த்தங்கட்கு ஏற்றதோர் அமைப்பென்க. இப்படைகளைப் பற்றித் திருமுருகாற்றுப்படை, திருச்செந்தூர் கலிவெண்பா கூறுவதை ஈண்டு நோக்கிக் கொள்க. இறைவன் வேல்தரும் சமயம் தந்த பிற ஆயுதங்களையும் ஓர்க.

"பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
பொருவிலா வுருவமுந்தொன்று
ணன்றுபெற்றுடைய வுருத்திரகணத்தோர்
நவிலருந்தோ மரங்கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு
மணிமலர்ப் பங்கயத்தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகு மறுமுகன் கரத்தில்" —கந்தபுராணம்

செந்தூர் அகவல்,

"பன்னிரு கமல பாணியு மவற்றின்
சூலமும் வேலுஞ் துரோணமுஞ் சரமும்
பாலமும் குலிசமும் பரிசையும் வாளும்
மாழியும் மழுவும் அபயமும் வரதமும்"

என்றும், ஷண்முகத் தியானம்,

"ஷட்வக்த்ரம் ஷிகிவாகனம் திரிநயனம் சித்ராம்பராலங்க்ருதம்
ஸக்திம் வஜ்ரமஸிம் த்ரிசூலமபயம் கேடம் தனுஸ் சக்ரகம்

பாசம் குக்குடமங்கு ஸஞ்சவரதம் தோபிர்க தானம் சதா
த்வயாயேத்ஸ்வித விந்திதம் சிவஸுதம் ஸ்கந்தம் சுராராதிதம்"

என்றும், ஜெயந்தன் சிறையில் கனவில் கண்ட காட்சியை, கந்தபுராணம்,

"வீறு கேதனம் வச்சிர மங்குசம் விசிக
மாறி லாதவே லபயமே வலமிடம் வரத
மேறு பங்கய மணிமழுத் தண்டுவில் விசைந்த
வாறி ரண்டுகை யறுமுகங் கொண்டு வேளடைந்தான்

என்றும், ஆயுத வகைகளில் மாறுபட்டுக் கூறுவதைச் சிந்திக்க. முருகன் கரத்துள்ள படைக் கலங்களெல்லாம் பல தெய்வத்தின் படைகளென்பது மறக்கற்பாலதன்று. ஆன்றோர் கடவுள் வணக்கம் கூறுங்கால் ஏனைய தெய்வங்களின் இயல்பை எடுத்துக்கொண்ட வடிவத்தில் காட்டி சமஷ்டிக் கடவுளென்று தெளிவு படுத்தப் பிற தெய்வப்படைகளை அமைத்துக்காட்டல் மரபு.

தணிகைப் புராண சிவசக்தி வணக்கம் இம்முறை பற்றி நிற்பது காண்க.

"சேரணி சிருக்கு மணிவடஞ் சங்கு
திகிரி சூலப்படை யிலைவேல்
போரணி பாச மங்குசம் கழைவில்
பூங்கணை வேறு வேறணியா
ஆரணன் மாயன் அரனிப முகத்தன்
அனங்க னென் றிவர்தொழிற் கெல்லாங்
காரண மாத றெளித்தருள் கொழிக்குங்
கன்னியை யுன்னியேத் தெடுப்பாம்."

மேலே காட்டிய ஆயுத வர்ணனையால் முருகனும், ஏனைய தெய்வத்தொழிலை ஆற்றும் திறனுடைய சமஷ்டிக் கடவுளென்பது வெள்ளிடைமலை.

முருகன் படைகளில் கோழிக்கொடியும் வேலுமே கொண்டாடப்படுவது. இதனை அருணகிரி,

"ஆடும்பரி வேலணி சேவ லெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

" பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவமலர்த் தோடையும் அக்குவடு பட்டொழியப்
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும் ;
திக்கது மதிக்கவரு குக்குட மும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிரு தோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக் கருள்கை மறவேனே "

என்று அநுபூதியினும் திருப்புகழினும் சிறப்பித்தலால் அவற்றை இனி விவரிப்பாம்.

சேவற்கொடி :

" வாக்காலு மிக்க மனத்தாலும் எக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையினை—நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி "

முருகனது வலது திருக்கரம் ஆறனுள் ஒன்றிலிருப்பது வீறுகேதனம். கேதனம், கொடி, துவசம், சத்தி, வானி, தோகை, பதாகை, விலோதனம், படங்கு முதலியன ஒரு பொருள் குறிக்கும் பலவரி சொற்கள். இக்கொடி ஆண்டலை, மயூரம், கோழியென மூவகைப்படும். ஆண்டலைக் கொடியென்பது தலைமட்டும் ஆணாக ஏனைய உறுப் பெல்லாம் பக்ஷியின் வடிவுடையது.

" காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
ஆறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியினுங் கந்துடை நிலையினும்
ஆண்டலைக் கோடி யோடு மண்ணி—"

இம் முருகாற்றுப்படை அடிகட்கு நச்சினார்க்கினியர், " மாண்தலை கொடியொடு மண்ணி "—மாட்சிமைப்பட்ட தலைமையினுடைய கோழிக்கொடியோடே பண்ணி, இனி 'ஆண்டலைக் கொடி' என்று பாடமாயின் பேய் முதலியன பலியை நுகராமல் தலை ஆண் மகன்றலையும், உடல் புள்ளின் வடிவுமாக எழுதிய கொடியென்க " என உரை பகர்ந்தமை

காண்க. பிற்றை நாளில் ஆண்டலையை வேறுபடுத்தாமல் 'கோழி, குருகு, காலாயுதம், குக்குடம், ஆண்டலைப்புள், வாரணமென நிகண்டில் கோழிக்கே கூறியதும் காண்க. இதனை பின்பற்றியே அருணகிரியும் 'மாண்டலையின் கொடியோ டெழுதரிதாம் வடிவோங்கிய பாங்கையும்' என்றருளினர். இக்கொடி குறிஞ்சிநில மக்கள் முருகனை வழிபடும் காலத்து வைத்துக்கொள்வதேயன்றி ஏனையோரால் பாராட்டப்படவில்லை.

விடையேறிய சிவனுக்கு விடைக்கொடி; சிங்கமிவர்ந்த உமைக்குச் சிம்மக்கொடி. கருடன் கொண்ட மாலுக்கு கருடக்கொடி. அன்னமிவர்ந்த பிரமனுக்கு அன்னக் கொடி. அதுபோன்று மயில்மீது வரும் முருகனுக்கு மயிற் கொடி என்ப. ஊர்தி எதுவோ அதுவே கொடி யென்ற மரபு கொண்டு ஷண்முகத் தியானம் 'மயூரதுவசரத சகிதம்' எனவும், திருப்புகழ் 'நினது திருவடி, சத்தி, மயிற் கொடி நினைவும்' எனவும் கூறுகிறது. இவை யாவற்றினும் கோழிக்கொடியே விவகரிக்கப்படுவது. கோழி இருபாலுக்கும் பொதுப் பெயர். இவற்றில் ஆணாகிய சேவலே படங்காயுள்ளது. சேவல் என்ற கிளவி பொதுவாகப் புள் வகுப்பின் ஆண்பாலைக் குறிக்கும். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் 48-வது சூத்திரம் கூறுதல் ஓர்க.

"சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவி மயிலலங் கடையே."

(இ-ள்) பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாஞ் சேவற் பெயர் உரித்து. அவற்றுள் மயிற்காயின் அஃதாகாது.

'காமர் சேவ லேமஞ் செப்ப' எனவும், 'வளைக்கட் சேவல் வாளாது மடியின்' எனவும், 'தொகு செந்நெற்றிக் கணங்கோள் சேவல்' எனவும், 'கானங் கோழிக் கவர் குரற்சேவல்' எனவும், 'உள்ளூர்க்குரீஇத் துள்ளு நடைச் சேவல்' எனவும் வரும். பிறவும் அன்ன. மாயிருந்தூவி மயில் என்றதனன் அவை தோகை யுடையவாகப் பெண்பால் போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற் றன்மை இலவென்பது கொள்க. எனவே செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படுமென்பது.' மற்றோரிடத்து 'குதிரை யுள்ளாணினைச் சேவலென்றதும் இக்காலத் தரிதாயிற்று.

அதுவுஞ் சிறகொடுசிவ ணுதாயினும் அதனைக் கடுவிசை பற்றிப் பறப்பதுபோலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து' என்முர் நச்சினுர்க்கினியர்.

இனி உலகை நோக்கின் மிகத் துக்க நிலையிலிருந்து துக்கத்திலிருப்பதாக அறியாதும், அதிக சுகத்திலிருப்பதாகத் தெரியாதும், இவற்றிற்கு இடையில் துக்கம் போகவும் சுகம் வருவதுமான நிலைகள் காண்கிறோம். அவை நிரலே இருட்டு, வெளிச்சம், இருட்டுப் போகவும் வெளிச்சம் வரவும் உள்ள நிலைகள். அவையே இரவு, பகல், வைகறை போல்வன. இவை தாம் முறையே உயிர் உடலோடு கூடாத நிலை, உடலற்ற நிலை, உடலிலுள்ள நிலையில் நிகழ்வன. மேற்காட்டியவற்றில் உயிர் உடலோடு கூடிய வைகறையன்ன நிலையில் நாமிருக்கிறோமென்பது பெற்றோம். இந்நிலையில் சேவலே துயிலெழுப்புகிறது. நாதமே விழிக்கச் செய்வது. அந்த நாத தத்துவமே கோழிக்கொடியாதலும் காண்க.

"மன்னுஞா னக்கதி ரெழுந்தொளி பரப்பமா
ருதுசச நாத முழுதும்
அலகில்பவத் துயிலறக் கூவு சேவலுடன்
அம்புலீ யாட வாவே!"

"கொக்கறு கோவென்றே உண்மையெடுத் தோதுங்
குக்குடமே! சிற்சுகமே! * * * *
பக்குவத்தைக் கண்டோருன் நாத நிலைகண்டே
பரவி நெஞ்சத் தடக்கியுனைப் பேரின்பஞ் சார்வார்."

நாதங்கொண்டு இறைவனை அறிய வேண்டும். நாதமே இறைவனென்றது முகமன். கடவுள் நாத அதீதன்—நாத தத்துவன் ஆவன். 'தேமேவு நாதமுநாதாந்த முடிவும்' என்றதுமது. சேவற்கொடி ஏனைய படைக்கலத்தினும் உயர்ந்திருப்பதின் காரணம் யாவும் நாதத்தில் ஒடுங்க அதுவும் இறைவனிடம் ஒடுங்குமென்பதே.

இனி வைகறையை நோக்கின் திருவாசகப் பள்ளியெழுச்சி 'கூவின பூங்குயில் கூவின கோழி குருகுகளியம்பின' என்று விடியலின் குறிகள் சில கூறுகிறது. அவர் அவ்வாறு அருளியதன் கருத்தென்னை? குயில் பஞ்சம

சுரத்தைக் காதுக் கினிமையாகக் கூவின. கோழி இறை வன் நாமத்தை கூவிற்று. குருகு (வலியான்) மிருத்தியஞ்ச மந்திரத்தை ஒலித்தது என்பது. கோழி கொக்கறுகோ என்றமை கொக்கு - (சூரனாகிய) மாமரத்தை, அறு - வீழ்த் திய, கோ - இறைவன் என முருகன் சரித்திரக் கதையை ஒப்பிட்டுக் காட்டுவர். அந்தக் கோழியின் கூற்று " இருளி லுள்ளவர்களைத் தன்னைப்போல் முருகன் பெயரை வைகறை யில் தினம் கூறினால் பிறவியிருள் நீங்கி ஞான பானு எழும் " என்றதைத் தெரிவிக்கின்றது.

" என்றனைக் கைப்பிடித் தாளுறு மிறைவன்
எழில்பெறு மலர்விழி மலர்ந்தெழு சமயம்
உன்றன துளவிருள் போக்குவன் நோக்கால்
ஒல்லையில் வருகென வெல்லினைக் கூவி
நின்றன இருங்கொடி யழைத்தறு முறையோ
நீடுறு மனைதொறுங் கூவின மிகவும்
இன்றெனை யாண்டுகொண் டருளிய போரூர்
இறைவனே ! பள்ளி யெழுந் தருளாயே !"

இக்கோழி குறித்துச் சரிதை பலவுண்டு "உற்ற விணில் ஊழியாம் போது மூலவா உடுக்கொறித்த கோழி" யெனத் தணிகைத் தசாங்கம் கூறுவதைக் கல்லாடம் நன்கு விவரிக் கிறது.

" போழ்படக் கிடந்த வொரு பங்கேழுந்து
மின்னன் மாண்ட கவிரலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை யாகித்
தேவர்மெய் பனிப்புற வான்மிடை யுடுத்திரள்
பொரியிற் கொறிப்பப் புரிந்த பொருணடித்
தாமரை பூத்த கைமருங் கமைத்தோய் " [26—31]

(உ - ரை) பிளவுபடக் கிடந்த வேறொரு கூறெழுந்து கொடிய பகையாகிய விளக்கம் பொருந்திய அழகு மாட்சி மைப்பட்ட முருக்கம்பூப் போன்ற செஞ்சூட்டுப் பொலிவு பெற்றதலையையுடைய கோழியாகித் தேவர்களுடம்பு நடுக்க மடைய, பொறிபோல ஆகாயத்தில் நெருங்கின நக்ஷத்திர கணங்களைக் கொறித்தலால் அது விரும்பின கருமத்தை (தேவர்க்கு இடுக்கணில்லாது) திருவுளம் பற்றித் தாமரை

மலரை நிகர்த்த திருக்கரத்தின் வலது பக்கத்தில் கொடியாக அமைத்துக் கொண்டோய்! வள்ளியைக் கவர்ந்து சென்ற முருகனை, குறவர் முதல்வனும் கொடுந் தொழிலெ யினரும் வளைத்துக்கொண்ட சமயம் கோழியின் ஆர்ப்பால் இறந் தனர். கந்தபுராணம்,

" என்றிவை குமரி செப்ப வெம்பிரா னருளாற் பாங்கர்
நின்றதோர் கொடிமாண் சேவ னிமிர்ந்தெழுந் தார்ப்புக் கொள்ளக்
குன்றவர் முதல்வன் றானுங் குமரும் தமரும் யாரும்
பொன்றின ராகி மாண்டு பொள்ளெனப் புவியில் வீழ்ந்தார் "

—தக்ஷ - வள்ளி - 184

'ஏதங் கருதினர் சென்மின்! என்றேயும் இதங் கருதும், போதஞ் சிறந்தவர் வம்மின் என்றேயும் புகல்வன போல், வாதஞ் செறியக் கொடியாடும்' (போரூர் அலங். 46) எனக் கொடியின் அலைப்பை அலங்கரிப்பர். மற்றும் இச் சேவலின் நிறத்தை வெண்மை யென்பர் பலர். செம்மை என்பர் சிலர்.

" தீநிறக் குடுமி வெண்சேவலை யுயர்த்து
வண்சிறை மயிற்பரி நடாத்துஞ்
சேவகப்பெருமானை வேதபுரி வருமிளஞ் சேயைப்
புரக்க வென்றே " —முத்து. பிள்-காப்பு-7

" செக்கச் சிவந்தகழற் செந்திலான் சீருட்கா
மிக்க கவுமார விசயத்தின்—றக்கதுணை
பாலுறழ் வெண்சேவலோடு பைங்கிளியும் பன்னிருகை
வேலுமயில் வாகன மே. —தண்டபாணி

" நாத மளிக்குங் குரற் புலியி
னகம் போற்றுண்டச் செஞ்சூட்டு
கலத்த பொறிச் சேஞ்சிறைச் சேவல்
நளினக் கரத்திற் பிடித்தோனே "

—போரூர்-பெருங்கழி நெடில்

" அமரர் குழுமிமலர் கொண்டங் கிறைத்தருள
அரிய துருத கோடி யெங்குந் தழைத்தருள
அரியோடயன் முனிவரண்டம் பிழைத்தருள—விடும்வேலா

வேல் :

“ ஆடும் பரிவேல் அணிசேவ லெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய் !

‘கொன்றையார்க்குப் பரசொடு கடியசூலம் பிநாகவில் படைகள் ; மாலுக்கு சிலை ஆழி சங்கு வாள் கதை படையைந்தாகும்’ ‘அறுமுகன் உறுபடைவேல்’ என்று நிகண்டு உரைத்தவிடத்து முருகனுக்கு ஒரே படை வரைந்த தனிப் பெரும் பெருமை ஆய்வாம். வேல்—செந்தமிழ் சொல். வேலின் வெல் குறுகி ஒலித்தலின் வெல்வது வேல்படையின் காரியமாகிய வெற்றியை வேல் அகத்தமைத்து ஒலித்தலால் இது நாயகப்படை போலும்! பரமன் வேல் அருளிய சமயத்தைக் கந்தம்,

“ ஆயதற் பின்னரேவின் மூதண்டத்தைம் பெரும் பூதமு மடுவ
தேய பல்லுயிரு மொருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினு மவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ்சிந்தி மன்னுயி ருண்ப தேப்படைக்கும்
நாயக மாவதோரு தனிச்சுடர் வேனல்கியே மதலைகைகொடுத்தான்”

—உற்ப. படையெழு. 38

என்றும், ‘அரன்பாற் படையரசை வாங்கினான்’ எனப் பாம்பன் சுவாமிகள் குமார சுவாமியமும், ‘குகன் கையில் தோற்றும் வெற்றி வேலாயுதத்திற்கு மேலாயுதமென்ன வேறில்லையே ; பன்னிருகைக் குகவேள் பூண்ட சத்திப் படைத் தெய்வமே’ எனத் தண்டபாணி சுவாமிகள் வேல் அலங்காரமும் ஒத்து ஒலித்தல் காண்க.

வேல் - அடியில் - சத்தி - எஃகம் - ஞாங்கர் - உடம்பிடி ஒருபொருள் தரும் பல சொற்கள். இவற்றுள் வேலும் எஃகமும் ஆயுதப் பொதுப் பெயராகும். பழம் - பொதுப் பெயராயினும் வழக்கில் சிறப்பாக வாழைப்பழத்தைக் குறித்தல் போல வேலென்ற ஆயுதப் பொதுப்பெயர் சிறப்பாக முருகன் படையை உணர்த்திற்று. இதனைப் புலவர் புராணத்தார் ‘வேலென்ற பேரொன்றை யாயுதமியாவும் விளங்கு பொதுப்பாலென்று அணியினும் உள்ளன’ எனச் சிறப்பித்தலும் சிந்திக்க உரியன. படைக்கலம் எப்பொழுதும் கூர்மையாயிருத்தல் வேண்டும். அக்கூர்மை இதனிடம்

சிறத்தலின் கூர்மை தெரிக்கும் அயில் வேலுக்குப் பெயரா யிற்று.

வெல்வது வேல் எனில் அக்கருவியேயோ வெல்வது? அல்ல. பின் யாது? வீரன் ஏறிய பரியா? கையிற் பிடித்த கலமா? நின்ற நிலமா? உடுத்த உடையா? அன்று; அன்று. பின் என்னை? இவையன்ன துணையுடையவன் பகைவர் தம் படைவலி கண்டு எங்ஙனம் வெல்வதென ஆய்ந்து முடிவுகட்டும் ஞானமாகும். ஞானம்—அறிவு வெல்லும். பிற துணைபுரியும். வேலுக்கு வடமொழி சத்தி. 'சத்திதான் தடையிலா ஞான' மென்பது சித்தி. இவற்றால் வேல், சத்தி, ஞானம், அறிவு ஒருபடித்தாதல் காண்க. இச்சக்தி விழைவு (இச்சை), செயல் (கிரியை), அறிவு (ஞானம்) என முத்திறப்படும். இவற்றில் அறிவே, ஞானமே, சத்தியாக, வேலாகச் செங்கையிலுள்ளது. இவ்விறையறிவு மாயையினை நிவர்த்தித்து மருளைப் போக்கித் தலைவனை அணுக அருளை அருளும். 'ஞானம் கொண்டே நணுகும் சிவபதம்' என்ற சிவப்பிரகாசர் செம்மொழியும் ஈண்டு நோக்குக.

இவ்வேல் அடியவரை அணுகுங்கால் அறக் கருணை வடிவும், அடியவர் பகைவரை அணுகுங்கால் மறக் கருணை வடிவும் ஏற்று மாயை அகற்றும் தன்மையது.

"ஏயென முருகன் ஞெட்ட விருதலை படைத்த ஞாங்க
ராயிர கோடி யென்னு மருக்கரிற் றிகழ்ந்து தோன்றித்
தீயழற் சிகழி கான்று சென்றிட வவுணன் கொண்ட
மாயிரு ளருவ முற்றும் வல்விரைந் தகன்ற தன்றே. 465

விடம் பிடித்தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்த்துமுன் னியற்றி யன்ன
வுடம்பிடித் தெய்வ மிவ்வா றுருகெழ செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுத றடிந்த தன்றே. 487

புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை யிடையி னேகி
யங்கியின் வடிவ நீங்கி யருளுருக் கொண்டு வான்றோய்
கங்கையிற் படிந்து மீண்டு கடவுள ரிடுக்கண் டீர்த்த
வெங்கடம் பெருமான் செங்கை யெய்தி வீற்றிருந்த தவ்வேல்."

—யுத்த - சூரபன்மன் வதை - 491

'திருவருட் சத்தி வடிவான வேற்படை, எண்ணில் வேதாகமங்கள் பகர்ந்த தெய்வத் துருவமெல்லாமதுதானு விளங்கிடு முண்மையதே' என்றது வேல் அலங்கார அலங் கரிப்பு. வேல் இறைவனது ஞானமாதலால் கச்சியப்பர் தெய்வப் படைக்கலமென மேல் காட்டிய 487 செய்யுளி லும் பிறவிடத்தும் சீர்தூக்கினர்.

"தேயுவி னெடுத்த வண்டத் திறங்களும் பிறங்கு ஞாலத்
தாயிர கோடி யண்டத் தங்கியு மொன்றிற் றென்ன
மீயுயர்க் தொழுகி யான்றோர் வெருவருந் தோற்றங் கொண்டு
நாயகன் றனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே."

—யுத்த - சூரபன்மன் - 481

வேல் பெறுதல் உணர்ச்சி பெறுதல் என்ற பொருளில் சீவக சிந்தாமணியில் வருதல் வருமாறு :—

"வீழ்ந்து மயில்போல் விசயை கிடந்தாளைத்
தாழ்ந்து பலதட்பந் தாஞ்செய்ய வேல்பெற்று
போழ்ந்தகன்ற கண்ணாள் புலம்பா வெழுந்திருப்பச்
சூழ்ந்துதொழு திறைஞ்சிச் சொன்னா ரவன்றிறமே"

—கனகமாலே - 254

விசயை, மயில்போல வீழ்ந்து கிடந்தவளைத் தாழ்ந்து பல குளிர்ச்சிகளைச் செய்ய உணர்ச்சி பெற்று அரசனுயிரைப் போழ்ந்தகன்ற கண்ணாளெழுந்திருப்ப, கைகுவித்து வணங் கிச் சூழ்ந்து அவன் பிழைத்தபடி கூறினரென்க என்றது புலவர் நச்சும் நச்சினார்க்கினியர் உரை.

முருகப்பெருமான் தனது இரு துணைவியரோடும் வேலுடனும் மயில்மீதே வதியுங்காலை அப்பெருமானைக் கடவுளாகவும், வேலினையும், இரு துணைவியரையும் முறையே அறிவு, விழைவு, செயலென்னும் மூவகை யாற் றல்களாகவும், மயிலினை அவன் திருவடிக் கீழிருந்து, தனது அறிவு, விழைவு, செயல்களின் வழி நிற்கப்பெற்றுப் பேரின் பம் நுகரும் வீடெய்திய உயிராகவுங் கருதுவதே சமய நூலார் கொள்கையாம். உயிரினது அறிவின்கண் இறைவ னது அருள் மன்னுதலின் அறிவுக்கறிவாய் நிற்கும் அவனது அறிவாற்றலைத் தமக்கு நினைவூட்டுவார் 'வேலு

மயிலுந் துணை' என்னும் சொற்றொடரை வாய்ப்பாடாக வழங்குவாராயினர். வேலென்பது இறைவனது அறிவையும் மயிலென்பது அவ்வறிவுக்குட்பட்ட உயிரினறிவையுங் குறிக்கும்' எனத் திருவாளர் கா. சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் 'வேலு மயிலும் துணை' எனும் சொல் அடுக்கை மக்கள் எழுதலும் கூறலும் துன்பில் பதம்பெற வழக்கில் அடிபட்டதையும் மிகப் பொருத்தமாக விளக்கியிருக்கிறார்.

'முத்தி நல்குங் குகவேல் செங்கை வேலை உன்னுதலே-மாலின்றிய மனத்தோராயிடினும் வயங்குகதிர் வேலின்றிக் கந்தனைப் பூசை செய்தாற் பயன் வீண்படுமே - வேற் படையைப் பேணிப் பரவும் பெரியார்க்குப் பின்னைப் பிறப்பில்லையே' என ஆமாத்தூரார் அருளியதின் திட்ப நுட்பம் யாது? ஞானம் - அறிவு இன்றி இறைவனை வழிபடுதல் உயிர் அற்ற உடலை ஒக்கும் என்பதே. மற்றும் அறிவு விளக்கமே பண்டை நாளில் மக்களுக்குத் தலையாய குறிக்கோளாக இருந்தமைக்கு வேல் பூசனையே சிறந்த எடுத்துக்காட்டாகும். 'ஞானந்தான் உருவாகிய நாயகன்' என்ற சந்தத்தின் கலிப்பும், 'பழநிப் பதியிற்றிரு, ஞானபூரண சத்தி தரித்தருள் பெருமாளே' என்ற அருணகிரி அருள்வாக்கும் சிந்திக்கும்போது முருகனுக்கும் வேலுக்கும் வேறுபாடின்மை காண்க. இது குறித்தே தமிழர் வேலை வணங்குவதைத் தமக்கு வேலையாகக் கொண்டனர் போலும்!

"தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை"

—சைவ எல்லப்பர் (செவ்வந்தி)

இனி அமயம் நேர்ந்துழி வேல் ஆற்றிய வேலையின் நுட்பத்தை நுவலும் கட்டுரை எழுத எண்ணி இம்மட்டோடு விரிவஞ்சி முடிப்பாம்.

"கோழிக் கொடியை நின்வேலை மயிலைக் குறித்தவரை
யூழிக் கனலும் அணுகாது."

—சிதம்பர சுவாமிகள்

திருமுருகாற்றுப்படை
சைவ சித்தாந்த விளக்கமே

வித்துவான் - செ. வேங்கடராம செட்டியார்

(மலர் - 30 ; இதழ் - 7 ; 216-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் குன்றுதோறும் முருகன் வேலன்மேல் ஆவேசித்து ஆடிய ஆடலை விளக்கிய புலவர், நானிலத்துள் எஞ்சியுள்ள நிலங்களிலும் அவனிருத்தலை விளக்கினர் இங்கு. காட்டில் இருப்பான் என்பதால் முல்லை நிலத்தும், காவும் துருத்தியும் யாறுங் குளனும் இருப்பான் என்பதால் மருதநிலத்தும், வேறுபல் வைப்பும் என்பதால் இவற்றிற்கு வேருய நெய்தல் நிலத்தும் அவன் இருப்பான் என்பதைப் பெறவைத்தார். ஊர்களில் இயற்கையாக அம் முருகன் தங்கும் இடங்களைக் கூறுவாராய்ச் சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் மன்றமும் பொதியிலும் கூறியுள்ளார். அவன் எல்லா இடங்களிலும் உள்ளான் என்பதையே இங்ஙனம் வகைப்படுத்திக் கூறியுள்ளார் புலவர் என்பதை யூன்றி நோக்குவோர் உணரலாம். இங்ஙனம் கூறிவந்த புலவர், இறுதியாகக் குறமகள் வழிபாட்டை விளக்கிச் செல்கின்றூர்.

குறமகள் வழிபாடு : முருகனை வழிபட விரும்பிய குறமகள், முதற்கண் முருகனுடைய மாண்புமிக்க தலைமையையுடைய கோழிக்கொடியோடு சென்று நீராடினாள். பின்னர் அக்கொடியை நட்டு அதில் பொருந்துமாறு பாதுகாவலாக நெய்யும் வெண்சிறுகடுகும் அப்பினாள். முருகன் வந்து தங்குவதற்குரிய இடத்தைத் தூய்மை செய்வதற்காக முருகன் மந்திரத்தை வாய்க்குள் சொல்லிக் கொண்டு வணங்கிச் செழுமலர்களைச் சிதறினாள். வேறுபட்ட வண்ணத்தினையுடைய இரண்டு ஆடைகளை உள்ஒன்றும் புறமொன்றுமாக உடுத்துக்கொண்டாள். செந்நிறமுடைய நூலைக் கையில் காப்பாகக் கட்டிக்கொண்டாள். வெண்பொரியை எங்கும் சிதறினாள். மிக்க வலியையுடைய பெரியகால்களோடுகூடிய செழுமையான ஆட்டுக்

கிடாயின் குருதியோடுகலந்து தூய வெள்ளரிசிசிலவற்றைச் செந்நிறமாக்கிப் பலியாக வைத்தாள். பல பிரப்பங்கூடையில் அளவாக வைக்கும் பண்டங்களை வைத்தாள். சிறிய பசிய மஞ்சளோடு கலந்த நறுமணப் பொருளை எங்கும் தெளித்தாள். பெரியதும் குளிர்ந்ததுமாகிய செவ்வலரிப் பூவால் தொகுத்த மணமிக்க மாலையை ஒத்த அளவினதாக அறுத்து எங்கும் தொங்கும்படி கட்டினாள். பெரிய மலைப் பக்கத்தேயுள்ள ஊர்கள்யாவும் வளமிக்கு வாழ்கவென வாழ்த்தினாள். நறுமணப்புகையை எழுப்பினாள். தன்னாட்டிற்கேற்ப முருகனைப் பொருளாகக்கொண்டு குறிஞ்சிப் பண் பாடினாள். மலையில் வீழ்கின்ற அருவிகளின் ஒலியே இயற்கை வாத்தியங்களாக அவற்றோடு இனிய செயற்கை வாத்தியங்களும் முழங்கச் சிவந்த அழகிய பல மலர்களைத் தூவினாள். பிறகு அச்சம் வரும்படி குருதியொடு கலந்த செந்தினையைப் பரப்பினாள்; பிறகு முருகன் உவக்கும் வாத்தியங்களை வாசிக்கப் பண்ணினாள். உடனே அவள் விரும்பியபடி முருகப்பெருமான், தெய்வம் இல்லையென்று மாறுபட்டுக் கூறுவோர் அஞ்சும்படியாக அவள் எதிரே எல்லோருங் காண வருகின்றான். இவ்வாறு குறமகள், முருகனை வரச்செய்த, அச்சம் பொருந்திய விசாலமான மலைக்கோயிலில் வெறியாடுகளம் ஒலிக்கப்பாடிக் கொம்புகள் பலவற்றையும் சேரவூதிக் கடிய ஓசையையுடைய மணியை ஒலிக்கச் செய்து, கெடாதவலிமையுடைய அவன் யானையினை வாழ்த்தி, இங்ஙனம் வேண்டுவார் வேண்டியபடி விரும்பியவற்றைப் பெற்று வழிபடாநிற்க, மேற்கூறிய அவ்வவ்விடங்களில் தங்குதலும் உரியன். இவ்விடங்களிலெல்லாம் அவன் உறைவன் என்றது யான் அறிந்தபடி கூறியதாகும் என்று புலவர் கூறுகின்றார்.

மேற்கூறிய இடங்களில் மக்கள் பலவகையான நிலையிலிருந்து வழிபடுதலையும் அவ்வழிபாட்டை யேற்றுக் கொண்டு முருகன் அவ்வவ்விடங்களில் தங்குதலையும் சிவன் மூத்தராம் பெரும் புலவர், நேரில் கண்டு அக் கண்டவற்றையே கூறுகின்றார். ஆதலின், "ஆண்டாண் டுறைதலும் அறிந்தவாறே" என்றார். பிறரை ஆற்றுப் படுத்துவோர் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறையும் இதுவேயாகும். தான் சென்றுவந்த வழியினை யன்றிச் செல்லாது கேள்வி

யாலறிந்தவற்றை வழியனுப்பப்படுவோர்க்குக் கூறுவது பொருந்தாது. அவை உண்மைக்கு மாறுபட்டனவாகவும் இருத்தல் கூடுமாகலின் என்க. மேல் குன்றுதோறாடலில் வேலன் வழிபாட்டைக்கூறி, இப்பகுதியில் குறமகள் வழி பாட்டைச் சிறப்பு வகையில் செப்பியது, இறைவனுடைய மூவகை நிலைகளில் உயிர்க்குயிராதல் தன்மையால் உலக மோடுடனாகும் நிலையை யுணர்ந்து வழிபடு நிலையை விளக்க வேண்டியேயாம்.

வீடுபெறுதற்குரிய மக்களுள் குறவர் இழிந்த பிறப்பினர் என்பது முன்னமே அறிந்தது; அக்குலத்துக் குறமகளுக்கு முருகன் உயிர்க்குயிராய் இருப்பதை விளக்கினால் ஏனை யோர் உயிர்க்கு உயிராக முருகன் இருப்பது கூறாமலே பெறப்படும். குறமகள், தன் உயிர்க்குயிராக முருகன் உடனிருக்கின்றான் என்பதை நன்குணர்ந்து அவனையே உயிர்நாயகனாகக் கொண்டு வழிபடுகின்றாள். உலகத்து ஆடவரும், இறைவனை யடைய எண்ணி வழிபடுங்கால் தம் மைப் பெண்பாலாகக் கருதி இறைவனைத் தலைவனாகக் கொண்டு வழிபடு முறையைத் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். இயற்கையாகவே பெண்ணாகப் பிறந்த இக் குறமகள் முருகனைத் தலைவனாகக் கொண்டு வழிபடுதல் காலப்பொருத்தமாதல் காண்க. முன்பு குறமகளாகிய வள்ளி இவ்வாறு வழிபட்டு என்றும் முருகனுடனே யிருக் கும் பேறு பெற்றுளாள் என்பதும் ஆவிநன்குடியில் அவ் வள்ளியோடிருந்தே முருகன் உலகமோடுடனாம் நிலையை யுணர்த்துகின்றான் என்பதும் ஈண்டு நினைத்தற்குரியவாகும்.

இக்குறமகள், முருகனையே தலைவனாகக் கொண்டவ ளாதலின் தனக்கென்று ஒன்றும் வேண்டாதவளாயினாள். உலகத்துயிர்க்கெல்லாம் தானே பிரதிநிதியாக நின்று வழி படுகின்றாள். இவள் வழிபாடு தன்னலங்கருதாது என்பதை: "நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி" என்ற தொட ரால் அறியலாம். உலகத்துப் பெரும்பாலார், கடவுளை வழிபடுங்கால், தாம் வாழவேண்டியே வழிபடுவர். இவள், அங்ஙனமின்றி நல்ல நகரிலுள்ளாரை வாழ்த்து கின்றாள். உயிராகிய தான் வாழ்த்தினால் ஏனையுயிர்களை வாழவைக்க வியலாது. தன்னுயிர்க்குயிராக விளங்கும் இறைவனே வாழ்விக்க வேண்டும். இது கருதியே பொது

நிலையில் நின்று வாழ்த்ாது, "தன்னுயிர்க்குயிர் முருகனே" என நீடு நினைந்து வழிபடும் சிறப்பான வழிபாட்டு நிலையில் நின்று வாழ்த்துகின்றாள். இந்நிலையில், உயிராகிய தான் வாழ்த்தினால் அவள் உயிர்க்குயிராகிய முருகன் வாழ்த்துவதே யாகும்' என்பதை நன்குணர்ந்து இங்ஙனம் வாழ்த்துகின்றாள். குறமகள், ஆற்றல்மிக்க அன்பால் முருகன் தன் முன்வரல் வேண்டுமென நினைந்து வழிபடுகின்றாள். அவள் நினைந்ததை யுடனிருந்து அறிந்த முருகன், அப்பொழுதே அவள் முன் வருகின்றான். இதுவே, குறமகள் உயிர்க்குயிராய் முருகன் உடனிருக்கும் தன்மையை யுணர்ந்து வழிபட்டாள் என்பதற்குச் சிறந்த சான்றாகும். முருகன், குறமகள் விரும்பிய வண்ணம் வந்து நின்றதைக் கண்டு, கடவுள் இல்லை யென்று தருக்கிக் கூறினவர்கள் எல்லாம் அஞ்சி நடுங்குகின்றனர். முருகன், தானே குறமகளின் உயிர்க்கு உயிராயிருத்தலை இவ்வாறு வந்து நின்று உணர்த்துகின்றான்.

திருவேரகத்தில் அந்தணர் வழிபாட்டிலும், வேலன் வெறியாட்டிலும் முருகன் நேரே வந்ததாகக் கூறாது, இங்குக் குறமகள் வழிபாட்டில் வந்ததாகக் கூறியது, முருகன், உயிரோடுடனாம் தன்மையை விளக்கும் பொருட்டேயாம். சீவன் முத்தராம் பெரும்புலவர், இங்ஙனம் முருகன் மூவகை நிலையில் உறையும் இடங்களையும் அம் மூவகைநிலையில் வைத்து அடியார் வழிபடும் இடங்களையும் அவைபோன்ற பிற இடங்களையும் வீடு விரும்பிய புலவர்க்கு விளங்கக்கூறினார். இனி, அவனைக் கண்டவிடத்துத் துதிக்கும் முறையை விவரிக்கின்றார். (தொடரும்)

ஐயவினா

திருவாசகத்தில் கோயிற் றிருப்பதிகத்தில் "திணிந்த தோரிருளில் தூவெளியே" என்று சிவபெருமானை மாணிக்கவாசகர் பிரார்த்திக்கிறார்கள். சிவபுராணத்தில் "நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதன்" என்று கூறுகிறார்கள். "மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம் மின்னொளி கொண்ட பொன்னொளி திகழ" விளங்கும் தேசுடைய இடத்தில், திணிந்ததோரிருளும் நள்ளிருளும் பொருந்தி நிற்கும் தன்மை எவ்விதம்? அறிஞர்கள் சித்தாந்தத்தின் மூலம் விளக்கம் எழுதவும்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 30	ஹேவிளம்பி புரட்டாசி 1957 செப்டம்பர்	இதழ் 9

தலைவர் பேருரை

(மலர் - 30 ; இதழ் - 8 ; 236-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறையில் பார்க்கும்போது தென்னாட்டில்தான் மடாலயங்களினுடைய சமயத் தொண்டும் இலக்கியத் தொண்டும் சிறந்து விளங்கி இருக்கின்றது. இந்தியப் பெரும் தத்துவ ஞானங்களாகிய அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம் முதலிய தத்துவங் களை உலகிற்குக் கொடுத்தவர்கள் தென்னாட்டு மடாலயத் தார்களே. அப்படி இருந்தும் தற்காலத்தில் மடாலயங்கள் என்ற பெயர் சொன்னவுடனே மனதிற்குச் சிறிது வருந்தத்தக்க நிலை ஏற்படுகின்றது. ஏன் என்று கேட்கும் காலத்தில் அவைகளில் சீர் குறைந்த நிலை தோன்றியதால் தான் என்க. இந்த நிலை ஏற்பட்ட பிறகு இந்து சமயிகளுக்கே பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. இந்திய நாடு இஸ்லாமியரால் அடிமைப் படுத்தப்பட்ட காலத்தில் அரசிய லால் சமயங்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட் டது. அப்படிப் பாதுகாப்பு இல்லாத ஏழுநூற்றாண்டுகள் முழுதும் பற்பல மடாலயங்களே சமயங்களைப் பாதுகாத் தன. அப்படிப்பட்ட அரியபணி செய்துவந்த மடாலயங்கள் தற்போது அடைந்திருக்கும் நிலை பரிதவிக்கத்தக்கதே. இஸ்லாமியர்கள் அரசியலில் அடக்குமுறை கொண்டார் களேயன்றிச் சமயங்களைப் பொறுத்தமட்டில் யாதொரு தடையும் விதிக்கவில்லை. தற்போதைய நிலை அப்படியல்ல.

வெள்ளையர்கள் நாட்டையாண்ட காலத்தில் சமய வளர்ச்சி களில் யாதொரு தடையும் செய்யவில்லை. ஆனால், நமக்குத் தன்னுரிமை கிடைத்தவுடன் பலவிதமான இடையூறுகள் சமயத்துறையில் ஏற்பட்டுவிட்டன. பிற சமயத்தார்கள் நமது சமயங்களை வெகுவாகத் தாக்கத் தொடங்கிவிட்டார் கள். சமயச் சார்பற்ற கொள்கை என்ற சாக்குக் கூறிக் கொண்டு மத்திய அரசியலார் வாளா இருக்கின்றனர். இதனையறிந்த பிற சமயத்தார்கள் புண்ணிற் கோல் போல் தீங்கு செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சென்ற பத்து ஆண்டுகளாக அதற்குமுன் கண்டிராத அளவு நாட்டுச் சமயங்கள் வருத்தம் அடைந்து கொண்டிருக்கின் றன. முகம்மதியர் காலத்தில் பாதுகாப்பு அளித்துக் கொண்டு வந்த மடாலயங்கள் தற்போது பாதுகாப்பு அளிக்கும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மடாலயங்கள் முன்போலத் திருத்தொண்டு செய்தா லொழிய நமது சமயங்கள் முன்னேற்றம் அடைய வழி இல்லை.

மத மாற்றம் செய்வதில் அறிவுடன் செய்தால் தடை. வேண்டியதில்லை. சிறு குழந்தைகளாக இருக்கும் போதே பிற மதத்தார்களின் ஆதரவில் விட்டுவிட்டால் மத மாற் றம் வெகு எளிதில் ஏற்பட்டு விடும். எண்ணிக்கையைச் சிறந்ததாகக் கொள்ளும் விவிலியம் முதலிய மதங்கள் நமது சமயத்தார்களை இழுத்துத் தம் வயப்படுத்திக் கொள்ளப் பல தூண்டுகோல்கள் இட்டு வருகிறார்கள். ஆங்கிலத்தை நன்றாகப் போதிக்கிறோம் என்று சொல்லி நாடெங்கும் கன்னிமாடக் கல்விச் சாலைகளை ஏற்படுத்தி நமது குழந்தை களை இழுத்துக் கொள்கிறார்கள். அங்கே இளவயதிலேயே உள்ளங்களைச் சரிப்படுத்திவிடும் வகையில் சிறுமிகளைப் பக்குவப் படுத்தி விடுகிறார்கள். நமது இல்லங்களில் போதிய சமயப் பயிற்சி இல்லை. ஆகவே, இளைய உள்ளங் களில் விவிலிய அறிவே புகுந்து விடுகின்றது. பின்னால் இவ்வறிவு தோற்றுவிக்கும் பூசல்களுக்கும் அளவு இல்லை. அண்மையில் தோன்றிய ஒரு எடுத்துக்காட்டைக் கூறு கிறேன். பெற்றோர்கள் இருவரும் தூய்மையான சைவர் கள். அருமையிற் பெற்ற மகளை விவிலியப் பள்ளிக்கு அனுப்பினார்கள். அங்கே பயிற்சி பெற்ற அப்பெண்ணுக்கு

விவிலிய அறிவே கிடைத்தது. வயது வந்த பிறகு சைவ அறிவு கொடுக்கத் தொடங்கியும் அது பலன் அளிக்க வில்லை. அந்தப் பெண் ஆங்கிலப் படிப்பும் விஞ்ஞானப் படிப்பும் பெற்று ஒரு கல்லூரியில் ஆசிரியை ஆனாள். தன்னந்தானே வாழ்க்கை நடத்தும் நிலை வந்ததும் விவிலி யத்தில் புகுந்து விட்டாள். பெற்றோர்கள் படும் துயரத் திற்கு அளவில்லை. இது உண்மையில் நடந்தது. இதன் அடிப்படையை நம் நாட்டுச் சிறுவர்கள் அறிவதில்லை. ஆங்கில போதனை நன்றாகக் கிடைக்கின்றதென்று சொல்லித் தம் இளங் குழந்தைகளை விவிலியப் பள்ளிகளுக்கு அனுப்பு கிறார்கள். அங்கே அவர்களின் பெரும் தீங்கை சமயப் பற்றுக் குறைந்த நமது செல்வர்களும் செல்வியர்களும் அறிவதில்லை. இதனால் நாட்டிற்கே பெருங்கேடு உண்டா கிறதல்லவா?

சில மாதங்களுக்குமுன் மத்திய பிரதேசத்தில் சமய மாற்றத்தைக் குறித்து ஒரு சோதனைக் குழு ஏற்படுத்தப் பட்டது. அதில் விவிலியர்கள் செய்யும் கணக்கற்ற தீங்கு களைப் பற்றி விசாரித்து அறிக்கை வெளியிடும்படி ஆணை யிடப்பட்டது. அவ்விசாரணை ஒரு உயர்தர மன்ற நீதிபதி யின்கீழ் நடைபெற்றது. வெளி நாட்டார்கள் சிறப்பாக அமெரிக்கர்கள் நமது நாட்டு மக்களைச் சிறப்பாக ஆதிவாசி களை விவிலியத்திற்குச் சேர்த்துக் கொள்ளச் செய்துவரும் முயற்சிகள் சான்றுகளோடு எடுத்துக் கூறப்பட்டன. அவர்கள் வெளியிட்ட அறிக்கையின்படி வெளி நாட்டி லிருந்து வந்த தொகைகளும், ஆட்களும் அளவிறந்தன. இங்கே சில புள்ளிகளை மட்டும் எடுத்துக் கூறுவோம்.

1. வெளி நாட்டிலிருந்து இந்திய மிஷனரிகள் பெற்ற தொகை (1950—54) — ரூ. 29·27 கோடி

அமெரிக்கா	...	20·68 கோடி
கானடா	...	1·67 கோடி
பிறநாடுகள்	...	1·83 ,,
மொத்தம்	...	24·18

இங்கிலாந்து	...	4·83	கோடி
மற்ற இங்கிஷ் பிரதேசங்கள்		·25	,,
மொத்தம்	...	5·09	
ஒட்டு மொத்தம்	...	29.27	

2. உலக முழுவதும் உள்ள கிரிஸ்தவர் தொகை :

ரோமன் கத்தோலிக்	...	42·30	கோடி
பிராட்டஸ்டென்ட்	...	20·9	,,
மொத்தம்	...	63·2	

3. இந்தியாவில் வேலை செய்யும் வெளி நாட்டு மிஷனரிகளின் தொகை :

1940 ... 5417 (இந்தியா & பாகிஸ்தான்)
1951 ... 4377 (இந்தியா மட்டும்)
1955 ... 4877 ,,

மத்திய பிரதேசத்தில் மட்டும் தற்போது 480 மிஷனரிகள் வேலை செய்கிறார்கள்.

4. மத மாற்றம் :

பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், அனாதை ஆசிரமங்கள் இவைகளின் மூலம் மதமாற்றம் நடைபெறுகின்றது. ஒரு குஷ்டரோக ஆஸ்பத்திரியில் மட்டும் 1947 முதல் 1954-க்குள் 154 பேர் கிறிஸ்துவத்தில் சேர்க்கப்பட்டனர். இவ்வாஸ்பத்திரிக்கு அரசியலார் வருஷம் ஒன்றுக்கு 26000 ரூபாய் உதவி தருகிறார்கள். பொறுப்பு யாருடையது? கூற வேண்டுமா?

மேலே கூறிய அறிக்கை வெளிவந்தவுடன் நம் நாட்டுக் கிறித்துவப் பாதிரிகள் செய்த கிளர்ச்சிகளுக்கு அளவில்லை. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல் பொய்ப் பிரசாரங்களைத் தூற்றிவிட்டு அந்த அறிக்கையை நசித்துவிட முயற்சித்தார்கள். ஆனால், உண்மை உண்மைதான். இதைக் கண்டும் நமது மக்க

ளுக்கு நல் உணர்ச்சி எழும்பவில்லை. இலட்சக்கணக்கான மலைவாசிகள் விவிலியத்தில் சேர்க்கப்பட்டார்கள். இராவணன் ஆண்டாலென்ன, இராமன் ஆண்டாலென்ன என்ற எண்ணத்தில் நமது மக்கள் வாளா கிடக்கின்றனர். பெரிய பாலாடைக் கட்டியில் ஒரு வளை செய்துகொண்டு உள்ளே வாழ்ந்து வந்த ஒரு பூனைக்குட்டியைப் போல் நமக்கு எப்படிக் கேடுவரும் என்று எண்ணிக்கொண்டு நமது சமயப் பொதுமக்கள் பேருறக்கம் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைகளைப் பெருமை பொருந்திய இந்தச் சபையார்கள் ஆராய்ந்து தக்க வழிகளை ஏற்படுத்த வேண்டும்.

சீர்திருத்தம் :—ஏற்கனவே திருந்தி இருக்கும் நமது சமயத்திற்கு மீண்டும் சீர்திருத்தம் வேண்டுமா என்ற கேள்வி கேட்கப்படுகின்றது. சைவத்திற்கோ மற்ற இந்து சமயங்களுக்கோ யாதொரு சீர்திருத்தம் வேண்டியதில்லை. அவைகள் சிறந்த முறையில் வளர்ந்தவைகள். எந்த நன்செய் நிலத்திலும் புல், பூண்டு, களை முளைப்பது இயல்பு. அவைகளைப் பிடுங்கி எறியாவிடின் விளைவிற்குக் கேடு ஏற்படும். அது போலவே சமயத்திலும் உண்மைக் கோட்பாடுகள் ஒருபுறம் இருக்கக் களைகள் போலவும் புல்லுருவிகள் போலவும் பொருளற்ற சடங்குகள் ஏற்படுகின்றன. அவைகளில் கேடு கெட்டவைகளைக் களைந்தெறிவதே மக்களின் கடமையாகும். நமது சமுதாயங்களிலும் கோயில்களிலும் கணக்கற்ற சடங்குகள் சமயத்தின் பேரால் முளைத்திருக்கின்றன. ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகள் இந்நிலையின் சீர்கேட்டை விளக்கிவிடும். அண்மையில் கன்னட நாட்டில் குருபர வகுப்பார்களில் ஒரு விழா நடைபெற்றது. பூசாரிகளின் தலைகளில் ஐம்பது தேங்காய்கள் உடைக்கப்பட்டனவாம். யாதொரு தீங்கும் நடவாததைக் குறித்து மக்கள் அருள் என்று வியப்படைந்தார்களாம். ஐம்பது ஆண்டுகளாக நடைபெறுமல் நின்றிருந்த இந்தக் கொடிய சடங்கு பிரதமர் முன்னிலையில் நடைபெற்றது என்று செய்தித்தாள் கூறியது. இச்சடங்கு தமிழ்நாட்டிற்குப் புதிதல்ல. திருச்சி வட்டத்தில் துறையூருக்கு அருகில் ஒரு குக்கிராமத்தில் பூசாரியைத் தெரிந்தெடுப்பதற்கு அவன் மண்டையில் தேங்காய் உடைப்பார்

களாம். இச்சடங்கைப் போலவே தீ மிதித்தல், அலகு போடுதல், செடில் குத்துதல் முதலிய கொடிய சடங்குகள் நமது நாட்டில் இன்னும் நடைபெறுகின்றன. அறிஞர்கள் இதனை அருள் என்ற ஒரு வார்த்தையில் தள்ளிவிடுகின்றனர். இவைகளால் பலன் என்ன ? மக்களுக்கு நன்மை உண்டா என்பதை எவரும் ஆராய்வது இல்லை. இக்கொடிய வழக்கங்கள் தென்னிந்தியாவை விட்டு ஈழநாடு, மலேயா, சிங்கப்பூர், பீஜித் தீவுகள், மோரிஸ் முதலிய பிற நாடுகளுக்கும் சென்றிருக்கின்றன. இதனைப் படம் பிடித்துச் செய்தித்தாள்களில் வெளியிட்டு நமது சமயங்களைக் கேலி செய்கின்றார்கள். . அண்மையிலே ஒரு விபரீத வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. கிராம தேவதைகளின் கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறும்போது உயிர்ப் பலி நடைபெற்று வந்தது. அதனை அரசியலார் நிறுத்திவிட்டார்கள். ஆனால், தற்போதோ அவைகளுக்கு மாறாக வேறு விபரீதங்கள் தோன்றி வருகின்றன. கரகமெடுத்தல், காவடி எடுத்தல், தீ மிதித்தல், பொய்க்கால் குதிரையாடுதல், புலி வேடம் போடுதல் முதலிய பொருளற்ற ஆபாசமான செயல்களைப் புரிந்து வருகிறார்கள். நாகரீகம் பெற்ற மக்களிடையேயும் இந்தப் புதிய கலைகள் முளைத்து வருகின்றன. இதனைச் சமயப் பெரியார்கள் கண்டிப்பதில்லை. வேறு வேலையில்லாத சில தான்தோன்றி மக்கள் வசூல் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வீடுதோறும் காணிக்கைகளை வசூல் செய்து பேருக்காக ஒன்றிரண்டு சொற்பொழிவுகளையும், பஜனைகளையும் நடத்திவிட்டு மீதிப் பணத்தைத் தமக்கு என வைத்துக் கொள்ளுகிறார்கள். நாளுக்கு நாள் இந்த இயக்கம் முற்பட்டு வருகின்றது. நகரங்களில் ஒருபுறம் சமயக் கூட்டங்கள் பெருகுவது குறித்து மகிழ்ச்சி யடைகிறோம். ஆனால், அதே சமயத்தில் அருவருக்கத்தக்க திருவிழாக்கள் ஓங்கி வருவதையும் காண்கின்றோம். இதனைச் " சமரசம் " என்ற ஒரு சொல்லில் சமாதானம் கூறிப் பொது மக்கள் ஆட்சேபணை கூறாமல் பொறுத்து வருகிறார்கள். இது நமது பண்பாட்டிற்கு உகந்ததா ?

நமது கடமை என்ன ?— இதுவரையில் சமயத்தின் பேரால் நடந்து வரும் குறைபாடுகளைப் பற்றிக் கூறினோம்.

இவைகளை நீக்கி நமது சமுதாயத்தை எந்த வகையில் நலம் செய்ய முடியுமென்று சில கருத்துக்களைக் கூறுகிறேன். பொதுவாகச் சைவ சமயக் கருத்துக்கள் நமது மக்களுக்குப் புறம்பாகவே நிற்கின்றன. ஏனெனில் அவைகளைப்பற்றிப் படித்தவர்களும் கூடச் சிந்திப்பதே இல்லை. தற்காலத்து மாணவனுக்கு விவிலிய முதலிய பிற சமயக் கொள்கைகள் நன்கு தெரியுமேயன்றிச் சைவ சித்தாந்தத்தின் அரியகோட்பாடுகள் தெரிவது இல்லை. அவைகள் கடுமையான செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குப் பொருள் விளங்கக் கூடிய முறையில் எழுதப்படவில்லை. விவிலியத்திற்குச் சென்ற ஒரு பெண்மணி அடியிற்கண்டபடி கூறியதாகக் கேள்விப்பட்டேன்: "விவிலிய நூல் எத்தனை தெளிவாக இருக்கின்றது. பாமரனும் அறியக் கூடுமல்லவா? அதனைத் தெளிவிக்கவும் இலவச ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சைவத்தைப்பற்றிக் கற்பிக்கும் நூல்கள் எவ்வாறு இருக்கின்றன? சிவஞான போதம், அதன் சிற்றுரை, திருமுருகாற்றுப் படை முதலிய துதி நூல்கள் எவராலே எளிதில் அறிய முடியும்? அவைகளைக் கற்றுக் கொடுக்க இலவச ஆசிரியர்கள் இருக்கிறார்களா? ஆகையால்தான் சைவம் ஒரு குறுகிய நிலப்பகுதியில் அடைபட்டுக் கிடக்கின்றது. விவிலியமோ உலகமெங்கும் பரவிக் கொண்டு வருகின்றது" என்று ஆட்சேபித்த தன் தாய்க்கு அப்பெண்மணி கூறினளாம். இந்த விடையிற் காணும் உண்மையை நமது மக்கள் அறிய வேண்டும். சிறப்பாகத் தூத்துக்குடி, சித்தாந்த சபை போன்ற பெருமை பொருந்திய சபைகள் அறிய வேண்டும். அவைகளுக்குத் தகுந்த மருந்துகளையும் தேட வேண்டும்.

பண்டைக் காலத்தில் செந்தமிழில் நூல்கள் எழுதினர்கள். அதிற்கண்ட கருத்துக்களை அக்காலத்தார் அறிந்து கொண்டார்கள். இக்காலத்திலோ செந்தமிழ் கொடுந்தமிழாகிவிட்டது. பொருள் விளங்கும் தெளிவான தமிழில் நமது சமய நூல்கள் ஏற்படவேண்டும். அந்த முயற்சியிலே நமது பெரியார்கள் இறங்க வேண்டும். அப், போதுதான் நமது சமயம் மக்களிடை ஓங்கி வளர முடியும். நமது சடங்குகளையும் பகுத்தறிவுள்ள மக்களுக்கு ஏற்றனவாகச் செய்ய வேண்டும். சிறு குழந்தையும் தெளிவாக

அறிந்து கொள்ளும் முறையில் சமயக் கோட்பாடுகளை மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மனிதன் மனிதனுக வாழும் முறையில் சமயங்களும் உதவி புரிய வேண்டும். இந்த முயற்சியில் நாம் வாழ்வு பெறுவோமாக !

சமயப்பணி என்ற சொல்லைக் கேட்ட அளவிலே வாழ்க்கையின் உயர்வும் பிறர்க்கு என வாழும் தன்மையும் ஒலிப்பது மேல் நாடுகளில் சிறப்பாக அட்லாண்டிக் நாடுகளில் காணும் ஒரு சிறப்பு. ஆனுல் கீழ் நாடுகளில் அதற்கு மாருன பொருள் ஒலித்து வருவதையே காண்கின்றேம். இதற்குக் காரணம் சமயம் என்பது தனி மனிதனுக்குத் தன்னலமாக ஏற்படும் ஓர் இயக்கம் என்ற அளவில் இங்கே மாறிவிட்டது. பிறருக்கு உதவி புரிந்து அதனுல் தான் மேன்மையடைதல் என்ற எண்ணம் இந்நாட்டில் மறைந்தே போய்விட்டது. அதனுற்றுன் சமயச் சொற்பொழிவுகளுக்குப் பொதுமக்கள் மிகுதியாக ஆதரவு தருவது இல்லை. அரசியல் கூட்டங்களுக்கும், சேவா நிலையக் கூட்டங்களுக்கும் பாமர மக்களும், கற்றவர்களும் செல்வதைப்போல சமயக் கூட்டங்களுக்குச் செல்வது இல்லை. சமயக் கூட்டங்களுக்குச் செல்வோரும் இசை இன்பத்திற்காகச் செல்லுகிறுர்களே ஒழியக் கருத்து மேன்மைக்குச் செல்லுவதில்லை. ஆகவே, சமயம் முன்னேற வேண்டுமாயின் அதனுடைய போக்கையும் பயனையும் நல் வழிப்படுத்த முயலவேண்டும். சமய நிலையங்கள் இதில் ஈடுபட வேண்டும். சமயத்தோடு ஒழுக்கம் சிறந்து விளங்க வேண்டும். இக்காரணத்தினுல் தான் விவிலிய, இஸ்லாமிய இயக்கங்கள் முன்னேறிக்கொண்டு வர, நமது சைவ இயக்கம், பயனற்றுக் குறைந்து வருகின்றது. ஆகவே ஒழுக்கம், சமுதாய சேவை இவைகளை முன்னர் நிறுத்தி அவைகள் மூலமாகச் சமய அறிவை ஊட்டிப் பெருக்க வேண்டும். கல்விச் சாலைகள், மருத்துவ விடுதிகள், அனுதை விடுதிகள், சிறைச்சாலைச் சேவை முதலிய பணிகள் நாட்டிற்கு மிகவும் இன்றியமையாத பணிகளாகும். இந்த வகையில் பணி செய்தாலன்றிச் சமயம் என்ற சொல்லில் தற்போது ஏற்பட்டிருக்கும் இழிவு எண்ணம் மாருது. அந்த வகையில் சங்கங்கள் பணி செய்ய வேண்டும். அதுதான் சரியான இறை பணியாகும்.

மேலும் பழைமை என்ற சொல்லில் ஒரு தனிச் சிறப்பு உண்டு என்பது நமது மக்களின் கொள்கை. புதுமை என்றால் அதில் சிறிது தாழ்வு உண்டு என்று நினைப்போம். ஆனால், இறைவன் பழைமைக்குப் பழையன்; புதுமைக்கும் புதியன் என்பது மணிவாசகம். பழைய நூலில் கூறி இருக்கிறதென்று அதையே பின்பற்றுவது மதியீனம். புதிய நூலில் இருக்கிறதென்று தள்ளி விடுவதும் அதுவே. இதனை உமாபதி சிவம்,

"தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனும் எவையும் தீதாகா"

என்று கூறி இருக்கின்றதை நாம் உணர வேண்டும். நமது சங்கங்கள் போற்றிவரும் பல கொள்கைகளை மாற்றித் தற்கால விஞ்ஞான முறைகளையும் அவைகளோடு இணைத்து மக்களுக்குப் பயன்படும்படியான கோட்பாடுகளையும் நாம் நிலைநிறுத்த வேண்டும். அப்போதுதான் உண்மையான சேவை செய்தவர்கள் ஆவோம். உண்மையான சமயிகளாகவும் ஆவோம். அந்த முறையில் நாம் சமயத்தை அறிந்து நமது வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் முறப்படுத்துவோமாக! அப்போதுதான் தற்போது குறுகிய அளவில் உள்ள சைவ சித்தாந்த அறிவை வெளி நாடுகளுக்கும் கொண்டு செலுத்தி உயர்ந்த நிலையை அதற்குத் தரமுடியும். இந்தக் கருத்துக்களை ஓரளவில் உங்கள் சிந்தனைக்கு விடுகிறேன்.

நமது நாடு மிக ஏழை நாடு. சமயப்பணி செய்வதற்குப் பணம் ஏது என்ற கேள்வி எங்கும் கேட்கப்படுகின்றது. கிறிஸ்வதர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் நிரம்ப சமூக வேலைகளும் சமயத் திருப்பணிகளும் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து உதவி வருகின்றதென்று கூறுகிறார்கள். ஆனால், உள்நாட்டிலிருந்து அவர்கள் எத்தனை உதவி பெறுகிறார்கள் என்று நாம் நினைப்பதே இல்லை. இந்துக்களிடமிருந்தும், அரசியலாரிடமிருந்தும் பல வகைகளிலும் அவர்கள் உதவி பெறுகிறார்கள். அதற்கு ஏற்ற வசதிகளைத் தேடிக் கொள்ளுகிறார்கள். நமது சமயப் பெரியார்களோ பல வகையாக வரக்கூடிய உதவிகளைக் கோருவதும் இல்லை. பெறுவதுமில்லை. உதாரணமாகத் தற்போது மத்திய

அரசியலாரிடமிருந்து நல உரிமைச் சங்கங்களுக்கும், ஹரிஜன சேவைகளுக்கும் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்படுகின்றது. அந்தப் பணத்தில் பெரும் பகுதி கிறிஸ்துவ சேவையாளர்களுக்குப் போய்ச் சேருகின்றது. நம்முடைய மக்களோ அதைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை. மேலும், கிறிஸ்துவப் பள்ளிகளுக்கும், மற்ற நிலையங்களுக்கும் கணக்கற்ற தொகைகள் கொடுக்கப்படுகின்றன. நம்முடைய சமூகங்கள் மிகப் பெரியவையாக இருந்தபோதிலும் அவர்களைப்போல சமபங்கும் கிடைப்பதில்லை. இந்தக் குறை நம்முடைய ஊக்கமின்மையால் ஏற்படுகின்றதே தவிர நாட்டில் பொருள் இல்லை என்ற காரணத்தினால் அல்ல. நம்முடைய வெளிற்றுத் தன்மை நம்மிடம் வரக்கூடிய திருமகளையும் உதறித் தள்ளி விடுகின்றது. நமது சமயப் பணியாளர்கள் இந்த வகையில் நன்கு ஆராய்ந்து பெறக்கூடிய உதவிகளைப் பெற முயல்வதே நலமாகும். மத்திய அரசியலார் கல்வி நிலையங்கள், ஏழைகள் — ஹரிஜனங்கள், பிற்பட்ட வகுப்பார் முதலியோர்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் உதவிகள், சமூக சேவைகளுக்கு ஒதுக்கி வைத்திருக்கும் உதவிகள், மாணவர்களுக்குத் தகுந்த கட்டிட வசதிகள், உணவு விடுதிகள், உடற் பயிற்சி நிலையங்கள், ஆடல் பாடல் வசதிகள், விளையாட்டு இடங்கள், திறந்த வெளி நாடக மன்றங்கள், நீந்தும் குளங்கள் இன்னும் பல வசதிகளுக்கும் பெருந் தொகைகளை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நாமோ முயற்சி செய்து பெறுவதில்லை.

இனி, மடங்கள் தாம் செய்யக் கடமைப்பட்டிருக்கும் செய்திகளைச் செய்கின்றனவா? சில சொற்பொழிவுகளை நிகழ்த்தி வைத்தாற் போதுமா? அல்லது உணவு இட்டால் போதுமானதா? சில மாணவர்கட்குச் சமயக் கல்வி கற்பித்தால் போதுமானதா? ஒருக்காலும் போதுமானதல்ல. மற்றச் சமயத்தார்கள் ஏழை அனாதைகளுக்குக் கல்வி கற்பித்து அன்னார்களைச் சமய ஊழியர்களாக ஆக்குவதை நேரில் கண்டிருக்கிறோம். நம்முடைய மடாதிபதிகள் என்ன செய்துவருகிறார்கள்? இவர்கள் உண்மையாகப் பாடுபட்டால் பிச்சை எடுக்கும் இழிவுச் செயலையே நாட்டிலிருந்து விலக்கி விடலாம். சமயத் தொண்டர்கள் இல்லை

என்ற பேச்சையே நீக்கிவிடலாம். உண்மையாகப் பாடு படக்கூடிய எண்ணம் இவர்களுக்கு இருக்குமாகில் நாடு எவ்வளவு விரைவாக முன்னேறிவரும்? இவ்வாறு செய்யும்போது நமது நாடு வேறு நாடாகவே ஆகிவிடும். இதிகாசங்களிலும் புராணங்களிலும் கூறுகின்ற நாடு மீண்டும் நம்மிடைத் தோன்றிவிடும். அப்படிப்பட்ட கனவு இனி நனவாக வேண்டுமென்று அம்மையப்பனை வழுத்துவோமாக! வணக்கம்.

திருமுருகாற்றுப்படை சைவ சித்தாந்த விளக்கமே

வித்துவான் - செ. வேங்கடராம செட்டியார்

(மலர் - 30 ; இதழ் - 8 ; 256-ம் பக்கத் தொடர்ச்சி)

14. துதிக்குமுறை

யான் கூறிய இவ்விடங்களில் ஆயினும் ஆக, அவை போன்ற வேறு இடங்களிலாயினும் ஆக முன்னே நீ எங்கு அழகு பொருந்த அம் முருகனைக் காண்கின்றாயோ அவ்விடத்து முகம் விரும்பித் துதிசெய்து கைகளைத் தலைமேல் கூப்பி வாழ்த்திய பின்னர், அக்கடவுளின் திருவடிகளில் நின்முடி படுமாறு தண்டனிட்டு, அறுவர் பயந்த ஆறமர்செல்வ! ஆல்கெழு கடவுட் புதல்வ! மலைமகண் மகனே! முதலிய பல பெயர்களைச் சொல்லி யானறிந்து கூறிய அளவிலே நீ துதித்துவிட்டு, "நின்தன்மையெல்லாம் முழுதும் அளவிட்டறிவது என்போன்ற உயிர்ப்பன்மைகட்கு அரிது. ஆகையால் நின்புகழ் என் சொல்லளவில் அமையாதாகும். நின்னோடு ஒப்பார் இல்லாத மெய்ஞ்ஞானத்தை யுடையோனே! நின்திருவடிப் பேற்றை நினைந்து வந்தேன்" என்று நீகுறித்ததை மொழிவாயாக. அவ்வாறு நீ மொழிவதற்கு முன்னே நீ, விண்ணப்பம் செய்ததை மனதிற்கொண்டு வேறுவேறாய குறிய பூத கணங்களாயிருப்போர், விழாநடக்கும் அவ்விடத்து வீறுடன் தோன்றுவார்கள்.

தோன்றிய அவர்கள், நினக்காக முருகனை வேண்டிக் கொள்வார்கள். "பெருமானே! அறிவு முதிர்ந்தவனும்

வாய்மையுடையவனும் ஆகிய இரவலன் ஒருவன். நின் வளமிக்க புகழினைக் கூறவிரும்பிக் கேட்போர்க்கு இனியனவும் உறுதியளிப்பனவும் ஆக மிகப்பலவற்றைச் சொல்லி வாழ்த்திக்கொண்டு வந்துளான். அவன் அளிக்கத்தக்கான்'' என்பது அவர் வேண்டுகோளாக இருக்கும். பழங்கள் உதிரும் சோலைகளையுடைய மலைக்குரியவனாகிய முருகப் பெருமான் அவ்வேண்டுகோளையுணர்ந்து தன் தெய்வத் தன்மை அமைந்த வலிவிளங்கும் வடிவினையும் வானைத் தீண்டும் உயர்ச்சியும் உடையனாய் அங்கு வந்து தோன்றி, அச் சந் தரவல்ல தன் பெருநிலையை உள்ளடக்கிக்கொண்டு பழமையான தன்னுடைய மணம் வீசுகின்ற தெய்வத்தன்மை அமைந்த இளமை அழகைக்காட்டி "அஞ்சற்க! நின் வரவை யானறிவேன்'' என அன்புடைய நல்லமொழிகளால் நின்னைத் தன்னொடு கலக்கச்செய்து இருண்ட கடலால் சூழப்பட்ட இம்மண்ணுலகத்தில் ஒப்பின்றி நீ மேம்படும் வண்ணம், பெறுதற்கரிய திருவடிப்பேறாகிய அழிவில்லாத பெரும்பரிசிலைத் தருவான், என்று சிவன் முத்தராம் பெரும் புலவர் கூறிமுடித்தார்.

முருகப்பெருமானுடைய பெயர்களைக் கூறுமிடத்து அவன் தோற்றமும் ஆற்றலும், அறிவும், தெறலும், அறிவும் விளங்க "அறுவர் பயந்த ஆறமர் செல்வ" என்பது முதல், 'புலமையோய்' என்பதீறாக இருபத்தேழு பெயர்களால் விளக்கிச் சொல்கின்றார். இப்பெயர்கள், முருகப் பெருமானுடைய புண்ணிய வரலாற்றைச் சுருங்க விளக்குவதாக உள்ளமை ஓர்க.

குறிஞ்சிநிலக்கடவுள் முருகன் என்பதை விளக்க 'மலைகிழவோனே' எனக் கூறவந்தவர், அம்மலைக்கு அடையாக இழும் என்னும் ஒலியோடு இழியும் அருவியையும் பழம் உதிர்கின்ற சோலையையும் கூறியுள்ளார். இந்த அடைகளை யூன்றி நோக்கின் இவை வெறும் வருணனைகள் அல்ல; உயர்ந்த உண்மைகளை விளக்கவே இங்ஙனம் கூறியுள்ளார் என்பது புலப்படும்.

அருவி: மலையில் அகிலும் ஆரமும், மூங்கிலும் தேனிறாலும், ஆசினிப் பலவும், சுரபுன்னையும், கருங்குரங்கும், முசுக்கலையும், பிடியும், களிறும், பொன்னும் மணியும் வாழையும் தாழையும் மிளகுக் கொடியும், மயிலும், கோழி

யும்,பன்றியும்கரடியும், காட்டுப் பசுவும், ஆங்காங்கு நிறைந்துள்ளன. அம்மலை யுச்சியில் கட்டிய கொடிகள்போல் அசைந்து விழும் அருவி, அகிற்கட்டையைச் சுமந்து கொள்கின்றது. சந்தனமரத்தை யுருட்டுகின்றது ; மூங்கிலின் வேரையும் பெயர்க்கின்றது; இவ்வருவியின் தாக்குதலால் தேனொழுகத் தேனிறால் சிதைகின்றது ; ஆசினிப் பலாவின் சுளைகள் அவ்வருவியில் கலக்கின்றன ; இவற்றால் அவ்வருவியின் சுவை விஞ்சுகின்றது. மேலும் அருவியின் அழகு விஞ்சுமாறு சுரபுன்னையின் மலர்கள் அதில் உதிர்கின்றன. இவ்வழகிய அருவியின் சுவையறிந்து உண்ண விழைந்த கருங்குரங்குகள் அண்மையில் வந்தும் அருவியின் வேகத்தைக் கண்டு நெருங்காமல் நடுங்குகின்றன. பெண் யானைகளுக்குக் குளிர் மிகுகின்றது. களிற்றின் கொம்புகளைத் தழுவிக்கொண்டு நடுங்குகின்றன. அருவி, மலையில் புதைந்துகிடக்கும் மணிகளை வெளியில் தோன்றுமாறு கிளறிப் பொன்னைக் கொழித்துக்கொண்டு செல்கின்றது. மெல்லிதாகிய வாழை, அருவியின் ஆற்றலுக்கு ஆற்றாது ஒடிந்துவிழுகின்றது. தெங்கினைத்தாக்கி இளநீர்களை யுதிர்க்கின்றது. மிளகுக் கொடியின் கரிய கொத்துக்கள் காய்ந்து விழுகின்றன. அம்மிளகுக் கொடியின்மேல் மடநடம் பயிற்றிக்கொண்டிருந்த மயில்கள் பலவும் அவ்வருவியைக் கண்டு வெருவியோடுகின்றன. அவற்றைக்கண்டு கோழிப் பெடையும் ஓடுகின்றது. பன்றிகளும் கரடிகளும் மலைக் குகையில் ஒளிந்துகொள்கின்றன. ஆமாவின் நல்ல ஏறுகள் அருவியைக்கண்டு அஞ்சி அலறுகின்றன.

இங்ஙனம் நிகழுமாறு மலையுச்சியிலிருந்து இழும் என்ற ஒலியோடு அருவி வீழ்கின்றது. அகிலும் சந்தனமும் தேனும் பலாவும் வாழையும் இளநீரும் மலரும் பொன்னும் மணியுங் கொண்டு இவ்வருவி செல்வதைக் கண்டால் மலை கிழவோனாகிய முருகனுக்கு மஞ்சனமாட்டத்தான் செல்கின்றதோ என்ற எண்ணமே உண்டாகும். இவ்வருவி, முருகப் பெருமானுடைய அருள் வெள்ளத்தைக் குறிப்பிடுகின்றது. அருவி, மலையிலுள்ள இயங்கு திணையும் நிலைத்திணையுமாய உயிர்களிடைக் கலந்து சிலவற்றை எளிதில் தன்னோடு சேர்த்துப் பெருமைபடுத்தியும், சிலவற்றைத் தாக்கித் தன்னொடு சேர்த்துக்கொண்டும், சில, தன்

னைக் கண்டவுடன் அஞ்சியோடுமாறும் ஒளியுமாறும செய்து இழிவுபடுத்தியும் வீழ்கின்றது என்பதைக் கண்டோம்.

"முருகப் பெருமானுடைய அருளும், உலகில் பக்குவ முதிர்ந்த உயிர்களை எளிதில் தன்பால் சேர்த்து இன்புறுத்தி யும் சிறிதே பக்குவம் வந்த உயிர்களைத் துன்பந்தந்து பக்கு வம் முதிரச்செய்து தன்னொடு சேர்த்து இன்புறுத்தியும், பக்குவமேயடையாத உயிர்கள் அஞ்சியகலுமாறு துன் புறுத்தியும் நிகழும் இயல்பினது" என்னும் உண்மைப் பொருளை அவ்வருவியின்மூலம் புலப்படுத்தினர் புலவர்.

15: சோலை

அவ்வாறு வீழும் அருவியின் ஆற்றலுக்குக் கெடாது தாங்குகின்ற சோலையில் பழங்கள் உதிர்கின்றன என்றும், அந்தப் பழமுதிர் சோலையையுடைய "மலைகிழவோன்" என்றும் கூறியது, முருகப் பெருமானுடைய அருள்வெள் ளத்தைத் தாங்கி நிற்கும் ஆற்றல்வாய்ந்த உயிர்கள் மெய்ஞ் ஞானம் முதிரப்பெற்று உலகப்பற்றில் நின்றும் விடுதலை யடைந்து முருகன் சேவடியாகிய பேரின்பத்தில் திளைக் கும் என்பதை யுணர்த்துகின்றது. மரம் உலகமாகவும், பழங்கள் உயிர்களாகவும், தரை இறைவனாகவும், தரையில் பழங்கள் உதிர்வது, உலகப்பற்றில் நின்றும் விடுதலை யடைந்த உயிர்கள், இறைவனடியில் இயைவதாகவும் கொள்க.

மரத்திற்கு ஆதாரமாய் உரந்தருவதும் அதன்மூலம் பழத்திற்கு வளம் தருவதும் முதிர்ந்தபின் இழுப்பு ஆற்ற லால் தன்மாட்டு வீழச்செய்வதும் தரையேயாதல்போல உலகிற்கு ஆதாரமாய் நின்று ஊற்றமளித்தும் அதன்மூலம் உயிர்கட்குப் பக்குவத்தைக் கொடுத்தும் அருளாற்றலால் அவ்வுயிர்களைத் தன் அடியில் சேர்த்தும் வருபவன் இறை வனே யாதல் தெளிக. இங்ஙனம் உயர்ந்த கருத்துக்களை நோக்கி யுணரவைப்பது பெரும்புலவர் திறனாகும். இவ் வருணனைகள் இத்தகைய சிறந்த கருத்துக்களை விளக்கா விடின் பெரும்பயன் இல்லாதசொற்களைப் புலவர் கூறிய தாக முடியும். புலவரை ஆற்றுப் படுத்தும் சீவன்முத்தராம் பெரும்புலவர், இறைவனுடைய மூவகை நிலைகளையும்

அந்நிலைகளை யுணர்ந்து வழிபடுவோரின் மூவகை நிலையினை யும் உணர்த்திய காரணத்தால் இத்திருமுருகாற்றுப்படை அறுவகையாகப் பகுக்கப்பட்டது என்றலே பொருத்த மாகும்.

16. முடிபு

இதுகாறும் கூறியவாற்ருல், இறைவனின் மூவகை யியல்புகள் இவையென்பதும், இறை, உயிர், உலகம்என்ற முப்பொருள்களின் உண்மையும், உலகப்பற்றை நீங்கிய வழியே உயிர் இறையடியில் தங்கி யின்புறற்குரியது என்ப தும், உயிர்க்கு இருட்கேவலம், சகலம், சுத்தம் என்ற மூவகை நிலைகள் உண்டு என்பதும், முருகன் அருள்வெள் ளம் இத்தகையதென்பதும் பழமுதிர்சோலை இறைவ னுடைய அருள் திறத்தைக் காட்டுமாறு இவ்வாறு என்ப தும் விளங்குவதால் திருமுருகாற்றுப்படை சைவசித்தாந்த விளக்கமே என்பது தெளிவாதல் காண்க.

இனி, இவ்வாற்றுப்படை, அறுவகையாகப் பகுக்கப் படுதற்கு வேறு காரணமும் கூறலாம். இறைவனுடைய அறிவு, செயல், இச்சை என்ற மூவகை யாற்றலில் அறி வாற்றல் விஞ்சித்தோன்றும் நிலையைத் திருப்பரங்குன்றத் திலும், செயலாற்றல் விஞ்சித் தோன்றும் நிலையைத் திருப் பரங்குன்றத்திலும், செயலாற்றல் விஞ்சித்தோன்றும் நிலை யைத் திருச்சீரலைவாயிலும், இச்சையாற்றல் விஞ்சித் தோன்றும் நிலையைத் திருவாவினன்குடியிலும் வைத்து விளக்கினர் எனவும், திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை ஆகிய மூன்று பகுதிகளில் அம்முருகனை அறிவால் வழிபடுவோர், செயலால் வழிபடுவோர், இச் சையால் வழிபடுவோர் ஆகிய மூவகையடியார் நிலைகளை விளக்கினரெனவும் கொள்ளலாம்.

1. ஞான நிலை : திருப்பரங்குன்றத்தில் முருகனுடைய உருவமுதலியன சொல்லப்படாமல் மலமாசு நீங்கப் பெற்ற தூய ஆன்மாக்கள் சூழ இருக்கின்ருன் என்னும் கருத்தை யுணர்த்தும் "வண்டின் அரிக்கணமொலிக்கும் குன்றமர்ந் துறைதலும் உரியன்" என்றே சொல்லி யிருத்தலின், அங்கு ஞானசக்தி மேற்பட முருகப்பெருமான் ஞான நிலை யில் விளங்குகின்ருன் என்பதையே விளக்கினர் என்று

கொள்ளலாம். ஞானமே வடிவாய ஆன்மாக்களால் சூழப் பெறுதல் ஞானநிலைக்கே பொருத்தமாதல் காண்க.

2. கிரியை நிலை: திருச்சீரலை வாயில், முருகப்பெருமானுடைய ஆறுதிருமுகங்கள் செய்யும் தொழிலையும் பன்னிருகரங்கள் செய்யும் தொழிலையுமே விரிவாகக் கூறியிருத்தலாலும், முருகன் யானைமேலூர்ந்து செல்லும் செயலையே சிறப்பாகக் கூறியிருத்தலாலும், முருகனது செயலாற்றல் விஞ்சிய கிரியாசக்தி நிலையே விளக்கப்பட்டது என்பதை யுணரலாம்.

3. இச்சை நிலை: திருவாவிநன்குடியில், திருமால் முதலிய தேவர்கள் வணங்க "மடந்தையொடு சின்னாள் தங்குவதாகக் கூறப்படுவதால் இச்சைநிலை விளக்கப்பட்டதாகக் கொள்ளலாம். மடந்தையொடு தங்குவதற்குக் காரணம் இச்சையேயாதல் தெளிவு.

4. ஞான வழிபாடு: திருவேரகத்தில், அந்தணர் ஆறெழுத்தடங்கிய அருமறையை நாவியல் மருங்கின் நவிலப் பாடி வழிபடுவதாகச் சொல்லப்படுவதால் அவ்வந்தணர் முருகனை ஞானத்தால் வழிபடுகின்றார் என்பது விளங்கும்.

5. கிரியை வழிபாடு: குன்றுதோறாடலில், வேலன், முருகன் வேடந்தாங்கி மகளிரொடு கூடிக் குரவையாடி வழிபட்டதாகச் சொல்லப்படுவதால் அவ்வேலன் கிரியையால் வழிபட்டமை தெளிவாம். ஆடல் கிரியையாதல் தெளிவு.

6. இச்சை வழிபாடு: பழமுதிர் சோலையில், குறப்பெண், தன்முன்னிலையில் முருகன் வரல் வேண்டுமெனவும், நல்நகர் வாழவேண்டும் எனவும் விரும்பி வழிபட்டாள் என்று கூறியிருத்தலால் அவள் இச்சையால் வழிபட்டாள் என்பது பெறப்படும். "பெண்" என்னுஞ் சொல்லே பெட்பு (இச்சை) உடையவர் என்பதை விளக்குதலும் அறிக.

இனி, இவ்வாறன்றித் திருப்பரங்குன்றத்தில் முருகன் வடிவம் யாதும் கூறப்பெறாமையால், அவன் அருவாய் நிற்கும்நிலையை யுணர்த்தியதாகவும், திருச்சீரலைவாயில் ஆறுமுகமும் பன்னிருகையும் உடையனாக முருகன் கூறப்படுவதால் அம்முருகன் அருவ நிலையை விடுத்து உயிர்களின்

பொருட்டு மேற்கொண்ட உருவ நிலையை யுணர்த்தியதாக வும், திருவாவினன்குடியில், திருமால், உருத்திரன், இந்திரன், முப்பத்துமுக்கோடி தேவர் முதலியோர் சென்று முருகனைத் தரிசித்ததாகக் கூறியிருத்தலால் உயிர்வருக்கத்தில் உயர்ந்தோராகிய தேவர் வழிபட நிற்கும் நிலையினை யுணர்த்தியதாகவும், திருவேரகத்தில் அந்தணர் மந்திரமோதி மலர்தூவி வழிபட்ட முறையைக் கூறியதால், பூதேவர் என்று புகழப்படும் செந்தண்மைவாய்ந்த அந்தணராகிய மக்களுள் உயர்ந்தோர் வழிபடநிற்கும் நிலையினையுணர்த்திய தாகவும், குன்றுதோருடலில் குறவணுகிய வேலன் வழிபாடே கூறியிருத்தலால் மக்களில் இழிந்தோரும் வழிபட நிற்கும் நிலையினை யுணர்த்தியதாகவும், பழமுதிர் சோலையில் குறமகள் வழிபாடே சிறப்பாகக் கூறியிருத்தலால் பெண்டிர்க்கு முத்தியில்லை யென்பாரை மறுக்கப் பெண்களும் வழிபடநிற்கும் நிலையை யுணர்த்தியதாகவும் கொள்ளலாம்.

இதனால் முருகன் அருவாயும், உருவாயும் நின்று தேவரும் மக்களில் உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் பெண்டிரும் தத்தம் நிலைமைக்கேற்றமுறையில் வழிபட அருள் செய்கின்றான் என்பதும், பிறப்பானும் பிறசிறப்பானும் வேறுபாடு இருப்பினும் வழிபடுவோர் எல்லோருக்கும் பொதுவாகிய அன்பு ஒன்றே அம்முருகப்பெருமானுக்கு வேண்டுவதென்பதும் விளங்கும்.

இவ்வாறு முருகப்பெருமானுடைய நிலைகளை யறிந்த, வீடு பெறவிரும்பிய புலவர், தம் தகுதிக்கேற்ற இடத்தில் இறைவனை யுணர்ந்து வழிபட்டு வீடுபெறுவார் என்பது சீவன் முத்தராம் பெரும் புலவரின் துணிவு.

இத்தகைய கருத்துக்களை ஆழ்ந்து நோக்கி யுணர்ந்து கொள்ளுமாறு பொக்கமில் புலவர் நக்கீரனர், திருமுருகாற்றுப்படையினை இயற்றியுள்ளார் என்க.

என் சிற்றறிவில் தோன்றிய சில கருத்துகளை இங்கு வெளிப்படுத்தியுள்ளேன். இன்னும் ஆழ்ந்து நோக்கும் அறிஞர்கட்குப் புதிய பல கருத்துக்கள் புலப்படும் என்பது என் திண்ணமான எண்ணம். அறிஞர்கள் என்குறையைப் பொறுப்பார்கள் என்னும் நம்பிக்கையுடையேன்.

வாழ்க முருகு நெறி.

"ஐந்தொழில் குறிக்கும் அபய திருக்கரம்"*

முருகன் திருவுருவம் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு திகழ்வது. அத்தத்துவ உருவகம் கந்தபுராணம். இந்நூலில் எல்லா உறுப்புகட்கும் உயர்சிறப்புகள் மிளிர்கின்றன. அவற்றை அறையத் தலைப்பட்டுத் தலைமையாகிய சிரம் செப்பி, வலது கரங்கள் பற்றிக் கூறிவந்தோம். நென்னல், அபய திருக்கரத்தின் ஐந்தொழில் குறிப்பைப் பகரப்புகுந்து படைத்தல் காத்தல் முடித்தோம். ஏனைய முத்தொழிலை அக்கரம் குறித்தல்பற்றி இன்று இயம்புவோம்.

" ....பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம்உய்ய "

என்றும்,

" முகங்களும் முந்நான் காகும் விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும் அழகிய கரமீ ராறும்
அணிமணித் தண்டை யார்க்குஞ் செழுமலர்-அடியும் "

என்றும் கந்தம் பலமுறை கூறுதலின் கரம் பன்னிரண்டென்பதை உணர்க. அப்பன்னிரு கரங்களில் வலது இடது கரங்கள் பற்றி,

" வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம் மாறிலாத
வேல் அபயமே வலம் ; இடம் வரதம் ஏறுபங்கயம்
அணி மழுத் தண்டுவில் இசைந்த ஆறிரண்டு கை "

என்றனர். ஆதலின், அபய திருக்கரம் வலக்கையாகும்.

ஐந்தொழிலை சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம் அனுக்கிரஹம் என்பர் வடநூலார். இதனை முறையே

*இது ஞானியார் சுவாமிகள் தமது திருமடத்தில் 1931-ம் வருடம் நிகழ்த்திய சொற்பொழிவு. திரு. தி. கி. நாராயணசாமி எழுதிய கைக்குறிப்பு.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பர் நந்தமிழர். இவ்வைந்தும் அருளின் பாற்படுவன. இதனைச் சிவஞான சித்தியார் சுபக்கம் சுட்டுதல் காண்க.

“ அழிப்பு இளைப்பாற்றல் ; ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் ; நுகரச் செய்தல் காப்பது ; கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்களெல்லாம் மறைப்பு ; அருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு ; பார்த்திடின் அருளே எல்லாம்.”

(உரை) ஒடுக்கந் தோற்றம் நிலை மறைப்பு அருளென்னும் ஐந்தும் முறையே, இளைப்பாற்றலும், கன்மம் கழியுமுகத்தான் மலபாகம் வரச் செய்தலும், கன்மம் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்ம வொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தலும், பந்தம் விடுவித்தலுமாகிய உறுதிப்பயத்தனவாகலான் ஐந்தொழிலும் அருட்செயலே யாகலின், இவற்றுள் சில மறத்தொழிலே போலுமெனப் பழித்தலையொழிவாயாக. மற்றும் இதனைச் சிவப்பிரகாசம் :

“ ஏற்றவினை யரனருளின் திருவிளை யாட்டாக
இயம்புவர்க ளணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே
யூற்றமிக வருள்புரித லேது வாக
வுரைசெய்வ ரொடுக்கமிளைப் பொழித்தல் மற்றைத்
தோற்றமல பாகம்வரக் காத்தல் போகந்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்த லாகும்
போற்றலரு மருளருளே யன்றி மற்றுப்
புகன்றவையு மருளொழியப் புகலொ ணாதே ”

என்று கூறுதல் காண்க.

மேற்கூறியவற்றுள் சம்ஹாரம் (சம்-ஹிரு-அரம்) செவ்வையாய் ஒடுக்கிக்கொள்ளுதல்—அழித்தல்—இளைப்பாற்றல் எனப் பொருள்படுவது அறிந்தோம். அஃதும் பிறவும் அருளே என்றும் தெளிந்தோம். அழித்தல் அருள் என்பதால், மக்கள் முருகனை அழித்தல் தெய்வம் எனக் கூறும் கூற்று அறியாமை யன்றோ ? இனி எதனை அழிப்பது ? எதனின்று நீங்கி இளைப்பாறுவது ? என்ற இன்ன பிற கடாவிற்கு விடை ஆராய்வாம்.

“ இன்பமும் பொருளும் அறனும் ” என்று மக்களின் உள்ள விருப்பங்களை இயற்கைப்படி முறையில் வைத்தனர்

தொல்காப்பியனார். ஆதலின் மக்கள் "அவாவுவதில் தலையாயது இன்பம். இக்காரணம் பற்றியே அஃது முதலில் வைக்கப்பெற்றது. பிற இதன் சார்பில் எழுந்தவை. இது நிற்க, இன்பம் மக்களது வேட்கையெனின் அதன் எதிர் மறையாக துன்பம் ஒழிதல் வேண்டுமன்றோ ? துன்பத்தை அழித்து, இளைப்பாற்றிவைக்க வல்லவன் எவன் ? இறைவன் ஒருவனே துன்பத்தை அழிக்க வழி வகுக்க வல்லவன். அவன் வகுத்த வழி யென்னை ? அஃதே அழித்தலென்னும் அருள்வழி. துன்பம் துன்பம் என்றோமே அஃது எத்துன்பம் ? நாம் கருதும் எல்லாம் துன்பமேயோ ? மற்று அழித்தற்குரிய துன்பம் எவை ? இதனை வைராக்கிய தீபத்தில் சாந்தலிங்கர் சாற்றுதல் காண்க.

"உடலிதற் பவத்தோ ரைம்பெருந் துயர்மாய்த்
துறுகணத் துயரினெண் மடங்கா
லிடையுள திக்கட் டுயர மூப்பறிவோங்
கிளமையிற் பிணியுறு விடத்தும்
விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான்
மிகுபொரு டேடுத றுயரீண்
டடைபிற வதனைக் காக்குத றுயர்வேங்
தாயினு மிகுநாற் றுயரே"

மேற்கூறிய துன்பங்களை மூன்றாகத் தொகுக்கலாம். அவை பிறப்பிலே - இருப்பிலே - இறப்பிலேயாம். பிறப்பின் "ஐம்பெரும் துன்பங்களை" சிதம்பர சுவாமிகள் உரையில் காண்க. இருப்பிலேயுள்ள துன்பங்கள் பாலகுமார விருத்த பருவத்தில் வருவன. ஈண்டு, திருவிளையாடலில் விருத்த குமார பாலரான படலம் நினைவிற்கு வருகிறது. திருவிளையாடலில் உள்ள முறை முதுமையினின்று இளமையாதல். இளமையாதல் இற்றைய நாள் கொண்டுள்ள பொருளில் அன்று. உருவத்திலும் இளமை யாதலாகும். அவ்வாறு முறைப்படுத்திக் கூறியது இறைவன் ஆற்றல் உணர்த்துவான் கருதியாகும். மற்றும் விரிக்கிற் பெருகும். ஈண்டு வருந் துன்பங்கள் அறியாமையாலும், பூர்வ கர்மத்தாலும் வரும் பிணித்துன்பம் ; நீங்காப் பசிநோய்த் துன்பம் ; விடலரும் காமநோய்த் துன்பம் ; இவற்றைத் தணிப்பான் கருதிப் பொருளை ஈட்டலிலும் பாதுகாத்தலிலும் வரும் துன்பம் ; நரைதிரை மூப்பால் துன்பம் ; இறப்பின்

துன்பமோ யாவற்றினும் மிகுந்தது. அதன் அளவைக் கூற நம்மனோரால் முடியுமோ? அம்மம்ம! அது அளவைக் கடந்தது. அதுபற்றியே, "யானேதும் பிறப்பஞ் சேன் இறப்பதனுக்கென் கடவேன்" என்று மணிவாசக ரும், "சங்கொத்த மேனிச் செல்வா! சாதல் நாள் நாயேன் உன்னை எங்குற்றாய் என்றபோது" என்று நாவரசும், "இறப் பொடு பிறப்பை எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயிலுறா திருவிழியும் இரவு பகலாய்" என்று தாயுமானச் செல்வரும் செப்பிப் போந்தனர்.

இங்கு நாம் பெறலரும் பெற்றி ஒன்றுண்டு. அஃது செயற்கரிய செய்யும் பெரியார் துன்பச் சகிப்பை இன்ப மாய்க் கொண்டது. அது நம்மனோர்க்கு எளிதில் வருவ தன்று. ஞானவாசிட்டம், அருந்தவத்தினர் துன்பத்தைச் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்போல் சலியாது தாங்கி, வருவதையும் முகமலர்ச்சியுடன் எதிர் நோக்குவர் என்று கூறுகிறது. பெரியார் சரிதங்கள் காணில் துன்பச் சகிப்பின் அளவே அவர்களை மேன்மைப் படுத்தியதை அறிவோம்.

நிற்க முருகன் இளைப்பாற்ற வைத்த அருளுடையோன் எவன்? சூரபதுமன். அவன் ஆற்றல் என்னை? மக்கள் ஆற்றல் பாற்பட்டதோ? அன்று.

"மாயையின் வலியோனாகி
மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம்
அரசு செய்துக நூற்றெட்டுக்
காயமதழி வின்றாகிக் கடவுளர்க்
கலக்கண் செய்த தீயசூர் முதல்வன்"

இவ்வாயிரத்தெட்டு பிருதிவி அண்டங்களை நூற்றெட்டு சதுர்யுகங்கள் ஆண்டவன் திறன் என்ன? 'அயனை அவன் தந்தையாம் காசிபனுக்கு வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்ற பஞ்ச அங்கமுடைய பஞ்சாங்கம் கூற அமைத்தான்!

"விரிஞ்சன் மால்தேவராலும் வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும்வேத வொழுக்கமும் பிறவும்மாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த அவுணர்கோன்."

இவனது இடுக்கண் ஆற்றாது இறைவனிடம் தேவர் முதலோர் முறையிட்ட முறையீடு பல கந்தத்தில் செறிந்து கிடக்கின்றன.

கோவுநீ ! எங்கள் குரவனுநீ ! தேசிகனீ !
தேவுநீ ! மேலாந்திருவுநீ ! செய்தவநீ !
யாவுநீ ! மற்றை யறிவுநீ ! இன்பதுன்பம்
யாவுநீ யாகில் எமக்கோர் குறையுண்டோ ?

பார்த்துப் பணித்த பணிசெய்து நின்றன்னை
யேத்தித் திரிதல் எமக்குக் கடனாகும் ;
நீத்துத் துயரநெறி நிறுத்தி யெம்மை யென்றுங்
காத்துப் புரத்தல் உனக்குக் கடன் ஐயா !

கந்தநம ! ஐந்துமுகர் தந்தமுரு கேசநம ! கங்கை யுமைதன்
மைந்தநம ! பன்னிரு புயத்தநம ! நீபமலர் மாலை புனையுந்
தந்தைநம ! ஆறுமுக ஆதிநம ! சோதிநம ! தற்பர மதாம்
எந்தைநம ! என்றும் இளையோய்நம ! குமாரநம ! வென்று தொழுதார்.

" நண்ணினர்க் கினியா யோலம் ! ஞானநா யகனே யோலம் !
பண்ணவர்க் கிறையே யோலம் ! பரஞ்சுடர் முதலே யோலம் !
எண்ணுதற் கரியா யோலம் ! யாவையும் படைத்தா யோலம் !
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம் !

தேவர்கள் தேவா வோலம் ! சிறந்தசிற் பரனே யோலம் !
மேவலர்க் கிடியே யோலம் ! வேற்படை விமலா வோலம் !
பாவலர்க் கெளியா யோலம் ! பன்னிரு புயத்தா யோலம் !
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம் !"

இங்கு முறையீட்டால் வேண்டிய வேண்டியாங்கு அளப்பரும் ஆற்றலுடையானையும் ஒடுக்கி அருள்புரிவான் என்பது சிந்திக்கற் பாற்று.

ஒவ்வொரு திங்களும் ஒரு நக்ஷத்திரத்தின் பெயர் வாய்ந்தது. சித்திரை - சித்திரை; விசாகம் - வைகாசி; மூலம் - ஆனி; உத்திராடம் - ஆடி; அவிட்டம் - ஆவணி; பூரட்டாதி - புரட்டாசி; அச்சுவினி - ஐப்பசி; கார்த்திகை - கார்த்திகை; மிருகசீரிடம் - மார்கழி; புனர்பூசம் - தை; மகம் - மாசி; உத்திரம் - பங்குனி. அம்மீன் அம்மதியில் பௌர்ணமியுடன் சேரும். நக்கீரர் களவியலுரையில் பெரிய திருவிழாக்களாகக் கூறப்படும் மதுரை

ஆவணியவிட்டம், உறையூர் பங்குனி யுத்திரம், களவ்ழியும் குறிக்கும் கார்த்திகை விழா, மற்றும் மார்கழித் திருவாதிரை ; தைப்பூசம் மாசிமகம் இன்னபிற விழாவரும் நாளில் மதியின் வடிவு ஓர்க. அசுவினி மீன் நிறைமதியுடன் சேர்கின்ற ஐப்பசி மதியில் வளர்பிறையில் திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி ஆகிய நான்கு நாள் சமராபுரி இறைவன் சமர்புரிந்தான் என்பது சரிதம். சஷ்டி திதியிலே சூரபதுமனை சம்ஹரித்தான்—அழித்தான்—இளைப்பாற்றினன்—ஒடுக்கிக் கொண்டான்—அஃதும் முறையிட்டால் செய்த கருணைத் திறம்.

இவ்வாறு அழித்ததைக் கந்தம் யுத்த காண்டம் - சூரபன்மன் வதைப்படலம் 464-ம் செய்யுள் குறிக்கிறது.

" அங்கவர் மொழியும் வெய்யோ னாற்றலுந் தெரிந்து செவ்வேள்
செங்கைய தொன்றில் வைகுந் திருநெடு வேலை நோக்கி
யிங்கிவ னாகம் போழ்ந்தே யேகுதி இமைப்பி னென்னாத்
துங்கம துடைய கீர்த்திச் சூரன்மேற் செல்லத் தொட்டான்."

இப்பாவிலுள்ள சிறப்பு காண்க. அங்கவர்மொழி - தேவர் முதலாகிய சாதுக்கள் முறையீடு (பிரார்த்தனை) வெய்யோன் - சூரியன் (சூரபதுமன்) தபனஹரா - தபிக்கச் செய்யும் தன்மை யுடையோன் - என்பில்லா புழு தவழ்தல் போல. 'என்பிலதனை வெயில் போலக் காயுமே' என்ற குறளும் நோக்குக ; தெரிந்து-தெரிதல் - ஆராய்தல். இதற்கு இரண்டு செயப்படுபொருள். மொழியும் ஆற்றலும் தெரிந்து ; செங்கை - காத்தல் கரமாதல் பற்றிச் செங்கை யென்றனர் ; வைகும் - எப்போதும் இருக்கிற ; திரு - வடமொழி சிதைவு அல்ல - மரியாதையில் நின்றது ; நோக்கி - 'நோக்கரிய நோக்கே' என்ற திருவாசக - சிவபுராணம் குறிக்கும் நோக்கென்க ; ஆகம் போழ்ந்து - உடலைப் பிளந்து - இங்கு பிரித்தல் தொழில் ஒன்றே குறிக்கிறது. கொல் என்னும் வினை குறிக்கவில்லை. சூரன் + பதுமன் = சூரபதுமன் ; சூரன் - மயில், பதுமன் - கோழி. இவ்வினை கருணை உணர்த்திற்று. தொட்டான் - தொடுத்தான். பின்னும் இதனை :

" விடம் பிடித்தமலன் செங்கண் வெங்கன லுறுத்திப் பாணி
யிடம்பிடித் திட்ட தீயிற் றோய்த்து முன்னியற்றி யன்ன.

உடம்பிடித் தெய்வமிவ்வா றுருகெழு செலவினேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே"

மற்றும் அவன் அருள் பெற்றதை :

" தீயவை புரிந்தா ரேனுங் குமரவேள் திருமு னுற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசம ரிந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"

என்று கூறுதல் காண்க.

ஞானியார் நினைவு மலர் : கட்டுரை 4

திருவெண்ணெய் நல்லூரில் சுவாமிகள் பேருரை

[தொகுத்தவர் : உதவிக் காரியதரிசி-திரு. கந்தநரசிம்மன்]

மெய்யன்பர்களே !

இத் திருத்தொண்டில் அடியேனை அகப்படுத்திய இறைவன் திருவருளை மறவாதிருக்கும் கடமை உண்டு. அத் திருவருளும் தங்களன்பும் துணையிருக்க, அடியேன் இக் கடமையைக் கூடியவரை செய்வேன் என்று துணிகிறேன்.

நாட்டின் பெருமை : நாம் கூடியிருக்கும் இந்த நாடு நடுநாடெனப்படும். சேர சோழ பாண்டியராகிய மூவருக்கும் உரியதாக நடுநிலைமையிலிருந்தமையால் இதை நடு நாடென்று நூல் வழங்கும். நம் பெரியோரையும், நம்மையும் நம் சந்ததிகளையும் உய்விக்கத் தோன்றிய திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தோன்றிய நாடு ஈதாம். மேலும், மெய்கண்ட தேவர் பெருமான் திருவவதாரம் செய்ததும் இந்த நாட்டிலேதான். அருணந்தி சிவாச்சாரியர் தோன்றியதும், நாயன்மாரில் எழு பேர் அவதரித்ததும் இந்த நாட்டில்தான். இப்படிச் சமயாசாரியரும், சந்தானசாரியரும் தோன்றிய இந்நாட்டில் இப்போது சைவமிருக்கும் நிலையைப் பார்த்தால் வருந்தத் தக்கதே.

ஊர்ப் பெருமை : இந்த ஊரை 'நல்லூர்' என்று பெரியோர் வழங்கினர்கள். வெண்ணெய்க் கோட்டை கட்டி உலகன்னையாம் மங்களாம்பிகை தவம் செய்த ஊரானதால் இதற்கு வெண்ணெய் நல்லூர் என்று பெயர். "பித்தா பிறைசூடி" என்ற தேவாரப் பாட்டிலும் இவ் வூரின் பெயர் வருவது காண்க. "நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்" என்றும் வரும். மேலும் இவ் வூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்டதைப் பற்றிக் கூறுகையில், சேக்கிழார் சுவாமிகள் இதை "நல்ல அந்தணர் வாழும் வெண்ணெய் நல்லூர் நண்ணி" என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

ஆலயச் சிறப்பு : நாமிருக்கும் ஆலயத்தின் பெயர் அருட்டுறை. நம் முதல் ஆசையானது அநுபவிக்கவேண் டிய பொருள் மேலேயே செல்கிறது. இது ஜன்ம ஜன்ம மாக வருவது. இரண்டாவதுள்ளது அதிக ஆசையுள்ளவன் அதிக பணம் தேடுவது. அதன்பின், போக இச்சை உண் டாகிறது. இதனால் அநேக குற்றமிழைக்க நேரிடுகிறது. ஆனால் நமக்கு வேண்டுவன முக்கியமாக மூன்று. அவை தான் அருள் அன்பு அறம் என்பன. மனிதன் இரண்டுகால் பசு போன்றவன். பசுவுக்குப் புல், நீர், நிழல் தேவை யானவை. அம்மூன்றும் கிடைத்ததும் அது ஒருவித விடுதலை அடைவதுபோல, மனிதன் ஆணவம் கன்மம் மாயை என்ற கட்டுக்களினின்று விடுபட்டு வீடுபெற அருள்வேண்டும். விடுபட்டடைவது வீடு. நமக்கு அவ் வீட்டை அடைவிக்கத் துறையாயிருப்பது அருள். ஆகவே, இது அருள்துறை எனப்பட்டது. கடுவன் இளவெயினனார் என்ற தமிழ்ப் புலவர் பரிபாடலுள்,

"யாமிரப்பவை பொன்னும் பொருளும் போகமும்அல்ல
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்"

என்றார்.

"நின்னையா மிரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டானும் நுகரும் நுகர்ச்சியுமல்ல : எமக்கு வீடு பயக்கும் நின்னரு ளும் அதனை யுண்டாக்க நின்னிடத்து யாம் செய்யுமன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே"

என இதற்குப் பரிமேலழகர் மிக அழகாக உரை செய்திருக்கிறார். சைவர்கள் எப்போதும் இறங்கி உழைக்கவேண்டியது அருளே, அருள் துறையே. அதனாலேயே அன்புண்டாகும். அன்பால் அறம் வளர்க்கலாம். அப்படிப்பட்ட அருள் துறையில் நாமிருக்கிறோம்.

நாமிருப்பது குணிப்பொருள். அதாவது நம்மிடம் சிற்சில குணங்களிருக்கின்றன. முக்கியமானவை இன்பம் பற்றவும், அதற்கெனத் தொழிலைப் பற்றவும் செய்யும் குணங்களாம். இவை அறிவை மறைத்து அசாக்கிரதையை வெளிப்படுத்துங் குணங்கள். அதாவது அழிவுடைய தேகத்தில் அழிவில்லாத தேகியை இறுக்கிக் கட்டுவது குணம். பகவத் கீதையிலும் ஸ்ரீ கிருஷ்ணன் கசு-ம் அத்தியாயம் ரு-ம் சுலோகத்தில்,

" ஸத்வ ரஜஸ்தம இதிகுண : ப்ரக்ருதி ஸம்பவா :
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே தேஹிந மவ்யயம் "

என்று கூறுவது காண்க.

நாம் செய்யவேண்டுவது நம் குணதோஷங்களை அறிய வேண்டுவதே. நம் துன்பங்களை எப்படி நீக்குவதென்று நினைக்கவேண்டும். முற்சொன்ன முக்குணங்கள் நமக்கிருப்பதுபோல இறைவனுக்கில்லாமையால் இறைவன் நிர்க்குண : என்ற பெயருமுடையவன். அவன் ஆத்மாவுக்கு வரும் துன்பத்தைத் தவிர்ப்பவன்.

" சிவ : மஹேஶ்வர : ருத்ர : விஷ்ணு : பிதாமஹ :
ஸம்ஸார வைத்திய : ஸர்வக்ஞ : பரமாத்மா "

என்ற எட்டுப் பெயர்களில் இறைவனை ' ஸம்ஸார 'வைத்திய ' என்றதால் இறைவன் ஜீவர்களின் உயிருக்கு வந்த ஜன்ம ரோகமாகிய மலத்தைத் தொலைக்க வேண்டி வைத்தியன் மருந்து கொடுப்பதுபோல், நம்மைப் பற்றிய மலம் மாயை இவைகளை நீக்கி ஆனந்த நிலையை யடைவிக்கிறான் என்பதறிகிறோம். நேயத்தால் - அன்பால் - பொன்னம்பலவன் நம்மை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துகிறான்.

சிவ : என்பதிலும் ஒரு முக்கிய அர்த்தமுண்டு. அதாவது ஒவ்வொன்றிலும் தங்கியிருப்பவன் என்று பொருள். அப்பொருளை உணர்த்தவே இறைவன் என்று நந்தமிழர் உரைத்தனர்.

'சிவம்' என்பதற்கு மங்களம் என்றும் பொருளுண்டு. அம்மங்களமாகிய சிவத்தின் சம்பந்தமுடையதே சைவம். அதைப் பற்றியதே சைவ சாத்திரம். ஆனால் இதைச் சைவ சித்தாந்த சாத்திரமென்பர். இது திருக்கைலாயத்தில் நால்வர்க்குரைத்ததாகும். சித்தாந்தம் என்றால் முடிபு என்று பொருள். சிவபெருமானைப் பற்றிய முடிந்த முடிபுகளாகையின் இது சைவ சித்தாந்த சாத்திரமெனப்படும். சைவத்தைப் பரப்பி எல்லாருக்கும் இன்பம் அளித்தவரே இத் திருவெண்ணெய் நல்லூரில் பிறந்த குருமூர்த்தியாகிய மெய்கண்டதேவ ஸ்வாமிகள். 'திருவளர் நாட்டம் கருணையில்' என்ற பாட்டில் பட்டினத்தார் உரைப்பதுபோல், திருவருள் நாட்டத்தால் யாவும் மெய்யாகி இறைவனே மெய்யாகத் தோன்ற அவ்விறைவனைக் கண்டவராதலின் அவருக்கு மெய்கண்டார் என்னும் பெயர் வந்தது. காலாதீதமாகச் சைவம் நூல்களால், ஆசாரியர்களால், வளர்ந்தது. ஆனால் தற்போது சைவமது நிலை வருந்தத்தக்கதா யிருக்கிறது. ஆண் மக்கள் மட்டுமின்றிப் பெண் மக்களும் நன்குணர்ந்து சைவ நெறியில் நிற்றல் வேண்டும். பெண்மக்களால்தான் சைவம் சிறப்புற்றதென்பதைச் சேக்கிழார் சுவாமிகள்,

> "மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள்தெய்வம் வளவர்
> திருக்குலக் கொழுந்து"

என்ற பாட்டில் மிக அழகாகப் பாடி ஒரு பெண் சைவத் திருநீற்றைப் பரப்பிய பெருமையைக் கூறியிருக்கிறார். ஆகையால் முக்கியமாகப் பெண்கள் சைவத்தைப் பரப்ப முந்துதல் வேண்டும். இந்த ஊருக்குச் சமீபத்தில் நரசிங்க புரத்தில் இருந்தாண்ட அரசர்கள் நம் சைவத்தை வளர்த்தார்கள். அரசிகளும் மடங்களும், ஆசாரியர்களும் சைவத்தை வளர்த்தார்கள். ஆனால் நம் தற்போதைய அரசாங்கம் சைவத்தைப் பரப்பாவிடினும் நாம் பரப்பத் தடை செய்யாது சுதந்திரம் கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டில் பலர் - சைவர்கள் - பிற சமயத்தில் சேரும் நிலையிலிருக்கின்றனர். ஆனால் சைவ சித்தாந்தத்தைப் பற்றி, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த (Pope) போப் என்பாரும் (Godwin) குட்வின் என்பாரும் போற்றிப் போற்றி எழுதியிருப்பது நோக்கத்தக்கது.

சமீபத்தில் கனம் வைசிராய் தமிழ்நாட்டுக்குப் போந்த போது நம் சைவ சித்தாந்தத்தின் சார்பாக எவரேனும் ஏதேனும் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்களா ? இல்லை. ஆனால் சென்னையில் மகம்மதியர் அவருக்குப் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்கள். அப் பத்திரிகைக்குக் கனம் வைசிராய் இறுத்த மறுமொழி நோக்கற்குரியதாகும்.

நாம் செய்யவேண்டுவது நம் சைவ சித்தாந்தத்தைப் பரப்புதலே. இவ்வேலையைச் சைவ மடங்களின்மேல் ஏற்றி விடுவது வழக்கமாயிருக்கிறது. ஆனால் அது இயற்கையே. அதற்காகச் சைவ மடங்கள் தற்கால நிலையுணர்ந்து உதவி செய்ய முன்வருவது சிறப்பாகும். இதற்கோரறிகுறி, திருவாவடுதுறை மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ வைத்தியலிங்க சுவாமிகள் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு ரூ. 100 நன்கொடை யளித்திருப்பதாகும்.

கிருஸ்தவ மதத்தவர் " All India Reverends Conference " என்று பெரிய, ஒரு மகாநாடு கூட்டுவதுபோல நாமெல்லோரும் சேர்ந்துழைத்தால் தமிழ் நாடெல்லாம் சைவம் தழைத்தோங்கும்.

மௌனம்

[பேசாத ஆனந்த நிட்டை]

மா. ப. தியாகராஜன், பி. ஏ.

மோன மென்பது ஞானவரம்பு எனக் கூறக் கேள்விப் பட்டுள்ளோம். ஞானம் என்பது அறிவின் தெளிவே யாகும். அறிவின் தெளிவு அனுபவத்தால் வந்தாலல்லது பயனுடையதாகாது. பொடிபோடுதல் புகைபிடித்தல் முதலிய பழக்கங்கள் உடல் நலத்தைக் கெடுப்பன என எவ்வளவுதான் படித்தாலும் கேட்டாலும் பழக்கம் விடு படுவதில்லை. அனுபவத்தால் கெடுதலை உணர்ந்து தூய உணர்ச்சி பெறவேண்டும். அறிவால் நல்லன உணர்ந்து அதன்வழி பழகினாலல்லது, கல்வியால் பயனில்லை. எனவே, மௌன நிலையின் அனுபவங்களைக் கேட்டால் படித்தால் மட்டும் என்ன பயன் ? அதை உணரவேண்டுமானால்

அதற்குமுன் உழைப்புவேண்டும். சாதனம் வேண்டும். ஊதியம் பெற உழைப்பு அவசியமாகும்.

ஆனால் மௌனமே சாதனமென்றும் உழைப்பென்றும் கருதுவது தவறாகும். அதனால் தான் கோயிலுக்குப் போவ தெதற்கு? விழாவில் பணம் அதிகம் செலவு செய்வதேன்? மனமது செம்மையானால் போதாதா? என்ற வினாக்கள் எழுகிறது. மௌனநிலை எய்துதல் ஓர் பயனாகும். அது சாதனத்திற்கோர் சாதகமாகும். அந்தநிலையை எய்துவது, தாமே சித்திக்க வேண்டியதோர் வாய்ப்பாகும். அது வர வில்லையே என்று தன்னை நொந்து கொள்வதோ? இறை வனைப் பழித்துப் பாடுவதோ? அடியவர்கள் பாடல்களில் காணலாம். "பாழான என் மனம் குவிய ஒரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ." "எத்தனைவிதங்கள் தான் கற்கினும் கேட்கினுமென் னிதயமு மொடுங்கவில்லை." "கருவி கரணங்களோயக் கண்மூடி யொருகண மிருக்க வென்றால் பாழ்த்த கர்மங்கள் போராடுதே" என்றெல்லாம் தாயுமானவர் பாடுகிறார். மௌனநிலையின் இன்பத்தை ஒரு வாறுணர்ந்து மற்ற இன்பங்களைத் துச்சமென மதித்த நிலையில் அவ்வின்பத்தையே விழைந்து பாடினார்கள்.

முதலாவதாக அவ்வின்பத்தைப் பெற ஓர் ஆர்வம் உண்டாகவேண்டும். அவ்வார்வம் உண்டாகவேண்டு மெனின் ஏனைய விஷயாதி, புகழ், போகங்களில் அலுப்புண் டாய், அவைகளில் வெறுப்பெழ அமைதியை நாடவேண் டும். "நிழலினருமை வெயிலிலிருந்தால் தெரியும்" என்பது போல, உழைப்பின் வேகத்தால் அமைதியின் பெருமையை உணரவேண்டும். அப்பொழுதே அதில் ஆர்வம் உண்டாகும். அதன் அடைவு தற்போதத்தால் வருவ தன்று. இறைவனருளால் ஏற்படவேண்டிய தொரு இன்பமாகும். "சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று மாணிக்க வாசகர் பாடுதல்போல் அவன் அருளால் அவனை யுணர அமைதி பிறக்குமே யொழியே நாம் அமைதியை வருவித் துக் கொள்ளுதல் முடியாது. அது கருதியே அருணகிரிநா தர் பின்வரும் எளிய உபதேசத்தைச் செய்திருக்கின்றனர்.

"தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்தபடி யிருங்கோள் எழுபாரு முய்யக்

கொடுங் கோபச் சூருடன் குன்றந்துளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானேஉமக்கு வெளிப்படுமே."

மற்று நாம் செய்யவேண்டிய சரியை, கிரியை யோக முதலியன, அமைதியில் ஓர் ஆர்வம் உண்டாக்குவதற்கோர் சாதனங்களாகும். அந்த ஆர்வம் பிறப்பிக்கவே ஆன்றோர்கள் இந்துமதத்தில் பலவிதமாக வழிகாட்டியுள்ளார்கள். எனவே இந்துமதத்தில் பலதுறைகளைக் காண்கிறோம். சிறு வயதிலேயே பூஜாக்கிரமங்கள் கற்பிக்கப்பட்டு, விநாயகர் பூஜை சிறுவர்கள் செய்துவருதலால் எக்காரியத்தையும் திட்டமாகச் செய்ய ஒருதிறமை அவர்களுக்கமையும். அப்படி ஆசாரநியமங்களில் பழகாதவர்கள் அறிவிற் சிறந்தவர்களாக இருந்த போதிலும் காரியங்களைச் செயல் முறையில் ஒழுங்காக நடத்தத் திறமையற்றவர்களாக இருப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட பண்பாடுகளமைய நல்ல காரியங்களில் மனதை ஈடுபடுத்த வாழ்க்கையில் விதி வழியேற்பட்ட செயல் முறைகளைச் செம்மையுற நடத்தி வருவோமானால் இறைவனருள் " தாமே உமக்கு வெளிப்படுமே " யென்று அருணகிரிநாதர் உபதேசிப்பது போல் கிட்டும். எவரேனும், மகான்கள் சரித்திரங்களைக் கவனிப்போமானால், தியானம் செய்து கொண்டிருந்தபோது இவைனைத் தரிசித்து ஞானமடைந்தார் என்று கேள்விப்படவில்லை.

மணிவாசகப் பெருமான் மந்திரியாயிருந்த போது எவ்வளவோ பூஜைகள் செய்திருக்கலாம். ஆனல், குதிரை வாங்கச் சென்றபோது, குருமுகமாக இறைவனருள் அவருக்குக் கிட்டியது. சுந்தரர் மணக்கோலத்தில் ஆண்டவனல் ஆட்கொள்ளப்பட்டார். புத்தர் பிரான் இராஜ போகத்தைவிட்டு, பட்டினி கிடந்து கடுந்தவம் புரிந்து அமைதிகாண முயன்ருர். முயன்று முடிவில் உடலை வதைப்பதில் பயனில்லை என்று கண்டு போதி மரத்தடியில் வேறு என்ன முயற்சி செய்வதென விசாரணை செய்ய அவர் ஞானமடைந்தார் என அவர் சரித்திரத்தில் காண்கிறோம். பட்டிணத்தடிகள் " காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே " என்ற ஒரு சொற்றொடர் கேட்டு, அமைதிக்கு முரணன வாழ்க்கையை அடியோடு துறந்தார். எனவே ஜீவபோதம் சிவபோதத்தால் என்று விழுங்கப்

படும் என்பது சொல்ல முடியாது. ஆர்வமிருப்பின் அமைதி பிறக்கும். பின்வரும் உதாரணங்கள் மௌன நிலை இனைய தென நன்கு விளக்கும்.

ஒரு உயரத்தைத் தாண்ட வேண்டுமானால் ஒருவன் என் செய்கிறான். நெடுந்தூரத்தினின்றும் ஓடி வருகிறான். வந்து தாண்டுவதற்கென ஊக்கம்பெற உயர நிலைக்கருகில் நின்று எகுறுகிறான். அந்த நிற்கின்ற தருணத்தில் தைரியம் குன்றிடில் மீண்டும் ஓடுகிறான். எனவே அந்த நிற்கும் நிலையே, மௌன நிலையாகும். அந்நிலையில் பயகம்பனதி கள் ஏற்படில் அது தவறுதல் நிலையாகும். பக்குவமிருப் பின், அந்நிலையிலே ஒருவன் பவக்கடலைத் தாண்டி விடலாம். நிலைக்கு ஓடிவருதல் போன்றதே சரியை, கிரியை, யோகமார்க்கங்களும் ஏனையவுமாகும். அவைகளி லுள்ள ஆர்வமே மௌனநிலைக்கு ஆக்கமளிக்கவல்ல தாகும்.

மற்றும், ஒருவரை நாம் சந்திக்கச் செல்வோமானல், அவருடைய விலாசம் தெரிந்து கொள்கிறோம். பிறகு எந்த வேளையில் காணலாமெனத் தெரிந்து கொள்கிறோம். அவ் வளவும் தெரிந்து சென்றாலும், அவர் நாம் போகும் நேரத்தில் ஓய்வாக இருக்கவேண்டும். இருந்தாலும்நம்மைச் சந்திக்க மனம் வைத்து வெளியில் வரும்வரை நாம் காத் திருக்க வேண்டியிருக்கிறதல்லவா ? அதுபோல் இச்சீவன் சிவனைச் சந்திக்க "முன்னவன் நாமம் கேட்டு, பின்னவற்கே பிச்சியாகி" புலர்வதன் முன் காணவேண்டும் என்று அப்பர் பிரான் கூறுவது போன்று பலவாறு முயன்று சந்நிதிக்குச் சென்று கண்மூடி "வருவாரோ ?" என்று ஏங்கும் நிலை மௌன நிலையாகும்.

மனம், கனவான்கள் வீட்டு வாயிலிலிருக்கும் காவற் காரன் போல் உலவிக்கொண்டிருக்கும். காவற்காரன் மூலம் கனவானுக்கு நாம் வந்திருப்பதைத் தெரியப்படுத்து வதுபோல், மனதை நிறுத்தி இறைவன்பால் உள்முக நோக்கிற் செலுத்தவேண்டும். நிறுத்துவதோடு சிலர் நின்று விடுகின்றனர். அது யோகசித்தி யெனப் பெருமிதம் கொள்கின்றனர். சிவன்பால் மனதைச் செலுத்தினலல்லது சிவனகிய கனவான் வெளிப்படான். வந்தவுடன் வந்து விட்டார் என்ற ஒரு சந்தோஷம் பிறக்கிறதல்லவா ? அது

போன்றதே பேசாத ஆனந்த நிட்டையும் மௌனநிலையு மாகும். எனவே ஆலயந்தொழுதல், வழிபாடு செய்தல், பாராயண முதலிய பூஜைகள் வீட்டில் செய்தல், விரதாதி கள் அனுஷ்டித்தல் இவை யெல்லாம் இன்றியமையாத சாதனங்கள். அவைகளால்தான் அவ்வானந்த நிட்டை யடையத் தீவிர இச்சையுண்டாகும். அச்சுபேச்சை யுண்டா னல்தான் ஆனந்த நிட்டை கைகூடும். வெறும் மனம் அடக்குதல், கனவான் வாயிலில் காவற்காரனை நிறுத்தி அவனுடன் சல்லாபமாகப் பேசிக்கொண்டிருப்பதை யொக்கும். மனதிற்கு அப்பர் சுவாமிகள் என்ன உபதேசம் செய்கிறார் :—

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்மாதி யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறுநில்லே"

இது சைவசமய உபதேசம். தற்போது மனம் அடக்க மார்க்கங்கள் பேச்சுத்திறமையினால் பலவாறு யோக மென்ற பெயரால் போதிக்கப்படுகிறது. அதில் ஒரு ஆர்வம் மக்கள் கொண்டு இறைவனிடம் கொண்டுள்ள பக்தியைப் பறிகொடுக்கின்றனர். படித்தவர்களும்அநுஷ்டானமுடைய வர்களும் அவ்வாறு நிலைமாறுகின்றனர். "மலையே வந்து விழினும் மனிதர்கள் நிலையினின்றும் தவறுதீர்" என்ற அப்பர் சுவாமிகள் உபதேசத்தை, சைவர்களும் ஆசார அனுஷ்டான ஆலய வழிபாடுடையவர்களும் மனதில் உறுதியாகக் கொண்டு ஆனந்த நிட்டை இறைவனருளால் அடைய முற்படவேண்டு மென்பதே எனது வேண்டு கோள்.

இந்த மௌனநிலை கூடுவது வார வழிபாட்டில் ஓரங்க மாகயிருந்து வருகிறது. இதர அங்கங்களை அதற்குத் துணையாக அமைத்துக் கொள்ளவேண்டு மென்பதை இதனின்றும் தெரிந்து கொள்ளலாம்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மலர் 30 | ஹேவிளம்பி ஐப்பசி 1957 அக்டோபர் | இதழ் 10

சமயப் பொறை

ஆசிரியர்

இறை, உயிர், தளை என்பவைகள் நிலைத்து நிற்கும் பொருள்கள். இவைகளைப்பற்றி அறிவுள்ள மக்கள் பல கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். அப் பொருள்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு உள்ளவைகள். அத் தொடர்பைப் பற்றியும் மக்கள் பல கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள். அக் கருத்துக்களின் தொகுதிதான் சமயம் என்ற பெயரால் வழங்கப்படுவது.

மக்கள்உடைய எண்ணம் போக்கு பல தரப்படவைகளாக இருக்கும். அவரவர்களுடைய அறிவின் ஏற்றத் தாழ்ச்சிக்குத் தக்கபடி மாறுபடும். அம் மாறுபாடு தனிப்பட்டார் வகையிலும் தொகுதியார் வகையிலும் இனத்தார் வகையிலும் வெவ்வேறாக இருக்கும். இவ் வேறுபாடுகள் இயல்பேதான்.

கருத்துக்கள் வேறுபட்டிருக்கும்போது, கருத்துக்களின் தொகுதிகளும் வேறுபட்டு நிற்கும் அல்லவா? முப பொருள்களைப் பற்றிய கருத்துக்களின் தொகுதி சமயம் என்று மேலே கூறியவகையில் வேறுபடும் மக்களின் நிலைகளுக்குத் தக்கபடி சமயங்களும் பல வேறுபாடுகளில் நிற்கும்.

அச் சமய வேறுபாடுகளில் சில ஒத்தும் சில ஒவ்வாமலும் இருக்கும். ஒவ்வாமல் போகுமாகில் அது பூசல் எனப்படும். இந்தவகையில்தான் சமயப் பூசல் உலகில்

தோன்றுகிறது. ஒத்துப்போகும்பட்சத்தில் பூசல்ஏற்படாது. அதுவே சமயப் பொறை எனப்படும். சமயங்களில் பூசல்களும் பொறைகளும் இருந்திருக்கின்றன. பூசல்களோ கணக்கற்ற கேடுகளை விளைத்திருக்கின்றன. பொறையோ கேடுகளை நீக்கி நன்மையே விளைத்திருக்கின்றது.

பலப்பல நாட்டு வரலாறுகளில் சமயப் பூசல்களே மிகுதி. அவைகள் பயங்கரமாகவும் இருக்கும். ஆனால் சில சமயங்களில் சமயப் பொறைகள் தோன்றி யிருக்கின்றன. அவைகளே மனிதனுடைய மேன்மைக் குணநிசயங்களை எடுத்துக் காட்டுகின்றன.

சில சமயங்களுக்குள் பகைமை இல்லாமல் தோன்றின போதிலும் நாளாவட்டத்தில் பல வேறு காரணங்களினால் பகைமை தோன்றி விடும். அப்போது பூசல்கள் தோன்றி மக்களின் நிம்மதியைக் கெடுத்துவிடும். அப்போது மக்களின் துன்பங்களை எடுத்துக் கூறவே அஞ்சுவோம்.

இந்து வைதீகச் சமயத்திற்கும் பௌத்த சமணங்களுக்கும் முதலில் என்ன பகைமை இருந்தது? ஆனால் நாளாவட்டத்தில் சமயப் பூசல் எவ்வாறு பெருகிவிட்டது? அது போலவே கிறிஸ்தவத்திற்கும்—யூதத்திற்கும் என்ன கருத்து வேற்றுமை இருந்தது? கிறித்துவத்திற்கும் இசுலாம் சமயத்திற்கும் என்ன வேறுபாடு இருந்தது? ஆனால் வரலாற்றில் எப்படிப்பட்ட பூசல் தோன்றின. எழுதினால் மனம் நொந்து சோர்ந்து சீரழியும் அல்லவா?

உலக வரலாறுகளைக் கூறும்போது மிகவும் உணர்ச்சி ததும்பிய செய்திகள் நடுக்கால வரலாறுகளே ஆகும். அப்போது மக்கள் கல்வியில் தாழ்ந்திருந்தார்கள். எந்தச் சிறு செய்திக்கும் உணர்ச்சி பொங்கக் குதித்து எழும்புவர்கள். மண், பெண், பொன் என்ற மூன்று கவர்ச்சிகளுக்குமே அன்றிச் சமயம் என்ற நிலையிலும் மிகுந்த உணர்ச்சி கொண்டிருந்தார்கள். வெகு சிறிய காரணத்திற்கும் கொடிய போராட்டங்களும் தண்டனைகளும் இடுவார்கள். இந்த முறையிலே பூசல்களும் கொலைகளும் நடந்தன.

மேல் நாடுகளிலே வெவ்வேறு சமயங்களுக்கு இடையிலே ஏற்பட்ட பூசல்களேயன்றிக் கிறிஸ்தவத்திலேயே உட் கோட்பாடுகளில் பிளவுகள் ஏற்பட்டுக் கணக்கற்ற கொடுமைகள் தோன்றின. இந்து நாட்டிலோ முதலில்

சமண பௌத்த சமயங்களுக்கும் வைதீகச் சமயங்களுக்கும் ஏற்பட்ட பூசல்கள் ஒருபுறம் ஓங்கியிருக்க, வைதீகர் களிலேயே சைவத்திற்கும் வைணவத்திற்கும் பூசல்கள் தோன்றின. இவைகள் எல்லாம் கல்வியும் பண்பாடும் குறைந்திருந்த காலங்களில் நிகழ்ந்தன எனலாம். படிப்பு முதிர்ச்சி அடைந்தபின்னர் வெறும் கோட்பாடுகளுக்கு என்று பூசல்கள் உண்டாவதில்லை. அது பொருந்தியமட்டும் நாம் நல்ல காலத்தில் இருக்கின்றோம் என்று கூறலாம்.

சமயப் பூசல்களைப்பற்றிச் சரித்திர வரலாறுகளைப் படிக்கும் மாணவர்கள் 'என்ன கொடுமை' என்று அக் காலத்தைப்பற்றிப் பரிதாபப்படுவார்கள். இப்படியும் நிகழ்ந் திருக்குமோ என்றும் ஐயப்படுவார்கள். வெறுங் கொள்கைகளுக்காக ஆயிரக்கணக்கில் மக்கள் கழுவில் உயிர் துறப்பார்களா என்றும் கேட்பார்கள். நம்பிக்கை இல்லை என்ற காரணத்தை முன்னிட்டு அருமையான சிற் பங்களையும் கட்டிடங்களையும் அழிப்பார்களா என்றும் கேட்கலாம். இவைகள் ஒரு பகுதியாவது உண்மையாக இருக்கும் என்று விஜயநகர சாம்ராச்சியத்தின் பாழ் நகரங் களையும் இடிந்த கோயில்களையும் கண்டு ஊகிக்கலாம். ஆனால் இவ்வாறாகப் பூசல்களே நிறைந்திருந்தனவா ? சமயப் பொறை என்ற நற்குணம் அக் காலங்களில் இருக்க வில்லையா ? என்று மற்றொரு கேள்வி கேட்கலாம்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் சமயப் பொறை காட்டக் கூடிய பலவேறு வரலாற்றுப் பகுதிகள் ஏற்பட்டிருக் கின்றன. அவைகளை வரலாற்று மாணவர்களும் பொது மக்களும் எளிதாக அறிவதில்லை. அவ்வாறான நிகழ்ச்சிகளை வரலாற்று நூல்களோ சமய நூல்களோ மிகவாகப் போற்றுவதில்லை. அவைகளில் ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

முதலில் சமணத்திற்கும் சைவத்திற்கும் முன்னாளில் ஏற்பட்ட பூசல் மறைந்து போய்ச் சமரசக் கொள்கையாகிய சமயப் பொறை நிகழ்ந்த செய்தி கூறுவோம். கோவை வட்டத்தில் தென்கோடியில் ஆனைமலைத் தொடர்ச்சியில் திருமூர்த்தி மலை என்ற ஒரு புனிதத்தலம் இருக்கிறது. அங்கே மலைகளிலிருந்து நீர்வீழ்ச்சி தோன்றி அடிவாரத்தில் பாய்ந்து அழகிய அருவியாக ஓடுகிறது. அங்கே ஒருபெரும்

பாறையில் ஒரு சமணதீர்த்தங்கரரின் திருஉருவம் இருக்கிறது. அதில் இடையில் தீர்த்தங்கரர் இருபுறங்களில் இரண்டு சாமரேந்திரர்கள் கவரிவீச வீற்றிருக்கின்றார். இது அருகக் கடவுளின் சின்னமாகும். இதனைத் திருமூர்த்தி என்று சூளாமணியும் போற்றியிருக்கின்றது.

இந்தத்தலம் ஒரு சமணர் புனிதத்தலம் என்பதற்கு அத்திருவுருவம் மட்டுமேயன்றி அப் பாறைக்கு அடியில் சமகிலப் பாங்கில் பொறிக்கப்பட் டிருக்கும் ஒரு கல்வெட்டே சான்றாக இருக்கிறது. இக் கல்வெட்டில் அந்த இடத்தை அமண சமுத்திரம் என்றும் அந்த மூர்த்தியை அமணேசுவரர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இந்தத் தலம் ஒரு சமண புனிதத்தலம் என்பதற்கு ஒரு சிறிதும் ஐயமில்லை.

என்றாலும், இதனைத் தற்காலப் பொதுமக்கள் என்ன என்று வழங்குகிறார்கள்? பாறையில் உள்ள மூர்த்தியைத் திரிமூர்த்தி என்றும், கோயிலைத் திரிமூர்த்திக்கோயில் என்றுமே வழங்கி வழிபடுகிறார்கள். அரி அரன் அயன் என்ற மும்மூர்த்திகளின் திரி உருவமாக அதனை மாற்றி அண்மையில் அதற்கு ஒரு புராணமும் இயற்றி வைத்திருக்கிறார்கள். எத்தனை எளிதில் சமண சமய உருவம் இந்து சமய உருவம் ஆக மாறிவிட்டது பாருங்கள். இது சமயப் பொறையின் வேலை அல்லவா?

மேலும், அந்தத் தலத்தின் குறுநில மன்னனாக இருந்த எத்துவப்ப நாயக்கன் என்ற இந்து சமயத் தலைவன் அக் கோயிலுக்கு 1793ம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்து கல்வெட்டில் பொறித்திருக்கிறான் (186/27) அதின்படி தன் குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு திருமணத்தின் போதும் அக் கோயிலுக்குக் காணிக்கை தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகவே வெகு எளிதில் சமணத் திருவுருவத்தை இந்து உருவமாக்கிவிட்ட வரலாறு இதனால் தெரிகிறது. இது அவர்களுடைய சமயப் பொறையைக் காட்டுகிறது.

மேலும், கோவை வட்டத்தில் பூந்துறை நாட்டில் பண்டைக் காலத்தில் பல சமணக் கோயில்கள் கட்டப்பட்டன. அவைகளை மேல் பார்வை பார்ப்பதற்குப் பல சமண குடும்பங்கள் இருந்தன. அக் குடும்பங்களில் பல கற்றோர்கள் இருந்தார்கள். அவர்களில் சிறந்த புலமை

வாய்ந்தவர்கள் தோன்றி அரிய நூல்களை எழுதியுள்ளார்கள். விஜயமங்கலத்தில் பெருங் கதை எழுதிய கொங்குவேளிரும், சனகாபுரத்தில்(சனகை) நன்னூல் எழுதிய பவணந்தி முனிவரும், களந்தையில் உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் இருந்திருக்கிறார்கள். விஜயமங்கலம், அரசண்ணாமலை, சீருபுரம், பூந்துறை, வெள்ளோடு முதலிய ஊர்களில் உள்ள சமணர் கோயில்களை அண்டிக்கொண்டு இந் நாளிலும் சில சமணக் குருக்கள் இருக்கிறார்கள். சுற்றுப் பக்கங்களில் உள்ள இந்து சமயத்தவர்கள் பேதம் பாராட்டாது இக் கோயில்களுக்கு வழிபாடு இயற்ற இப்போதும் செல்லு கிறார்கள். இது சமயப் பொறை அல்லவா ?

இனி, கொங்குச் சோழர்கள் ஆண்ட காலங்களில் அதாவது 6, 7-ம் நூற்றாண்டுகளின் முன் இக் கோயில்களுக்குப் பல நிலங்கள் தானம் செய்யப்பட்டன. அத் தானங்கள் பெரும்பாலும் இந்த அரசர்களும் வியாபாரிகளும் வேளாளர்களுமே செய்திருக்கிறார்கள். சமயப் பொறை இன்றியா இவைகள் செய்யப்பட்டன ?

இனி சைவ வைணவ சமயங்களிலும் பூசல்களுக்குப் பதிலாகச் சமயப் பொறை இருக்கக் காண்கிறோம். ஒவ்வொரு சிவாலயத்திலும் திருமாலுக்கு ஒரு கருவறை இருப்பதைக் காணலாம். திருமாலின் லீலைகள் அடங்கிய சிற்பங்கள் இருக்கக் காணலாம். பொதுவாகவே சைவ மக்கள் வைணவப் பெயர்களை இட்டுக்கொள்வது சகஜம் அல்லவா ? இதுவும் சமயப் பொறையின் சார்பாக இருக்கிறதல்லவா ?

மேலும், சமயப் பற்றில் வைணவர்கள் பிடிவாதம் படைத்தவர்கள் என்று மக்கள் நினைப்பது உண்டு. ஏனெனில் எந்த வைணவனும் சைவப் பெயர்களை இட்டுக் கொள்வது அரிது. ஆனால் தற்காலத்தில் வைணவ நாயுடுக்களும் வைணவப் பிள்ளைமார்களும், சுப்பிரமணியன், நடராசன் பழனியப்பன் என்ற சைவப் பெயர்களை இட்டுக் கொள்வது சகஜமாகிவிட்டது.

இனி, கோயில்களில் உள்ள சிறு அறைகளும், சிற்பங்களும் ஆராயத் தகுந்தவைகள். ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வைகுண்டம், திருக்குறுங்குடி, முதலிய வைணவக் கோயில்களில் நடராசர், முருகபிரான், பிள்ளையார் முதலிய திருவுருவங்கள் ஆங்காங்கு இருப்பதைக் காணலாம். மற்றும்

வைணவக் கோயில்களில் சிவாலயங்கள் இருப்பதும், வைணவ மடங்களின் பார்வையில் சிவன் கோயில்கள் பரி பாலிக்கப்படுவதும் நெல்லை வட்டத்தில் சாதாரணமாகக் காணலாம். இந்த சான்றுகள் சமயப் பொறையினைக் காட்டவில்லையா ?

சோழர், பாண்டியர், பல்லவர் வாலாறுகளில் சமயப் பொறையினை நிரூபிக்கின்ற கணக்கற்ற சான்றுகள் இருக் கின்றன. இவைகளையெல்லாம் ஆராயும்போது பூசல்களைக் காட்டிலும் பொறையே மிகுதியாக இருக்கக் காண்போம். பூசல்களை நிரூபிக்கும் சான்றுகள் புராணங்களிலும் கவிதை களிலுமே உண்டு. வரலாற்றுப் பகுதிகளிலோ, கல்வெட்டுக் களிலோ மிகக்குறைவு, ஆகவே,

'மிகை நாடி மிக்க கொளல்'

என்ற வள்ளுவர் வாக்கைக்கொண்டு ஆராயின், நமது நாட்டில் பூசலைக் காட்டிலும் பொறையே மிகுதியாக உண்டு என்று கொண்டால் அதுவே சரியென்று ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா ?

திருமூலர் எண்ணாயிரம்

டாக்டர்–பு. வே. தேவராஜ முதலியார்

சைவ உலகிலே பத்தாவது திருமுறையாகத் தொன்று தொட்டு வைத்து எண்ணப்பட்டுள்ள நூல் திருமூலர் திரு மந்திரம் மூவாயிரம் என்பது. அந்த நூலிலே நமக்கு அள விலாப் பற்று ஏற்படும்படி ஆண்டுக்கு ஒரு முறையாக ஒவ் வொரு மந்திரமாக மூவாயிரமும் திருமூலரால் நமக்குத் தரப்பெற்றது என்று தெய்வச் சேக்கிழார் பெருமான் விதந்து அருளினார்கள். ஆயினும் அம் மூவாயிரத்திலே அகச் சான்றாக, திருமந்திரம் 74-ம் செய்யுள் கூறும்.

செப்பும் சிவகாமம் என்னும் அப்பேர்பெற்று
அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடியுகம் இருந்தேனே (74)

திருமந்திரம் மூன்றும் தந்திரம் இருபதாம் பகுப்பு அமுரிதாரணை தலைப்பில் 6 பாடல்கள் இருக்கின்றன. 2-ஆம் தந்திரத்து, கற்பக்கிரியை தலைப்பில் 41-பாடல்கள் இருக்கின்றன. இப்பாடல்கள் எப்படி இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்பதை கூர்ந்து கவனிக்கவேண்டும். மேலும் பல இடங்களில் பாடல்கள் அந்தாதித் தொடர்பு இல்லாமலே இருக்கிறது. திருமூலர் வைத்தியக் கருக்கிடை 600. திருமூலர் வைத்தியம் 1000. திருமூலர் ஞானம் 84. திருமூலர் ஞானோபதேசம் 30. நடுவணை ஞானம் 30. ஞானக் குறி 30. சோடச ஞானம் 16. ஞானம் 11. இப்படி பல நூல்கள் அச்சில் வந்திருக்கின்றன.

சித்தர் நூல்களிலே, அகத்தியர் அருளிய தேற்ற மானது பண்டைய நூல் பரிபாஷைத் திரட்டு. அது பல சித்தர் நூல்களின் ஆராய்ச்சித் தொகுப்பு. அது ஐந்து காண்ட முடையது. அதில் இரண்டாம் காண்டத்தில் 37-வது பாட்டில், 'எண்ணாயிரம் திரட்டித் திருமந்திரத்தை யிருநூறுய்த் திருமூலர் பாடி வைத்தார்,' என்ற வாக்கியம் திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம் என்பதை காட்டுகிறது.

பொதுவாக எல்லாச் சித்தர் நூல்களிலும் வாதம், வைத்தியம், யோகம், ஞானம், வேதாந்த சித்தாந்தம், ஐம்பூத விளக்கம், தத்துவ விசாரணை, பூசை நெறி, உபாசனை மற்றும் பல கலை ஞானங்களையும், விரவியும் நிரவியும் பாடியிருப்பது மரபு. அத் திருமூலர் எண்ணாயிரத்தினின்று இத் திருமந்திரம் மூவாயிரம் பிரித்தெடுத்து தொகுப்பப் பெற்றது என்பது, இத்திரு மந்திரத்தைப் படிக்கத் தொட்ட நாற்பது ஆண்டுகளாகவே அடியேனுடைய எண்ணம். இம்மூவாயிரம் தனித்த சித்தாந்த சாஸ்திரத் தொகுப்பாய் இல்லாமல் வேறு பல சமயக் கொள்கைகளும் அதில் இருக்கின்றன. சிறப்பாகத் திருமூலர் சித்தராகையால் சித்தர் சம்பிரதாயக் கொள்கைகள் பல இதில் நிரம்பியிருக்கின்றன.

திருமூலர் மூவாயிரத்தில் குருமட வரலாறு வருமாறு.

கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.

மேற்கண்ட பாட்டில் ஏழு சித்தர்கள் பெயர் நன்ருகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சித்தர்கள் பெயராலே பல சித்தர் நூல்கள் இருக்கின்றன. முக்கியமாக நமக்குக் கிடைக்கும் சித்த நூல்கள் போகர் ஏழாயிரம், போகர் கற்பவிதி, போகர் நிகண்டு, போகர் சரக்குவைப்பு, முதலியன. இவருடைய சீடரே புலிப்பாணி முனிவர். அவரும் எண்ணிறந்த நூல்கள் செய்துள்ளார். தன்னுடைய நூல்களில் தன் குரு போகர் பெயரைப் போற்றியுள்ளார். மேற்படி பாட்டிலுள்ள காலாங்கர், காலாக்னி ருத்ரர் என்று பிறழ்ந்து பொருள்கொண்டு சிலர் எழுதியுள்ளனர். இவர் காலாங்கி நாயஞர் என்று சொல்லப்படும் சித்தர்தான். காலாங்கி நாயஞருடைய நூல்கள் பல உள்ளன. தீக்ஷா விதி, பட்சணி, சூத்திரம், பலதிரட்டு, ரகசியம், பூஜாவிதி, தண்டகம், வாத ஞான சூத்திரம் முதலியன. இவற்றிலும் மேற்கண்ட நாயஞர் தன் குரு தேவராகிய திருமூல நாயஞரைப் பற்றிப் புகழ்ந்திருக்கிருர். புலிப்பாணி முனிவர் ஓரிடத்தில் தன் நூல் தொகையைக் குறிப்பிடும்போது,

பாரப்பா போகருட கடாட்சத் தாலே
பண்பாக விளங்கத் தானுஞ்
சீரப்பா கொக்கோகத் திரட்டொன் றப்பா
திறமுடனே நூற்றைம் பதுவுஞ் சொன்ஞேங்,
கூறப்பா வாடை பதினுறிற் சொன்ஞேங்
குருவான ஞானமொடு தொண்ணூற்ருறு,
வீரப்பா சோசியமுந் நூற்றுக்குள்ளே விளம்பிஞேம்
நேத்திரம்போல் தோணும் பாரே.

தன் குரு போகருடைய பெயரை மேற்படி பாடலில் குறிப்பிடுவது போற்றத்தக்கது.

காலாங்கிநாதர் பூஜாவிதி என்பதில் காப்புப் பாடலில்,

ஆதியிலே அமைத்தவிதி யெழுத்தி ஞலே
அருள்பெருகும் திருமூலர் பாதம் போற்றி
நீதியுடன் பூசைவிதி தன்னை மைந்தா
நேர்மையுடன் கைமுறையாய்ப் பாடு தற்குப்

போதமெனும் ஞானபூ ரணமே காப்பு
பூரணமாய் நின்ற மனோன்மணியே காப்பு
சோதியெனுங் கருணைவிழி மலர்க்கண் ணுன
சுந்தரமாய் நின்றகண பதிகாப் பாமே.

தன் குரு திருமூலரைக் குறித்தது குறிப்பாக நோக்கத் தக்கது.

சமீபத்திலிருந்த வடலூர் இராமலிங்க ஸ்வாமிகள் :

" சாஸ்திரங்களில் சிறந்தது திருமூலர் தந்திரம். இது மொத்தம் 8000 பாடல்கள் அடங்கியது. தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்'' என்று வசனக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிருர்கள். கொங்கணர் நூலிலும், போகர் நூலிலும் மச்ச முனிவரும், அகத்தியரும் மூலர் எண்ணுயிரம் பாரு என்று திருமூலர் பாடல் தொகை எண்ணுயிரம் என்றே பரம்பரையாகக் கூறியுள்ளார்கள். இந்த எண்ணுயிரம் திருமந்திரம் அச்சுக்கு வரவில்லை. ஆனாலும் ஏட்டுச் சுவடியில் இருப்பதாகப் பலர் கூறினர்களையன்றி ஒருவரேனும் கண்ணுக்குக் காட்டவில்லை.

திருமூலர் கருக்கிடையின் முகவுரையில் இதனைப் பதித்த ஷண்முகாநந்த ஸ்வாமிகள் கீழ்க்கண்ட இரண்டு பாடல்கள் எண்ணுயிரத்திலிருந்து குறிக்கப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

மன்மூலிகை வகை வல்லுப்புத் தீநீர்
பன்ருதுடற் பொருட் பாடாணம் லோகம்
இன்னியற் சத்து ரசமணி யோகம்
ஒன்றற் கொன்றுயர் விலக்காம் நோய்க்கே.

மருப்பதுடல் நோய் மருந்தெனல் சாலும்
மருப்பதுள நோய் மருந்தென லாகும்
மருப்பதினி நோய் வரா திருப்ப
மருப்பது சாவை மருந்தென லாமே.

தஞ்சை சரபோஜி மகால் புத்தகசாலை எண்சுவடியில் மூலர் எண்ணுயிரத்தில் ஒரு பகுதி என்று இருக்கிறது.

ஆதலால் இக்கட்டுரையைக் கூர்ந்து நோக்கும் அன்பர்கள திருமூலர் எண்ணுயிரம் திருமந்திரம் என்ற பெரு நூல் ஒன்று உண்டு என்றும், அதனின்று திரட்டியதே திருமந்திரம் மூவாயிரம் என்றும் மனதிற் கொண்டு எண்

ளுயிரத்தின் எட்டுச்சுவடியை எட்டியமட்டும் தேடிப் பார்ப்பார்கள் என்றும், அதற்குத் திருமூலரின் இன்னருளையே நாடுகின்றேன்.

நாளந்தா பல்கலைக் கழகமும் காஞ்சியும்

கோவை கிழார்

பண்டைய பாரதத்தில் தோன்றிய கல்வி நிலையங்களில் மிகப் புகழ்பெற்றது நாளந்தா மகாவிகாரம் என்ற பல்கலைக் கழகம் ஆகும்.

ஓரளவு படித்த மாணக்கர்கள் தாம் ஏற்கனவே படித்த படிப்பினைப் பின்னும் பெருக்கி அறிவின் முதிர்ச்சி பெறுவதற்காகப் பல தொலை நாடுகளிலிருந்தும் பாரதம் வந்து பல ஆண்டுகள் படித்துத் தேறிய நிலையம்தான் நாளந்தா மகாவிகாரம் என்பது. அந்நிலையத்திற்குப் படிக்க வந்தவர்கள் கொரியா, மங்கோலியா, ஜப்பான், சீனா, துகாரா, திபேத்து, இலங்கை முதலிய தொலைவு நாடுகளிலிருந்து வந்தார்கள் என்று யுவான்சங்கு, இத்சிங்கு முதலிய யாத்திரிகர்கள் கூறிப் போந்திருக்கிறார்கள். அவர்களில் யுவான் சங்கு என்ற சீன யாத்திரி கி. பி. 635 முதல் ஆறு ஆண்டுகளும் இத்சிங்கு என்றவர் 675 முதல் 10 ஆண்டுகளும் நாளாந்தாவிலேயே தங்கி இருந்து படித்தார்கள். அவ்விரு பெரியார்களும் எழுதி வைத்திருக்கும் விவரங்களிலிருந்தே அந்தப் பல்கலைக் கழகத்துச் செய்திகளை அறியலாம்.

இந்த மிகப் பெரிய கல்விக் கழகத்தில் 8500 மாணவர்கள் படித்தார்கள். அவர்களுக்கு 1510 ஆசிரியர்கள் கற்பித்தார்கள். நாள்தோறும் 100 உபன்னியாசங்கள் நிகழ்த்தப்பட்டன. வெவ்வேறு தலைப்புக்களில் வெவ்வேறு வகுப்புக்களில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பல்கலைக் கழகத்திற்குள் புகவேண்டின் ஒரு தேர்தலில் வெற்றிபெற வேண்டும். அது மிகவும் கடினமானது. 100-க்கு 20 பேரே அதில் தேர்ந்து முன்னேறுவார்கள்.

அக்கழகத்தில் ஒரு ஆசிரியர் ஆறு மாணக்கர்கள் வீதம் கற்றுக்கொடுப்பார். பெரிய வகுப்புக்கள் என்பதே கிடை

யாது. ஆகவே ஒவ்வொரு மாணுக்கனுடைய தனித்தேர்ச்சியும் உறுதி செய்யப்பட்டது. இந்த முறையில் அந்தப் பல்கலைக் கழகத்தின் கல்வித் திட்டம் வெற்றிபெற்று விளங்கியது.

கற்பிக்கப்பட்ட பாடங்கள் மிக விரிவானவை. வடமொழி பாலிமொழி இவ்விரண்டிலும் இருந்த ஆரிய பௌத்த நூல்கள் எல்லாம் கற்பிக்கப்பட்டன. சமயம், உலகியம் இந்த இரண்டு நிலைகளும் கொள்ளப்பட்டன. சிறப்பாக, விஞ்ஞானம், வரலாறு, நற்கலைகள், தொழில் முறைகள், இலக்கண தர்க்கம், தத்துவ ஆராய்ச்சி, சாங்கியம், யோகம், நியாயம், மருத்துவம், சிகிச்சை, வித்தை முதலியவைகள் எல்லாம் போதிக்கப்பட்டன. அவைகளில் மருத்துவம் கட்டாய பாடமாக இருந்தது.

யுவான் சுவாங்கு என்ற சீனத் துறவியார் கல்வியின் பொருட்டு இந்தியாவிற்குச் சீன நாட்டிலிருந்து வந்த பயணத்தில் பட்ட கடுமைகளை நினைத்தால் நெஞ்சு திடுக்கிடும். பாலைவனங்கள், பனி நீங்கா மலைகள், பகைவர் நாடுகள் இவைகள் எல்லாம் வெகு துணிவோடு கடந்து பாரத நாடு புகுந்து நாளந்தாவில் சீல பத்திரர் என்ற ஞாஞசாரியரிடம் யோக சாத்திரம் கற்றுக்கொண்டார்.

அக்காலத்தில் அப் பல்கலைக் கழகத்தில் மிகப் புகழ் பெற்ற அறிஞர்கள் கற்பித்து வந்தார்கள். பலவேறு காலங்களில் நாகார்ச்சுனர், ஆரியதேவர், ஆசங்கர், வாசுபந்து, தின்ஞகர் முதலிய உயர்ந்த ஞானிகள் கல்வி கற்பிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள்.

நாளந்தா பல்கலைக் கழகமானது வெளிநாடுகளிலிருந்து சிறந்த அறிஞர்களை வசீகரித்ததை ஒட்டி அப்பல்கலைக் கழகமானது பாரத நாட்டுக் கருத்தோவியங்களை வெளிநாடுகளுக்குப் பரப்பும் எண்ணத்துடன் பல அறிஞர்களை அனுப்பியது. அவ்விதம் சென்ற அறிஞர்கள் சிறப்பாகச் சீனு திபேத்து என்ற நாடுகளுக்குச் சென்று அங்கே சமய நூல்களைப் புகுத்தினதுமன்றி வடமொழியிலிருந்து அந்நூல்களைச் சீனமொழி திபேத்து மொழிகளில் இயற்றினுர்கள்.

இவ்வாறு பாரத தேசத்திலிருந்து சீனுவிற்குச் சென்று சமயப் பிரசாரமும் கல்விப் பிரசாரமும் செய்தவர்களில் சிறந்தவர்கள் குமார ஜீவர், பரமார்த்தர் முதலியோர்கள். திபேத்தில் வசித்தவர்களில் சாந்தரக்ஷிதர், பத்ம சம்பவர்,

கமல சீலர், ஸ்திரமதி, புத்த கீர்த்தி என்ற நாளந்தா அறிஞர்கள்.

நாளந்தா மகா விகாரமும் அதனைச் சார்ந்த மற்ற கல்லூரிக்கான விகாரங்களும் தங்களுக்கு உரித்தான முத்திரைச் சின்னங்களை வைத்திருந்தார்கள். அவர்களுடைய முத்திரைகள் அடியிற்கண்ட சொற்களைக் கொண்டிருந்தன. ஸ்ரீ—நாளந்த—மகாவிகார—ஆர்யபிக்ஷு — சங்கஸ்ய — அதானு "நாளந்தா மகாவிகாரத்தின் அதிகாரிகளுடைய" என்பது பொருள். மற்றக் கல்லூரி அல்லது விகாரங்களின் முத்திரைகள் சங்கம் அல்லது குணகாரம் என்று கூறப்படும். (ஸ்ரீ நாளந்தா மகாவிகார, குணகார புத்த பிக்ஷுணும்).

நாளந்தாவில் வெளிநாட்டு மாணவர்களுக்கும் தனிக் கல்லூரிகள் இருந்தன. சுவர்ண தீபத்தின் (சாவகம், சுமத்ரா) மன்னன் சைலேந்திர அரசன் பாலபுத்திர தேவன் நாளந்தாவில் ஒரு கல்லூரி அமைத்து அதற்கு வேண்டிய நிலங்களைத் தானம் செய்திருந்தான். மேலும் 815—854 கி. பி. ஆண்ட மகத அரசன் தேவபாலதேவன் மூலமாக மகதநாட்டுக் கிராமங்கள் ஐந்தையும் அக்கல்லூரியின் மேற்செலவுகளுக்காக ஏற்படுத்தி வைத்தான். சாவக நாட்டு (ஜாவா) மாணவர்களுக்குத் தேவைப்பட்ட உணவு (பிண்டபத), உடை (சீவரம்), இருப்பிடம் (சத்ர), படுக்கை, மருந்து (பேஷஜ்யதி), எழுதுகோல் (லேககாடி) முதலியவைகள் கொடுக்கப்பட்டன. இந்த நன்கொடையானது மகத மன்னனுக்குத் தூதுவன் பாலவர்மனால் தெரிவிக்கப்பட்டது என்று அம்மன்னனின் செப்பேடு ஒன்று கூறுகின்றது.

நாளந்தா நகரத்தில் இந்த மகா விகாரத்தைத் தவிர, வேறு மகா விகாரங்கள் இருந்தனவாகச் சில முத்திரைகள் தெரிவிக்கின்றன. இந்த முறையில் அந்நகரம் ஒரு பெரும் கல்வி நிலையமாக அக்காலத்தில் விளங்கி யிருந்தது என அறியலாம். இம்மகா விகாரங்கள் வெவ்வேறு மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்டன. சக்கிராதித்தன், ஹரிவர்மன், சிம்ஹபாலன், தர்மபாலன் முதலிய அரசர்கள் அவ்வாறு கல்விக் கழகங்களைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

மன்னர்கள் நன்கொடையாக அளித்த கிராமங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்களிலிருந்தே இந்த நாளந்தா கழகங்கள் நடத்தப்பட்டன. ஸ்ரீ ஹர்ஷ சக்கரவர்த்தி

இந்தப் பல்கலைக் கழகத்திற்கு 100 கிராமங்களை நன்கொடையாகத் தந்தான். இப் பல்கலைக் கழகம் விவசாயப் பண்ணைகளையும் பால் பண்ணைகளையும் நடத்திவந்தன. அவைகளே இக் கழக மக்களுக்கு உணவுப்பொருள்களைத் தந்தன.

இந்த விவரங்களை யுவான் சுவாங்கு விவரமாக எழுதியிருக்கிறார். கழகக் கிராமங்களிலிருந்து வண்டிகளில் நூற்றுக்கணக்கில் பேகுல் அளவு அரிசியும் நூற்றுக்கணக்கான கோட்டியளவு வெண்ணெயும் பாலும் கொண்டுவரப்பட்டதாம். ஒரு பேகுல் என்பது 133 ராத்தல் அல்லது 66½ சேர் அல்லது 1½ மணங்குக்குச் சமமாம். ஒரு கோட்டி என்பது 150 ராத்தல் அல்லது 75 சேர் அல்லது 2 மணங்குக்குச் சமமாம். இந்த வகையில் வந்த பொருள்கள் 400 மணங்கு என்று கொண்டால் அது 16000 மக்களுக்குப் போதும் எனலாம். அதாவது ஒரு ஆளுக்கு ஒரு நாளுக்கு ஒரு சேர் அரிசி வேண்டியிருக்கும் என்க. அரிசிமட்டும் அல்ல. நல்ல உடல் உறுதிபெறப் பாலும் நெய்யும் தரப்பட்டதாம். பல்கலைக் கழகத்தின் உயிர்நாடி அதன் நூலகமே. அது 'தர்ம கஞ்சம்' என்ற பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடம் மூன்று பிரிவுகளாகக் கட்டப்பட்டிருந்தது. அவற்றின் பெயர்கள் ரத்னசாகரம், ரத்னோத்தி, ரத்னரஞ்சகம் என்பவை. அவைகளில் இந்த சாரதையை 9 நிலைகள் (மாடிகள்) உயரம் கொண்டதாம்.

மேலேகூறிய விவரங்கள் வடநாட்டில் 14ம் நூற்றுண்டுகளுக்கு முன் இருந்த கல்வி நிலையைப் பற்றியதாகும். இந்த விவரங்கள் சீன யாத்திரிகர்களால் நமக்குக் கிடைத்தன. நமது மக்கள் இவ்விவரங்களை என் எழுதி வைக்கவில்லையோ அறியோம். ஆனால் அக்காலத்து அறிஞர்கள் ஆராய்ந்து எழுதி வைத்த நூல்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த விவரங்களைப்போலத் தமிழ் நாட்டில் இருந்த கழகங்களைப்பற்றி நமக்கு அறிவுறுத்துவார் இல்லை. அதே யுவான் சுவாங்கு என்ற சீன யாத்திரிகனே தென்னாட்டிற்கும் வந்துள்ளான். இங்கே காஞ்சியில் இருந்த கல்வி நிலையைப் பற்றிக் கூறியுள்ளான். பல்லவர் காலத்தில் கல்வி எவ்வாறு இருந்தது என்பதற்கு அவன் நூலே சான்று ஆகும். தமிழிலோ அதைப்பற்றி ஒன்றும் இல்லை. காஞ்சி, மல்லைப் பதிகளில் உள்ள கற்சிற்பங்களே அக்காலத்துக்

கல்வித் திட்டத்தைப் போதிக்கின்றன. நூல்களை ஏன் எழுதினர் இல்லையோ அறியோம். சமயப் பகைமையே இந்த வறிய நிலைக்குக் காரணமாக இருக்கமுடியுமா ?

சீன யாத்திரிகர் யுவான் சுவாங்கு நாளந்தாவில் படித்ததுமட்டுமன்றிப் பாரதநாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் தான் கண்டவைகளையெல்லாம் நன்கு எழுதி வைத்திருக்கிறான். முதலில் நடு பாரதத்தில் சிறப்புற்றிருந்த ஸ்ரீ ஹர்ஷனுடைய பேரரசைப் பார்த்துவிட்டுப் பிறகு மேற்கில் இருந்த சாளுக்கிய புலிகேசின் II பேரரசையும் பார்த்துவிட்டுத் தெற்கே வந்தான். பல்லவர்களின் தலைநகர் காஞ்சியைக் கண்டு மிக மகிழ்ந்து அதன் சிறப்புக்களை எழுதிவைத்திருக்கிறான். அவன் வந்தபோது நாட்டை ஆண்டு வந்த பேரரசன் பெயர்பெற்ற மகேந்திரவர்மனின் புதல்வனை நரசிம்மவர்மன். யுவான் சுவாங்கு காஞ்சி சேர்ந்த ஆண்டு கி. பி. 642 ஆகும். இந்த நாட்டைத் திராவிடம் என்று அவன் குறிப்பிட்டுள்ளான். காஞ்சியைப் பற்றி அடியிற் கண்டபடி எழுதியுள்ளான்.

" நிலம் செழிப்பானது ; நல்ல விளைவு தருவது ; நாடு வெப்பமானது ; மக்கள் அஞ்சாநெஞ்சினர் ; உண்மைக்கு உறைவிடம் ஆனவர் ; கற்றவர்களையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர். நாட்டில் 100 சங்கிராமங்கள் அல்லது பௌத்த மடங்கள் இருக்கின்றன. பதினாயிரம் பௌத்தத் துறவிகள் இருக்கின்றனர். சைவவைணவ, சமணக்கோயில்கள் 80 இருக்கின்றன. திகம்பர சமணர் பலர் திராவிட நாட்டில் இருக்கின்றனர். புத்தர் காஞ்சிக்கு வந்து பலரையும் பௌத்தராக்கியதாக இந் நாட்டில் கூறப்படுகிறது. அசோகன் திராவிட நாட்டில் பல் தூபிகளை அமைத்தான். அவற்றுள் சில காஞ்சியைச் சுற்றிலும் பழுதுற்ற நிலையில் இருக்கின்றன.

நாலந்தாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த தர்மபாலர் காஞ்சிப்பகுதியினர் என்று இங்கு கூறுகிறார்கள்.

நான் பாண்டிய நாட்டையும் பார்த்தேன். அங்கே சிலரே உண்மைப் பௌத்தர்கள். மக்கள் பொருள் ஈட்டுவதிலேயே கருத்தாயிருக்கிறார்கள். பாண்டி நாட்டில் பௌத்தம் அழிநிலையில் இருக்கிறது. பல இடங்களில் பௌத்த மடங்கள் இருந்த அறிகுறிகள் தென்படுகின்றன.

காஞ்சி ஆறு கல் சுற்றளவு உடையது. அது கடற்கரை நோக்கி இருபது கல் விரிந்துள்ள நகரம். இந்தக் கரையிலிருந்து கப்பல்கள் இலங்கைக்குப் போகின்றன.''

இந்த வகையில் சீன யாத்திரிகன் விட்டுப்போன குறிப்புக்களிலிருந்தே தமிழ் நாட்டின் விவரங்களை அறிவோம். நாலந்தாவிற்கும் காஞ்சிக்கும் கல்வித் தொடர்பு இருந்ததென அறிகிறோம். தருமபாலர் (அறவண அடிகள்) காஞ்சியைச் சேர்ந்தவர் நாளந்தாப் பல்கலைக் கழகத்தில் சிறந்த பேராசிரியராக இருந்தார் என்றால் அந்நாளிலும் தமிழ் மக்கள் கல்வியில் மிகச் சிறந்தவர்கள் என அறியலாம். தமிழ் மக்கள், சமயப் பற்று, பண்பாடு, போர்த் திறம், வாணிப மேம்பாடு முதலிய சிறந்த பண்புகளைச் சீன யாத்திரிகன் மெச்சியிருப்பதை நன்கு அறியலாம்.

சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் மடத்தின் திட்டத்தின்கீழ்த் திருவாசகமணியின் பேச்சுக்கள் : திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராகிய ஸ்ரீமத் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ள சித்தாந்தப் பிரசாரத் திட்டத்தின்படி காசிச் சர்வகலாசாலையிலும் அலகாபாத் சர்வகலாசாலையிலும் ஆண்டுக்கொரு புலவர் சென்று ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி மொத்தம் நான்கு சொற்பொழிவுகள் செய்துவருவது மரபு. வித்வான்களைத் தேர்ந்தெடுக்கும் ஸ்தாபனம் அண்ணாமலைச் சர்வகலாசாலையின் சிண்டிகேட் ஆகும்.

1957-வது ஆண்டின் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளவர் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல். ஆவர். இவர் செப்டம்பர் மாதம் 6-ந் தேதியன்று அலகாபாத் சர்வகலாசாலையிலும், 10, 11, 12 தேதிகளில் காசி இந்து சர்வகலாசாலையிலும் முறையே ஆங்கிலத்தில் நான்கு சித்தாந்தச் சொற்பொழிவாற்றி வந்துள்ளார். சம்ஸ்கிருத இலாகாத் தலைவர் ஸ்ரீ சட்டோபாத்யாயர், அலகாபாத் சொற்பொழிவிற்குத் தலைமை வகித்தவர் திருவாசகமணியின் அழகிய ஆங்கிலப் பேச்சைப் பாராட்டியதோடு தமது சர்வகலாசாலையிலும் இனி மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்யுமாறு திருப்பனந்தாள் மடாதிபதியைக் கேட்டுக்கொண்டார். கூட்டத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் வந்திருந்தனர்.

காசி இந்து சர்வகலாசாலைக் கூட்டங்கள் மூன்றுக்கும் முறையே தலைமை வகித்தவர்கள் காசி தத்துவ சாஸ்திரப் பகுதியின் தலைவர் திரு. பி. எல். ஆத்ரேயா, முன்னாள் தத்துவ சாஸ்திரப் பகுதித் தலைவர் ஆர். கே. மைத்ரா, சர்வ கலாசாலை உபஅத்யக்ஷகர் திரு. ஜா. அவர்கள். இவர்கள் மூவரும், கூட்டத்திற்கு நாள்தோறும் 151, 200, 250 என்று பெருகியவண்ணம் வந்து நின்றுகொண்டு கேட்ட மாணவ மாணவிகள் அனைவரும், திருவாசகமணியின் இணையற்ற ஆங்கிலச் சொற்பெருக்கை மிகமிகப் பாராட்டி மகிழ்ந்தனர். தமது எழுத்துப் பிரதியைப் படிக்காமல், சித்தாந்தத்தைப்பற்றிய முக்கியமான கொள்கைகளைத் திருவாசகமணி வாரி வாரி வீசினார். தமக்கே உரிய அற்புதமான ஆங்கில வாக்கியங்கள்மூலம், இடையிடையே இரட்டுறமொழிதல், நகைச்சுவை, நாடகபாணி, தமிழ்ப் பாட்டுகள் இவற்றையும் சந்தர்ப்பத்துக்கேற்ப நுழைத்துப் பேசிய திருவாசகமணி யவர்கள் வந்தவர்கள் பேச்சு முடியும்வரை தம்மை மறந்து கேட்டு மகிழச் செய்துவிட்டார். இதன் விளைவாக அவ்விரண்டு சர்வகலாசாலை மாணவர்களிடையேயும் சித்தாந்தத்தில் என்றும் காணாததோர் ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்பது எல்லோரும் கண்டதோர் விசேஷம். எல்லாவற்றையும் விட இவரது பேச்சுக்களுக்கு மெருகு தீட்டியதோர் அம்சமாவது இவர் ஆங்காங்கே வேதம், உபநிஷத் முதலியவற்றினின்றும் மேற்கோள்களை எடுத்துக்காட்டிச் சென்றமையாகும்.

அலகாபாத்தில் இவர் பேச்சின் தலைப்பு : " சித்தாந்தத்தில் கடவுள்." காசியில் பேசிய மூன்று பேச்சுக்களின் தலைப்பு : " சித்தாந்தத்தில் ஆன்மா " என்பவையாகும்.

திருப்பனந்தாள் மடத்தின் திட்டப்படி காசிச் சர்வகலாசாலையில் சித்தாந்தப் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் திரு. கே. சிவராமன் வந்தனோபசாரம் கூறினார்.

திருப்பனந்தாள் மடத்தின் காசி மடக் காரியஸ்தர் திரு. கலியாணசுந்தரம் பிள்ளையும், ஓய்வுபெற்ற டிபுடி கலெக்டர் சைவத்திரு. அரங்கசாமி முதலியார் தம்பதிகளும், ஓய்வுபெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்களும் இக் காசிக் கூட்டங்களுக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

திருநந்திதேவர் *

உலகத்திற் பல ஜீவன்கள் இருந்தபோதிலும் மனிதனை மட்டும் உயர்வாகக் கருதுவானேன்? மனிதனிடத்து ஓர் உயரிய குணம் இருக்கிறது. அதுவே தன்னைப்பற்றி ஆராயும் குணம். இவ்வித அறிவே உயர்ந்ததாகும். இதுவே ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவல்லது. மற்றவையெல்லாம் ஒரு சமயம் இருந்து மறு சமயம் மறைவன. அவை சிற்சில இடங்களுக்கோ சிற்சில சமயங்களுக்கு மட்டுமோ பயன் படுவன.

பின்னர் உடம்புக்கும் உயிருக்குமுள்ள சம்பந்தம் என்ன? உடல் வேறு; உயிர் வேறு. இந்நிலையை அறியக் கூடிய அறிவு இன்னும் நமக்கு வரவில்லை. தற்போதைய நம்முடைய அறிவு ஐந்தாகப் பிரிந்து நிற்கிறது. ஒன்று பலவாகப் பிரியும்போது பலம் குறைவது இயற்கை. பள்ளத்தின் வழி நீர் ஓடுவதுபோல ஐம்புலன்களின் வழி ஓடும் அறிவு கண்ணின் வழியே வெகுதூரம் செல்கிறது. மற்றவை நம்மிடமே உள்ளன. அவை சிறிது தூரத்தில் உள்ளவைகளையே அறியும் தகுதியுடையன.

கண்ணால் பார்க்கப்படுவதே உலகம். ஆங்கிலத்தில் பார்ப்பதற்கு லுக் (Look) என்று சொல்கிறோம். பார்ப்பது லோகம். இது லுக் என்பதன் தாதுவினடியாகப் பிறந்தது. இவ்வுலகத்துப் பொருள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. உலகத்தை நன்றாகப் பார்ப்பவனே தன்னைப் பார்க்கிறான். இல்லாதவன் தன்னைப் பார்ப்பது இல்லை. எதிரில் உள்ளதைமட்டும் அறிவது அறிவன்று. இவ்வித அறிவை யுடையவன் மனிதனாகக் கருதப்படமாட்டான். சாதாரண உலகில் பெரியோர் வைத்துவிட்டுப்போன

---

*இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச் சரத்தில் 25—4—37-ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. மே. த. கிருஷ்ணசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது. சித்தாந்தம் மலர் 10, இதழ் 5-ல் வெளியிடப்பட்டது.

சொத்தைக்கொண்டு காலந் தள்ளுபவனுக்கு மதிப்பு அதிகமா? அல்லது தானாகவே கஷ்டப்பட்டு நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்து அதனால் ஆம் பயனை அனுபவிப்பவனுக்கு மதிப்பு அதிகமா? பின்னவனுக்கே மதிப்பு அதிகம் என்று கூறுவதில் தடை சொல்வார் யார்? அதனால் உயர்ந்த பொருள்களைக் காண்பதே அறிவாகும். உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று அறிந்து கொள்வது மட்டும்தானா நம்மறிவுக்குத் தகுதி? நம்மறிவு அதையும் தாண்டிச் செல்லுதல் வேண்டும்.

உலகத்துக்கு வேறொரு பெயர் ஜகத் என்பது. ஜ — தோன்றுவதைக் காட்டும் ஓரெழுத்து. க — மறைவது. இவ்வுலகம் தோன்றி மறைவதென்பதை இப்பதம் குறிக்கிறது. தோன்றின பொருள் மறையும்; மறைந்த பொருள் தோன்றும். ஐந்து பூதங்களும் ஒரே காலத்தில் இருந்தது இல்லை. ஒவ்வொரு பூதத்துக்கும் சக்தி உண்டென்பதைத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆகாய சக்தியினால் இக்காலத்தில் எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றன. இவ்வைந்து பூதங்களும் தோன்றின காலத்தை அறிவது அரிது.

ஆகாசம், வாயு, தேயு, நீர், மண் என்ற முறைப்படியே இவை ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. இவை ஒன்று சேர்ந்ததே உலகம். சிலர் உலகம் இயற்கையென்பர். அன்னார் உலகத்தில் சூடு, குளிர் முதலிய இருவித குணங்களிருப்பதை அறியார். இரண்டுவித வேறுபட்ட குணங்களிருப்பின் அஃது இயற்கை உலகமாகுமா? இதனால் இவ்வுலகம் ஒரு காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதே. உலகம் உண்டானபோதே நாம் உண்டானோம். உலகத்திலுள்ள ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டிருத்தலால் இதை ஒரு சித் புருஷன் ஆட்டிவைத்தல் வேண்டும்.

இவ்வுலகத்தை ஈசாவாஸ்யம் என்றும் கூறலாம். ஈசனால் படைக்கப்பட்டதே ஈசாவாஸ்யம். அவனே தன்னால் படைக்கப்பட்ட உலகத்தைக் காப்பாற்றுபவன். உயிரற்ற பொருள்களைக் கூட்டிவைக்க ஒருவன் இருப்பதாலேயே அவை ஒன்று சேர்ந்து இயங்குகின்றன.

இவற்றைக் கூட்டுவிப்பவனை நீ எவ்வாறு உணர்வாய் என்ற கேள்வி எழலாம். நமக்குப் பக்கத்திலுள்ள காற்றை

நாம் காண்கிறேமா? காணுததால் காற்று இல்லையென்று கூறிவிட முடியுமா? சில சமயங்களில் அக்காற்று உஷ்ணமாய் இருப்பதையும் சில சமயங்களில் அது குளிர்ச்சியாயிருப்பதையும் உணர்கிறேம். அதனுல் காற்றென்பது உண்டென்று நிரூபிக்கிறேம். அதுபோலக் காணுததைக் கண்டு கூறுவோரே பெரியோர். இதை வேறேர் உதாரணத்தாலும் விளக்குவாம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு பையன் சேர்ந்து இரண்டு மாதங்களே ஆயினவென்று வைத்துக்கொள்வோம். வேறெருவன் இரண்டு வருஷங்களாக வாசிக்கிறுன். கல்வி உத்தியோகஸ்தர் வரும்போது 'ட' என்ற எழுத்தைக் கரும் பலகையில் எழுதி முன்னவனைக் கேட்டால் அவன் என்ன கூறுவான்? ஒரு கோடு என்பான். பின்னவனே 'ட.' என்ற ஒலியைக் குறிப்பதென்பான். இருவருக்கும் வித்தியாசம் என்ன? முன்னவன் கண்டதைக் கண்டவாறே கூறினுன். பின்னவனே கண்டதை மனத்தில் கொண்டு கண்ணுக்குக் காணப்படாத ஒன்றைக் கூறினுன். இவ்விருவரில் பின்னவனையே நாம் மெச்சுகிறேம். அப்படியே பெரியோரும்.

உயிரற்ற பொருள்கள் ஒன்று சேர்ந்தபோது மனிதனைக் காட்டிலும் அறிவுடையனவாகின்றன. உதாரணமாகக் கடிகாரத்தை எடுத்துக்கொள்வோம். அஃது உயிரற்ற பொருள். ஆயினும் மனிதன் அறிவுக்கு எட்டாதகால அளவை அது காட்டுகிறது. எனவே, அது மனிதனைக் காட்டிலும் அறிவுள்ளது. அச்சிறப்பு அதற்கு எவ்வாறு வந்தது? அதற்குள் ஒரு சித் புருஷன் இருந்து அதனை ஆட்டிவைப்பதனுலன்றே?

ஈஸ: என்ற பதத்துக்கே கடவுள் என்பது பொருள். இது காப்பாற்றுபவன் என்பதை உணர்த்துகிறது. காக்க உள்ளவனே கடவுள். அக்கடவுள் இரக்கம் அல்லது அன்பு மயமாகவே யிருக்கிறுர். இதனுலேயே திருநாவுக்கரசு சுவாமிகள் வேதாரண்யத் தேவாரத்தில்,

"இரக்கமொன்றிலீர்........"

என்று கடவுளைச் சுட்டுகிறுர். தயை இல்லாவிடில் ஆன்மாக்கள் ஜீவிக்கமாட்டா. அதனுல் கடவுளிடம் அன்பு உண்டு.

இதை நாம் காண்பதில்லை. இதற்கு உதாரணமாக எதைக் கூறுவது? முன்னர்க் கூறிய காற்றையே கூறலாம். இக் காலத்தில் காற்றுக்கு எடை உண்டு என்பது கண்டு பிடிக் கப்பட்டபோதிலும் நாம் அதைக் காண்கிறோமா? இல்லையே! கடவுள் சோதனைக்கு அகப்படாதவன். அதனா லேயே பெரியோர் அக்கடவுளைச் 'சோதனைக்ககப்படாச் சோதி! உன்னைச் சோதிக்கத் துணிந்தேன்' என்று கூறினர். உலகத்தைப் பார்க்கப் பார்க்கவே நமக்குக் கடவுள் நினைவு உண்டாகிறது.

பால் தயிராகத் திரிதல்போலப் பஞ்சபூதம் இத் தேக மாகத் திரிந்தது. பஞ்சபூத பரிணாமமே உலகம் என்பர். கரணம் தப்பினால் மரணம் உண்டாவது நிச்சயம். கரணத்தை நாம் இருதயம் (Heart) என்று கொள்ளலாம். பிரிந்துகிடக்கிற பஞ்சபூதங்களையும் கடவுள் அன்பால் ஒன்று சேர்த்துக் காக்கிறார். நாம் அவரிடம் அன்பு பாராட்டவில்லையேல் அவர் நம்மை வெறுப்பார். கடவு ளுக்கு எல்லாரிடத்தும் ஒரேவிதமான அன்பு உண்டு.

இக்காலத்தில் சிறிய உதவி செய்தவருக்கும் நாம் வந் தனம் (Thanks) செலுத்துகிறோம். கடவுள் அன்புக்கு நாம் கைம்மாறு காட்டுகிறோமா? ஈசன் நமக்கு இவ்வளவு பெரிய உலகத்தைக் கொடுத்தான். அதை நாம் மறந்து விட்டோம்.

" எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்த நன்றியை மறப் பது கொலை செய்தலுக்குச் சமமாகும்.

கடவுளிடத்து நாம் நன்றியை எவ்வாறு காட்டுதல் கூடும். அவனைப் பற்றிய நினைவு சதா நம்மிடம் இருத்தல் வேண்டும். ஆனால் அவனோ நம் எண்ணங்களுக்கு அப்பாற் பட்டவன். அதனாலேயே மணிவாசகனார் கடவுளை "மாற்றம் மனங் கழிய நின்ற மறையோனே" என்றார். தைத்திரி யோபநிஷத்தும் வாக்கு மனம் கடந்ததே கடவுள் என்று கூறுகிறது.

அப்படிப்பட்ட கடவுளைக் காணுதல் எவ்வாறு? உருகிய உள்ளத்துக்கு அவன் வெளிப்படுவான். 'உள்ளம் உருகின் உடனாவர்' என்பது திருவுந்தியார்.

'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'—பட்டினத்தார்.

'அழுதால் உன்னைப் பெறலாமே.........'—மணிவாசகனார்.

அவனைத் தவிர நம்மைக் காப்பார் ஒருவர் இல்லை. அதனால் அவனொருவனே நமக்குக் கதி.

இதுவரை கடவுளைப் பற்றியும், அக்கடவுளைப் பற்றிய நினைவே சதா நம்மிடம் ஏன் இருத்தல் வேண்டுமென்பது பற்றியும் பேசினோம். இனி நந்தி தேவரைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

நந்தி என்ற பதத்துக்கே சந்தோஷமா யிருப்பவன் என்பது பொருள். பிறரைச் சந்தோஷப்படுத்துபவனும் அவனே. நந்தியோடு 'ஆ' சேர்த்தால் ஆநந்தி என்றாகிறது. ஆனந்த மயமே நந்தி. சந்தோஷம் நிலைத்திருப்பதன்று; ஒரு காலத்தில் மறையக் கூடியது. ஆனால் ஆனந்தமோ என்றும் நிலைத்திருப்பது. நந்தி, நம்பன் முதலியன கடவுள் பெயர்கள்.

இனி நந்திக்குரிய வேறுபல பெயர்களைக் கவனிப் போம்.

தேவர் என்பதும் நந்தியின் பெயர். தேவர்க்குரிய சிறப்புக்கள் என்ன? அவர் அதிக வயதுள்ளவர்; அமுதம் சாப்பிட்டவர்; பொன்னுலகத்தில் இருப்பவர்; கிழத்தனம் இல்லாதவர்; காளைப் பருவம் உடையவர்; நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்.

"ஆதியிலும் திருநந்தி அனாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத் திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்குவாய் ஒருகோடி போதாவே"

என்று ஞானக் கூத்தர் நந்திபெருமான் பெருமையைக் கூறியிருக்கிறார்.

ஒருவர்க்கு ஆசை உண்டாயின் அன்பு குறையும்; அதனால் அறிவு குறையும். அதனால் பிறவாமலிருக்க ஆசைப் படுங்கள் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்'—திருக்குறள்

ஆசைகளைப் பூர்த்தி செய்தவர் திருநந்தி. 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.' பிறர்க்கு உபகரிப்பதே

செல்வர்க்கு அழகு. நந்தி ஆனந்தச் செல்வர். அவர் நமக்கு உதவி செய்யாமல் இரார். இதனாற்றான்,

"செம்பொரு ளாகமத் திறன் தெரித்து
நம்பவ மறுத்தகம் நந்தி வானவன்"

என்று கூறப்பட்டிருக்கிறது. தெரித்து என்பது என்னைத் தெரியும்படிச் செய்து என்ற பொருளில் வந்திருக்கிறது.

ஒருவன் படிக்குந்தொறும் படிக்குந்தொறும் அறியாமையே மிகும் என்று திருவள்ளுவர் திருக்குறளில் கூறியிருக்கிறார். அதனால் படிப்பதாலேயே நம் சந்தேகங்கள் தெளிவுரு. நாம் ஒரு குருவைக் கொள்ளுதல் வேண்டும். திருநந்திதேவரே நமக்கேற்ற குரு. குருவுக்கு மேகத்தை ஒப்பிடலாம். சமுத்திரத்திலுள்ளது உப்பு நீர். அது குடிக்க உதவாது; குளிக்க உதவாது. அதுபோலவே சாத்திரக்குப்பை. சாத்திரக்குப்பை நமக்கு உதவாது. ஆனல் மேகமாகிய குரு என்ன செய்கிறார். மேகம் சமுத்திர நீரை உட்கொண்டு நமக்குச் சுத்த நீரை அளிப்பதுபோலக் குரு சாத்திரக் குப்பைகளின் உட்பொருளைக்கொண்டு நமக்கு உபதேசமாக வழங்குகிறார். அதனால் கடவுள் குருவாக வந்த மூர்த்தமே திருநந்திதேவர்.

"அங்கணன் கைலை காக்கும் அகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லாம் முதல்குரு நாதன்ஆகி"

என்று நந்திதேவரைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இணைப்பை யறிந்தால் பிரவர்த்தியை விடுகிறோம். ஓடுகின்ற அறிவு பிரவர்த்தியின்பாற் பட்டது. அதைக் கட்டுப்படுத்தலே நிவர்த்தி மார்க்கமாகும். நாம் நிவர்த்தி மார்க்கத்தில் செல்ல எண்ணுகிறோம். இதைக் கற்றுக் கொடுப்பவர் கோயிலிலுள்ள நந்திதேவர். ஆகமம் இதையே கூறுகிறது. ஆகமம் என்பதற்கு வருகிறது என்பது பொருள். மந்திரியாக இருந்த மணிவாசகனார் பரமகுருவின் வரவை நோக்கி அமுதமை பெறுகிறோம்.

இனி நந்திக்குரிய குணங்கள் யாவை என்பதை ஆராய்வோம். அவர்க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நந்தியெம்பெருமானுக்கு நந்தியென்பது தீக்ஷாநாமம். நாமம் மட்டும் இருந்து பிரயோசனம் இல்லை. அதனாலேயே அவர்க்கு அதிகாரம் வழங்கப்பட்டது. பெயர் இருந்து

அதிகாரம் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லாமையைத் திருக்குறள் விளக்குகிறது. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்தமையைத் திருவையாற்றுப் புராணம்,

"வருநந்தி மிசைக்கொண்டு வானுலவுந் திரிபுரங்கள்
கருநந்தி விழநகைத்த கண்ணுதலோ னென்றுலகக்
குருநந்தி யையாறன் குலவுமுனி மைந்தனுக்குத்
திருநந்தி தேவனெனத் திருநாமஞ் சாற்றினனே"

என்ற செய்யுளில் கூறுகிறது.

நந்திதேவர்க்குரிய அங்கங்கள் என்ன? இதைத் திருவையாற்றுப் புராணம்,

"மற்றிணையி லாக்கயிலை மலைநாதன் நந்திக்கு
நெற்றியிற்கண் நாலுபுயம் நெருப்புருவம் பிறைகொண்முடி
சற்றுமொரு குறையில்லாச் சாரூபம் பணித்தருளிப்
பெற்றியினு லருட்சரிகைப் பிரம்புமருள் செய்தனனே"

என்று கூறுகிறது.

நெற்றிக்கண் ஆசையில்லாமையைக் காட்டுகிறது. ஆசையை உண்டாக்கவந்த மன்மதனை எரித்தது நெற்றிக் கண். நான்கு புயங்கள் சாதாரண மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன.

நெருப்பின் நிறம் தனியேயிருக்கும் தன்மையுடையதல்ல. சார்ந்ததன் நிறத்தையே அஃது உடையது. அதனால் நெருப்பின் நிறம் வெண்மை என்னலாம். நந்தியின் வடிவம் வெண்மை. இது நெருப்பைக் குறிக்கிறது. கடவுள் அழல்வடிவினன். அதனால் கடவுளின் அம்சமே திருநந்தி.

நந்திதேவர்க்குச் சந்திரனும் உண்டு. சந்திரன் இரவில் சஞ்சரிப்பவன். அதனால் அவன் தோஷசஞ்சாரி. தோஷத்தில் சஞ்சரித்து நன்மை உண்டாக்குபவன். இதுவே குருவின் நோக்கம்.

நந்திதேவர்க்கு அளித்திருப்பது சாரூப முத்தி. முத்தி மூன்று வகைப்படும்; பழிபடுமுத்தி, பதமுத்தி, பாமுத்தி. முத்தி அல்லாதது பழிபடுமுத்தி. படிப்படியாக வருவது பதமுத்தி. எல்லாவற்றையுங் கடந்தது பாமுத்தி. பாமுத்தியே சாரூபமுத்தி. கடவுளிடமிருந்து எல்லாப் பாக்கியமும் கொண்டவர் சாரூப முத்தியடைந்தவர். இஃது ஒரு குறைவுமில்லாதது. சிவபெருமான் உருத்திரரெல்லார்க்கும் சாரூப

முத்தி யளித்திருந்தபோதிலும் நந்தியெம்பெருமானுக்கு அளித்ததுபோல அதிகாரம் தரவில்லை. அதிகாரம் அடிக்கவும் அணைக்கவும் உபயோகப்படுகிறது.

திருநந்திதேவர்க்குப் பிரம்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதற்காக ? சந்நிதானத்தை மறைப்பவர்களை அடிப்பதற்காக. அடிபட்டவரே ஆண்டவனை நினைப்பர்.

நந்திதேவர் உடைவாளையும் உடையவர். இதுவும் அதிகாரத்துக்கு அறிகுறி.

நந்திதேவரின் வலது கையில் மழுவும் இடது கையில் மானும் உண்டு. இவ்விரண்டும் வேதத்தைக் குறிப்பன. பட்டினத்தார் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதில்,

" வேதம் மான்மறியே......"

என்று கூறியிருக்கிறார். வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிறார் என்பது வேதமாகிய பொருளைத் தாங்கியிருக்கிறார் என்று பொருள்படும். வலது கையிலுள்ள மழு வீரத்தைக் காட்டுவது; ஆண்மையை உணர்த்துவது. மழுவை விட்டதாக எந்தச் சரிதமும் கூறவில்லை. மழு சம்ஹரிக்கும் தன்மையுடையது. அதனால் கடவுள் சம்ஹார கர்த்தாவாகிறார். எல்லாவற்றையும் சம்ஹரிப்பவனே உண்டாக்கவல்லவன். இதுவே கடவுள் சக்தி. சம்ஹாரன் என்ற பதத்துக்கு ஒழுங்காக இழுத்துக்கொள்பவன் என்பது பொருள். சம்ஹாரம் ஒய்வு பெறுதல். இது கடவுளின் அன்பின்பாற்பட்டது. எல்லா ஜீவன்களையும் ஒரே காலத்தில் ஒய்வுபடுத்துதலே மகா சம்ஹாரம். இவ்வதிகாரம் திருநந்திதேவர்க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாட்சியாகப் பிரம்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநந்திதேவர் ஒரு சித்தனுமாவர். சித்தன் வாழ்வு பற்றித் திருவேரகத்தைப் பற்றிய திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கிறார். சித்திசெய்யத் தொடங்கியவன் ஞானியாகமாட்டான். நினைவு இல்லாமல் சித்தி கைவரப் பெற்றவரே சித்தர். திருவையாற்றுப் புராணம்,

" யோசனைகள் பன்னிரண்டா யிருமுள்ள திருமலையிற்
பேசரிய சாரூபம் பெற்றகண நாதருக்கும்
பாசமிலாச் சித்தருக்கும் பாரிடங்க ளானவர்க்கு
மாசின்மே லதிகார மையனீந் தருள்செய்தான் "

என்ற செய்யுளால் நந்தியெம்பெருமானுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டமை கூறப்பட்டிருக்கிறது.

இவ்வளவு அதிகாரத்தோடு கூடிய நந்திக்கு ஆலயத்தின் காவல் தரப்பட்டிருக்கிறது. இதை மேற்படி புராணம்,

" ஏழுமதில் புடைசூழ்ந்த விருநான்கு வாயிலுக்கும்
வாழியதன் றனைப்பணிய வருமடியார் யாவரையும்
சூழவரு காலங்க ளறிந்துவிடுர் தொல்பணிக்கு
மாழிசூழ் புவித்தன் ஆலயத்தினுங் காவல் கொடுத்தான் "

என்று கூறுகிறது.

இக்காவலின் திறத்தை மன்மதன் சரித்திரம் விளக்குகிறது. மன்மதன் சிவபெருமான்மீது பாணத்தை விடத் துணிந்தான். நந்தி 'உம்' எனவே அவன் பெருமூச்சு விட்டான். நந்தியின் காப்பைக் கண்டதும் அவன் பயம் கொண்டான். பெரிய புராணம்,

" நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்
நீறணி மேனியர் அனேகர்
பெற்றமேல் கொண்ட தம்பிரான் அடியார்
பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்
மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்
மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்
கற்றைவார் சடையான் அருளினல் பெற்றுன்
காப்பதக் கயிலைமால் வரைதான்."

என்பதால் நந்தி கோயில் காவல் பூண்டமை விளங்குகிறது.

ருத் என்றால் துக்கம் என்று பொருள். ரன் ஓட்டுகிறவன். அதனல் ருத்ரன் துன்பத்தை ஓட்டுபவன். "இடும்பை நோய் ஓட்டும் உருத்திரன்" என்று சிவஞான முனிவர் கூறுகிறார். இப்பெயரும் திருநந்திதேவர்க்குப் பொருத்தமாகும். எப்படி? ஒரு காலத்தில் தேவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானிடம் சூரபன்மனைப்பற்றி முறையிடச் சென்றனர். பிரமாவே முதலில் சென்றார். அவர் நந்தியை நோக்கி,

" நந்தியெம் போதுகேள் நங்கள்பால் துன்பெலாம்
சிந்தை செய்திடுதி "

என்று கூறினர். இக்கூற்றைக் கண்டு நந்திதேவர் பரிதாபப்

பட்டார். துன்பப்படுபவரைக் கண்டு பரிதாபப்படல் சான்ேறார் இயல்பு.

உடனே நந்திதேவர் உள்சென்று பரமனுடைய ஆக்ஞையைப் பெற்றுத் தேவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். இதனாலேயே நந்திதேவர்க்குத் தூயவன் என்ற பெயரும் உண்டாயிற்று. நந்திக்குச் சைலாதிபதி என்ற ஒரு பெயரும் உண்டு. அவர்க்குத் தண்டித்தற் பணியும் வழங் கப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பிரம்மா செய்த யாகம் ஒன்றுக்கு நந்தி தேவர் அனுப்பப்பட்டார். ஆங்குத் தக்கன் சிவபெருமானை இழித்துக்கூறினான். நந்தியெம்பெருமான் இருகாதுகளையும் பொத்திக்கொண்டு 'சிவ, சிவ' என்றார். இதுவே மந்திரம் சொல்லவேண்டிய முறை. நம்முடைய காதுக்கும் கேளாத படி நாம் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும். உடனே தக்கன் தலைபோகவென்றும், அவ்விடத்தில் ஆட்டுத்தலை உண்டாவதாக வென்றும் நந்திதேவர் சாபம் போட்டார். ஆட்டுத்தலை மற்றொருதரம் தூஷியாது என்பதனால் அவ்வாறு சபித்தார் போலும்.

காசியில் விஸ்வநாதருக்குத் துரோகம் செய்ய எண்ணிய வியாஸரைத் தண்டித்தவரும் திருநந்திதேவரே.

'எனைத்தானும் நல்லவைகேட்க அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்' என்ற திருக்குறள்படி உபதேச அளவே நமது குணமும் இருக்கும். அவ்வளவே பெருமையும்.

சனற்குமாரர் பிரமதேவருடைய புத்திரர்; முருகப் பெருமானுடைய சிஷ்யர்; என்றும் இளமையுடையவர்.

பரமேஸ்வரரிடத்து உபதேசம் பெற்றவர் அனந்த தேவர். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்தி தேவர்க்கும், நந்திதேவர் சனத்குமாரர்க்கும், சனத்குமாரர் சத்திய ஞானதரிசனிக்கும், அவர் மெய்கண்டாருக்கும் உபதேசித்தனர். இது பரம்பரையாக வந்த உபதேசம். உபதேசம் இருவகைப்படும்; ஒன்று நூல் வகையாக வருவது; மற்றொன்று பரம்பரை வழியாக வருவது.

"எந்தை சனற்குமரன் ஏத்த இயல்பாய் நந்தி உரைத் தருளும் ஞானநூல்" என்றார் பெரியாரும். ஆசாரிய முறையில் நமக்கு அனுக்கிரகம் பண்ணுகிறவர் திருநந்தி தேவரே.

சைவ சமய அடிப்படைக் கொள்கைகள்*

உலகம் : (நிலம், நீர், நெருப்பு, காற்று, வான்) ஐம் பெரும் பொருள்கள் கலந்த கலப்பு. அவற்றுள் நிலம் நீர் நெருப்பு கண்ணுக்குத் தோன்றுவன. காற்று கண்ணுக்குப் புலப்படாது. ஆனல் உணர்ச்சியால் அறியலாம். வான் கண்ணுக்கும் தோன்ருது; உணர்ச்சியாலும் அறியமுடியாது. அது வெறும் வெளி. அவ்வெளியிலேதான் காற்று நிலவுகின்றது. இவ்வைம்பெரும் பொருள்களே பஞ்சபூதம். கடல், மலை, தரை முதலியன உலகத்தின் பகுதியே.

நாம் வாழும் இம்மண்ணுலகம் உருண்டை வடிவமானது. இதுபோன்ற உலகங்கள் எத்தனையோ உண்டு. ஒளிப் பொருள்களாகிய ஞாயிறும் விண்மீன்களும் சந்திரன், செவ்வாய் முதலிய கோள்களும் கிரகங்களும் உருண்டை வடிவமானவையே. இவை ஐம்பொருள்களுள் ஒன்ருல் அல்லது பலவற்ருல் ஆனவை.

உயிர் : ஒரு பொருள். மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, மரஞ் செடிகொடி புல் பூண்டுகள் ஆகிய எல்லாம் உயிருள்ள பொருள்கள். உயிருள்ள பொருள்களில் மேலானவன் மனிதன். 'மனிதன்' என்ருல் மனித உடலும், அதனுள்ளிருக்கும் உயிரும் ஆம்; 'விலங்கு' என்ருல் அதன் உடலும் உயிரும் கருதப்படும். மற்ற உயிர்ப் பொருள்களும் இப்படியே. ஆதலின், உயிர் எந்த உடலை எடுக்கிறதோ அந்தப் பெயரால் கூறப்படுகின்றது.

உடம்பு : (தோல்...மூளை) தோல், தசை, இரத்தம், நரம்பு, எலும்பு, கொழுப்பு, மூளை) எழுவகைப் பொருள்களால் ஆக்கப்பட்டதால் உடம்பின் பெயர், யாக்கை. இவ்வேழு பொருளுக்குப் பெயர்—'சப்த தாதுக்கள்.' இப்பொருள்களை உண்டாக்குவது உணவே. உணவுப் பொருள்கள், பூமியின் ஆற்றலினுலும் வெப்பம் நீர் பிறவற்றின் துணையினுலும் விளைவன. ஆகவே உணவுப்பொருள்கள் ஐம்பூதங்களின் சாரம். இவ்வுணவுப் பொருள்களே மேல்

---

* திரிசிரபுரம் வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை எழுதிய சைவ சித்தாந்த சபைப் பொன் விழா வெளியீட்டை ஒருபுடை தழுவியது. —தி. கி. நா.

சொல்லிய எழுவகைப் பொருள்கள் ஆவதற்கு ஏற்ற வகையில் மாறுகின்றன. ஆகையால் உடம்பு, ஐம்பூதங்களின் (பரிணமம்) மாறுதலடைந்த நிலை உயிர் நீங்கிய உடம்பு, உயிர் இல்லாத பொருளே.

இறைவன் : உலகம், நிலம், காடு, மலை, நதி, கடல், வானம், நட்சத்திரங்கள் ஆகிய எண்ணற்ற வியக்கத்தக்க பொருள்கள் அடங்கியது. உடலோ கண், காது, கை, கால் முதலிய வியக்கத்தக்க உறுப்புக்கள் அடங்கியது. இவைகள் எல்லாம் உயிர் அற்ற பொருள்கள். ஆதலின் இவை தாமே உண்டாகாது. இவற்றை மனிதர் முதலிய உயிர்களால் உண்டாக்க இயலாது. ஆதலின் இவற்றை எல்லாம் பேரறிவு, பேராற்றல், பெருந்தன்மை உடைய பொருள் ஒன்று ஆக்கவேண்டும். அப்பொருளையே நாம் இறைவன், கடவுள் என்போம். அப்பொருளின் ஆற்றல் (சக்தி) எல்லாப் பொருள்களிலும் கலந்து தங்கியிருப்பது; எவ்வகையான ஆற்றலினும் மேலானது ; ஆகையால், அப்பொருள் இறைவன் ; [இறைமை—தங்குதல் ; மேன்மை] மனம் மொழி இவற்றைக் கடந்து, முழுதும் அறிதற்கு அரியது ; அதனால் அப்பொருள் கடவுள் [கடவுள்—கடத்தல்; இங்குக் கடந்திருத்தலையுடைய பொருளைக் குறித்தது.]

உலகத் தோற்றம் : **1.** மாயை : உலகம், உயிர்கள் வாழும் பயன் கருதியே படைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உலகத்தைப் படைப்பதற்கு ஒரு காரணப் பொருள் வேண்டும் ? காரணமின்றிக் காரியம் தோன்றுது. குடம் செய்ய முதலில் மண்வேண்டும் ; பின் தோல், சக்கரம் முதலிய கருவிகள் வேண்டும். இவை மட்டும் போதாது. இக்கருவிகளைக்கொண்டு குடத்தைச் செய்வதற்கு ஒருவன் வேண்டும். ஆதலின் குடம் உண்டாதற்கு மண்ணுகிய முதற் காரணமும், தோல், சக்கரம் முதலிய துணைக்காரணமும், குயவனுகிய நிமித்தகாரணமும் வேண்டும். முதற் காரணம் காரியமாக மாறுவது ; துணைக்காரணம் முதற் காரணம் காரியப்படுமளவும் துணையாக இருப்பது. நிமித்த காரணம் நிமித்தம் பற்றி முதற்காரணம் துணைக்காரணம். இவற்றைக்கொண்டு காரியத்தைச் செய்வது. குயவன், மண்ணுகிய முதற் காரணத்தினல் கோல், சக்கரம் முதலிய துணைக் கருவிகள் கொண்டு ஊதியம் பெறுதலாகிய நிமித்தம் பற்றிக் குட

மாகிய காரியத்தைச் செய்கிறான். [கருவி—காரணம். காரியம்—செயலின் பயன்.]

இதனை ஒப்ப இறைவன் மாயையினால் தன் சக்தியாகிய துணைக்கருவிகொண்டு பேர் இரக்கமாகிய நிமித்தம்பற்றி இவ்வுலகை ஆக்கினான். மண் இன்றிக் குடம் இல்லை ; அது போல் மாயை இன்றி உலகம் இல்லை. கோல், திகிரி முதலி யன இன்றிக் குடம் செய்யமுடியாது ; அதுபோல் இறை வனது சக்தியின்றி உலகம் படைக்கப்படவில்லை. ஊதியம் பெறும் கருத்துடைய நிமித்த காரணன் குயவன் இன்றிக் குடம் உண்டாகாது ; அப்படியே பேரிரக்கம் கொள்ளும் நிமித்த காரணராம் கடவுள் இன்றி உலகம் உண்டாகாது.

மாயை—கண்ணுக்குப் புலப்படும் உருவம் இல்லாத அருவப்பொருள். அருவப் பொருளிலிருந்து உருவப் பொருள் உண்டாகும். உருவம் அருவமாகும் ; அருவம் உருவமாகும். நீர்—உருவப்பொருள். அது ஆவியானால் அருவப்பொருளாகின்றது. அந்த ஆவியாகிய அருவப் பொருளே குளிர்ச்சியினால் நீர் என்னும் உருவப் பொருள் ஆகிறது. இறைவனது அருட்சக்தியினால், மாயையாம் அருவப் பொருளிலிருந்து உலகமாம் உருவப்பொருள் தோன்றியது. [மாயா—தோன்றி ஒடுங்குதற்குக் கருவி.]

2. ஆணவம் : இறைவன் உயிர்கள் வாழ்தற்பொருட்டு உலகை மாயைகொண்டு படைத்தான். உலகம் படைக்கப் படுதற்கு முன் உயிர்கள் மாயையாகிய அண்டத்தில் தம் செயல் இன்றி யாதும் அறியாது ஒடுங்கிக் கிடந்தன. அவ் வாறு அவற்றை ஒடுக்கிய பொருளே ஆணவம். [அணுத் தன்மையைச் செய்வது.] இது பேர் இருள் போன்றது. உலக இருள் தன்னைக் காட்டும் ; பிற பொருளை மறைக்கும். ஆனால் அருவப் பொருளாம் ஆணவ இருள், தன்னையும் காட்டாது பிற பொருளையும் மறைக்கும்.

3. கன்மம் : ஆணவத்தால் அழுந்திக் கிடந்த உயிர் கள், உலகில் வாழ முதன்முதல் உடல் எடுக்குங்கால், ஒரே தன்மை, ஒரே ஆற்றல், ஒரே வகையான அறிவு உடையன வாக எடுப்பதில்லை ; பல்வகை உடல், தன்மை, ஆற்றல், அறிவு உடையனவாய் உலகில் வந்து வாழ்கின்றன. பல வேறுவகையான பிறவிகளை உயிர்களை அடைவதற்குக்

காரணம், உயிர்கள் ஆணவத்தில் அழுந்திக் கிடக்குங்கால் பல வேறுபட்ட ஏற்றத்தாழ்வுள்ள ஆணவத் தொடர்பு உடையதாக இருந்திருத்தல் வேண்டும். அதனோடு இறைவன் அருள் தொடர்பும் உடையதாக இருந்திருக்கிறது. இவ்விருவகைத் தொடர்பால் உயிர்கள் அநாதியே நல்வினை தீவினை உடையவாய் இருக்கின்றன. இதுவே மூல கன்மம் [முதல்வினை]. இனிப் பிறவிதோறும் உயிர்களால் நல்வினை தீவினை செய்யப்படுகிறது. மூலகன்மம், ஒன்று உண்டு; இல்லை எனில் மாயையிற்கிடந்த உயிர்கள் முதன் முதலாக உடலெடுக்குங்கால் பலவேறு வகைப்பட்ட பிறப்புக்களாக அமைவதற்குக் காரணம் வேறு இல்லை. காரணம் இன்றி ஏற்றத்தாழ்வுகள் பலவகைப்பட்ட பிறப்புக்களை உயிர்களுக்கு இறைவன் உண்டாக்கமாட்டான். எனவே, ஆணவ இருளால் மறைப்புண்டு, செயலற்று, அறிவு விளங்காது மாயையிற் கிடந்த உயிர்களுக்கு பலவகைப் பிறப்புக்களுக்குக் காரணமான மூலகன்மம் உண்டு என்று அறிக. பிறவிதோறும் செய்யப்படும் நல்வினை தீவினைகள் உண்டு.

வினைப் பாகுபாடு: உயிர்கள் எடுக்கும் பிறவிக்கு அளவில்லை. எண்ணற்ற பிறவிகள் பிறந்து இறந்து உழலும் உயிர் அப்பிறவிகள்தோறும் செய்தவினைக் கூட்டம் மிகப் பெரியதாகும். உயிர்கள் முற்பிறவிகளில் செய்த வினைகளின் கூட்டம் சஞ்சித கன்மம்; எடுத்த பிறவிக்கு வித்தாக உள்ள வினை பிராரத்த கன்மம். இனி, எடுத்த பிறவியில் செய்யப்படுவதும், வினைக்கூட்டத்தோடு வந்து சேரக்கடவதுமாகிய வினை ஆகாமிய கன்மம். ஒரு மரத்தினின்று தோன்றும் பல விதைகள், தனித்தனி முளைத்து மிகப்பல விதைகளைத் தருகின்றன. இப்படிச் சேரும் விதைகளின் தொகுதி போன்றதே சஞ்சிதவினை. இச் சஞ்சிதவினைக் கூட்டத்தின் ஒரு பகுதியினால், பிறவி எடுக்கின்றோம். இங்ஙனம் எடுத்த பிறவிக்குக் காரணமாக உள்ளதே பிராரத்த வினை. எடுத்த பிறவியிலும் பற்பல வினைகள் சேர்கின்றன. அவ்வினைகளே ஆகாமியவினை.

முத்தொழில்: படைத்தல்: உண்டாக்குதல் (சிருஷ்டி). உலகத்துப் பொருள்கள் எல்லாம் தோன்றி, நின்று, அழியும் தன்மையன; பிறந்து சிலபல காலம் நிலைபெற்று இருந்து பின்பு அழியுந் தன்மையுடையன. உலகம், உயிர்

கள் வாழ்வதற்கு இடமாகப் படைக்கப்பட்டது. உயிர்களுக்கு உடம்பையும், கண் காது முதலிய கருவிகளையும், வாழ்தற்கு இடமாக உலகத்தையும், துய்க்கப் பல பொருள்களையும் இறைவன் அமைத்தான். பேரருளாளனும் பேராற்றலுடையவனும் கைம்மாறு கருதாதவனும் பரோபகாரியுமாகிய மருத்துவன் பிணியினால் பீடிக்கப்பட்டு வருந்திச் செயலற்றுக்கிடக்கும் நோயாளிகளைக் காணின் அவர்களின் நோயைத் தீர்க்க முற்படுதல் இயற்கை அன்றோ? அவ்வாறு முற்படுங்கால் நோயாளிகளின் நோய் அளவறிந்து, நோய்க்காரணம் அறிந்து, அவர்கள் கொள்ளத்தக்க உணவின் அளவு அறிந்து, மருந்தின் வகை அறிந்து, அவர்களுக்குச் செய்யத்தகும் வேறுபல உதவிகளையும் அறிந்து, அவரவர்களுக்கு ஏற்ற வண்ணம் படிப்படியாக அவர்கள் நோயைத் தீர்க்க முயலுவான்; ஆனால் மருத்துவன் நோயாளிகளின் நோய்க்குக் காரணமாகாது அவர்கள் நோய் நீக்கத்திற்குக் காரணம் ஆவான். அதுபோல ஆணவ இருளில் அழுந்தி அறிவு விளங்காது கன்மத்தால் பீடிக்கப்பட்டுச் செயலற்று மாயையிற் கிடந்து வருந்திய உயிர்களின் பெருந்துன்ப நிலையைக்கண்டு, பேரிரக்கம் கொண்ட இறைவன், அவைகள் ஆணவம் சிறிது சிறிதாக நீங்கப்பெற்று அறிவு வளர்ந்து உய்தற்பொருட்டு உடலும் கருவிகளும் உலகமும், அனுபவப் பொருள்களும் படைத்தான். இன்னும், நோய்க்கு மருத்துவன் காரணமாகாதவாறு போல உயிர்களின் நோயாகிய ஆணவ மாயை கன்மங்களுக்கு இறைவன் காரணமாகான்: நோய் நீக்கத்திற்கு மருத்துவன் காரணமாவதுபோல ஆணவ கன்ம மாயைகளின் நீக்கத்திற்கு இறைவன் காரணமாகின்றான். இங்ஙனமாக இறைவன் உயிர்களின் துன்பத்தைப் போக்குதற்கு உடல் கருவிகள், உலகம், உலகப்பொருள் [தனு, கரணம், புவனம், போகம்] இவற்றை ஆக்குதலே படைப்பு.

2. காத்தல்: (திதி) உலகம் உடல் முதலியவற்றைச் சிலபல காலம் நிலைபெறச் செய்தல். உலகத்தைப் படைத்து, அதில் உயிர்கள் பலவகை உடம்புகள் எடுக்குமாறு செய்த இறைவன், உயிர்களின் வினைகளுக்குத் தக்கவாறு பிறவிகளும் வாழ்நாளும் அளித்து, அவைகளை வாழச் செய்கின்றான். அப்படி வாழ்கின்ற உயிர்கள் மேலும் மேலும் வினை

களைச் செய்துகொண்டே இருக்கின்றன; வினைகளுக்குத் தக்கவாறு மீண்டும் பிறக்கின்றன; இப்படி பிறந்தும் இறந்தும் வருங்கால் அந்தந்தப் பிறப்பின் ஏற்றத் தாழ்வுக்கும் வினைவேறுபாட்டுக்கும் தக்கவாறு அறிவு விளக்கமும் பெறுகின்றன. இத்தகைய பிறவிகளில் உயர்ந்தவனான மனிதன் தனக்கு இறைவன் படைத்துக் கொடுத்த மிக வியக்கத்தக்க உடல் உறுப்புகளின் உதவிகொண்டு மற்றைய பிறவிகளில் உள்ள உயிர்களைக் காட்டிலும் மிகுந்த அறிவு விளக்கமும் ஆற்றலும் உடையவன் ஆகின்றான். இவற்றிற்கெல்லாம் காரணமாக இறைவன் உலகத்தையும் உடலையும் நிலைபெறச் செய்தலே காத்தல்.

3. அழித்தல்: (சம்மாரம்) உலகம் உடல் இவற்றை இல்லையாகச் செய்தல். இறைவன், தான் படைத்துக் காத்ததை ஏன் அழிக்கவேண்டும்? மிகுந்த நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிக்கு நோய் தீரும் பொருட்டு, மருத்துவன் நோயின் வன்மைமிகுதி யறிந்து வலிய மருந்தினைக் கொடுப்பான். அப்படி கொடுக்கும்பொழுது ஒரே முறையில் கொடான். சிறிது சிறிதுகாலம் இடையிட்டே கொடுப்பான். இங்ஙனம் கொடாவிடில் நோயாளி மருந்தின் வேகத்தைத் தாங்கான். அதுபோல உயிர்கள் ஆணவ நோயின் நீக்கத்திற்காகப் பலமுறை பிறந்து இருந்து இறந்து வருகின்றமையால் உண்டாகும் இளைப்பு நீங்குதற் பொருட்டுச் சிலகாலம் அவைகட்கு ஓய்வு கொடுக்கவேண்டும். அதன் பொருட்டே, உயிர்கட்காகப் படைக்கப்பட்டதும், மாயையின் காரியமாக இருப்பதும், கட்புலனாகவுள்ளதுமாகிய உலகத்தையும் உடலையும், அவற்றிற்குக் காரணமானதும் கட்புலனாகாததுமாகிய மாயையில் இறைவன் ஒடுக்குகின்றான். இதுவே அழித்தல். எனவே உயிர்கள் பிறந்திறந்துழல்வதால் உண்டாகும் இளைப்பு நீக்கத்தின் பொருட்டே அழித்தலாகிய தொழில், நிகழ்வதை அறிக. எனவே படைத்தல், காத்தல், அழித்தல் இறைவனது முத்தொழில்கள் ஆம்.

(தொடரும்)